# உதயன்


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 8 வெள்ளிக்கிழமை (24.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 302


### ஐ.நா. பொதுச் சபையில் மஹிந்த முழக்கம்

# வெளியார் திணிக்கும் தீர்வுகள் தோல்வி கண்டதே அனுபவம்



ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றும் ஜனாதிபதி

## உள்நாட்டில் உருவாக்கினாலேயே வெற்றி தரும்

நியூயோர்க், செப்ரெம்பர் 24

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வெளிச் சக்திகளால் திணிக்கப்படும் எந்த வகைத் தீர்வும் விரோதத்தைப் பெரிதாக்குவதுடன் முழுமையாகத் தோல்வி அடையும். அதுவே இதுவரை கண்ட வரலாறு. எந்தவொரு தீர்வும் உள்நாட்டில் இருந்து உருவாகி வந்தால் மட்டுமே வெற்றி பெறும்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் நேற்று உரையாற்றிய போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார். நாட்டில் நிலையான அமைதியை நிலைநாட்டுவதே தமது குறிக்கோள் என்றும் அவர் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான யுத்தத்தில் போர்ச் சட்டங்களை முழுதாகப் பின்பற்ற முடியாது

கொழும்பு, செப். 24

பயங்கரவாத அமைப்புகளுடனான யுத்தங்களின் போது போர்ச் சட்டங்களை முழுமையாகப் பின்பற்ற முடியாது. பயங்கரவாத அமைப்புகள் போர்ச் சட்டங்களை மதிக்காத காரணத்தால் அதற்கு எதிராகப் போராடும் இராணுவத்தினால் போர்ச் சட்டங்களைப் பாதுகாப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுகிறது • என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. சபைப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தின் (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் ஜனவரி மாதத்தில் தொடங்கும்

யாழ்ப்பாணம், செப். 24

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசு அமைத்துக் கொடுக்க உள்ள 50 ஆயிரம் வீடுகளுக்கான திட்டப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாக உள்ளன.

திட்டப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த இந்திய அதிகாரிகள் குழு இந்தத் தகவலைத் தெரிவித்தது.

வீடமைப்புத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக வந்திருந்த இந்தியக் குழுவிற்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதி அனுவ சிவஸ்ராஜா தலைமை தாங்கினார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த குழுவினர் நேற்றுக் காலை 8 மணிக்கு யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் போது வீட்டுத் திட்டம் தொடர்பான முதற் கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்திய அரசே வீடுகளை அமைத்துத் தரவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்களா அல்லது வீடமைப்பதற் கான நிதியை மட்டும் வழங்கும்படி கோருகிறார்களா என்பது தொடர்பாக குழுவினர் அரச அதிபரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மக்களின் விருப்பு மற்றும் பண்பாட்டிற்கு ஏற்ற விதத்தில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்தியக் குழுவினர் தன்னுடனான சந்திப்பில் இணக்கம் தெரிவித்தனர் அரச அதிபர் இமெல்டா சுகுமார் உதனுக்குத் தெரிவித்தார்.

வீடமைப்புத் திட்டப்பய (23ஆம் பக்கம் பார்க்க)

### விசாலமான வீடுகள் வேண்டும்

**யாழ். அரச அதிபர்**

சகல வசதிகளுடனும் கூடிய விசாலமான வீடு களை இந்திய அரசு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார்.

அரச செயலகத்தில் தன்னைச் சந்தித்துக் கலந்துரையாடிய இந்தியக் குழுவினரிடமே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் சொல்லொணாத்துயரை அனுபவித்துள்ளார்கள். போரினால் தமது வீடுகளை இழந்தவர்கள் (23ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

## உடுவில் மகளிர் கல்லூரி மாணவி யாழ். மாவட்டத்தில் இம்முறை முதலிடம்

யாழ்ப்பாணம், செப். 24

நேற்றுமுன்தினம் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த 118 மாணவர்களும் சென்.ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த 110 மாணவர்களும் சித்தி பெற்றுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சொல்ஹெய்ம் விரைவில் இலங்கைக்கு!

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானப் பிரதிநிதியும், சுற்றாடல் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் விரைவில் இலங்கை விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்திக் கொள்வது என்பது தொடர்பில் இந்த விஜயத்தின்போது (23ஆம் பக்கம் பார்க்க)

## எழிலனின் மனைவியின் சாட்சியம் இராணுவத்துக்குப் பெரும் அபகீர்த்தி

### இராணுவப் பேச்சாளர் கருத்து

கொழும்பு, செப்.24

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த இராணுவத்தினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலேயே எழிலனின் மனைவி ஆனந்தி சஷிதரனின் கருத்து அமைந்துள்ளது என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜென்ரல் உபய மெதவல தெரிவித்தார்.

எழிலன் உள்ளிட்ட ஏழு சிரேஷ்ட தமிழீழ (23ஆம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்தவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்

கொழும்பு, செப்.24

''நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்த பொதுமக்களுக்குப் பூரணமான பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். இராணுவத்தினரின் கெடுபிடிகளில் இருந்து அவர்களை பாதுகாக்கவேண்டும்'' - இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய மாவை சேனாதிராஜா கூறியவை வருமாறு:-

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்த பெற்றோர்கள், 'இராணுவத் தினரால் அழைத்துச் செல்லப்பட்ட மற்றும் சரண் அடைந்த தமது பிள்ளைகளுக்கு என்ன ஆனது ?' என்று கேட்டனர்.

தமது பிள்ளைகள் எவ்வாறு பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்பட்டனர் என்பதையும் தெரிவித்து தமது பிள்ளைகள் இன்னும் உயிருடன் இருக்கின்றனரா? என்பது கூடத் தெரியவில்லை என கண்ணீர் மல்க சாட்சியம் அளித்தனர்.

இவ்வாறு சாட்சியம் அளித்த பொது மக்கள் பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் கூறுகின்றனர். எனவே, இம்மக்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



ஜனாதிபதியும், அரசும் யுத்தம் முடிந்து விட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் அச்சமின்றி வாழ்கின்றனர் என்கின்றனர்.

அப்படியானால், மாதா மாதம் அவசரகாலச் (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கல்வியை சுமையாகக் கருதாது படித்ததே வெற்றிக்கான காரணம்

## யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி கருத்து



கல்வியை சுமையாகக் கருதாது விடா முயற்சியுடன் கற்றதே தனது வெற்றிக்குக் காரணம் என்று தெரிவித்தார் செல்வி பாலேந்திரன் தாரணி.

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப்பெற்று யாழ். மாவட்டத் தில் முதலிடம் பெற்றுள்ளார் அவர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த தாரணி உடுவில் மகளிர் கல்லூரியில் கல்விகற்று வருகிறார்.

மாதிரி வினாத்தாள்களை தொடர்ந்து அதிகளவில் பயிற்சி செய்ததும் தனது வெற்றிக்கானகார ணங்களில் முக்கியமானது என அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது :

காலை 5 மணிக்கு எழும்பிப் படிப்பேன். இரவு 9 மணிவரை மட்டும் படிப்பேன்.

நான் பெரும்பாலும் பயிற்சி வினாத்தாள்களைத் திரும்பத் திரும்ப பயிற்சி செய்வேன்.

பத்திரிகைகளில் வரும் பயிற்சி வினாக்கள் முக்கியமாக 'உதயன்' பத்திரிகையில் கல்விச்சுடர் பகுதியில் வெளிவரும் பயிற்சி வினாத்தாள் போன்றவற்றை நன்கு பயிற்சி செய்வேன்.

எனது படிப்புக்கு அப்பாவும் அம்மாவும் உறுதுணையாக இருந்தார்கள். ஒரு நாளும் படிக்கும்படி அவர்கள் என்மேல் அழுத்தத்தை திணித்ததில்லை. நானே விரும்பி ஆர்வத்துடன் படிப்பேன்.

எனது அப்பா சிற்ப வேலைகள், தச்சு வேலைகள் செய்பவர்.

சித்திரங்கள் வரைதல் மற்றும் கதைப் புத்தகங்களைப் படிப்பதே எனது பொழுது போக்கு. எனக்கு கற்பித்த உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி திலகவதி சண்முகம், கல்லூரி அதிபர் மற்றும் தனியார் கல்வி நிலையத்தில் நன்கு கற்பித்த அன்பழகன் ஆசிரியர் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து இந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே தாரணியின் அவா. (உ-16)

# புலமைப் பரிசிலில் சித்தி பெற்று பார்வையற்ற மாணவன் சாதனை



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சுன்னாகம் வாழ்வகத்தைச் சேர்ந்த பார்வையற்ற மாணவன் துரைராசா அருண்குமார் 163 புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

உடுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த இவர் வாழ்வகத்தில் தங்கியிருந்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்று வந்தார்.

நேற்று வெளியான பரீட்சை முடிவின் பிரகாரம் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்.

வாழ்வகத்தில் இருந்து தோற்றிய மற்றுமிரு மாணவர்களில் ஒருவர் 113 புள்ளிகளையும் மற்றவர் 72 புள்ளிகளையும் பெற்று சான்றிதழ் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர். (ஐ)

# அகதி முகாமுக்குள் முடங்கிய போதும் தளராத படிப்பே வெற்றியின் இரகசியம்

## முல்லைத்தீவு தரம் 5 மாணவன் சொல்கிறான்

'போர் எம்மை விரட்டி அகதிமுகாமுக்குள் முடக்கிய போதும் நான் மனம் தளராது படித்தேன். எனது பெற்றோர் எனக்கு உறுதுணையாக இருந்தனர். இதன் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல்தர மாணவனாக சித்தி பெற்றேன்- இவ்வாறு தெரிவித்தார் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்ற ஜெ.கிருசிகன்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்காலிக இணைப்பில் யாழ். ஆனைப்பந்தி மெதடிஷ்த மிஷன் பாடசாலையில் கல்வி பயிலும் ஜெ.கிருசிகன் 187 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் நிலையில் சித்தி பெற்றுள்ளார்.

தனது வெற்றி தொடர்பில் கிருசிகன் தெரிவித்ததாவது:

அப்பா ஓர் அரச ஊழியர். அம்மா வீட்டின் பொறுப்பாளி. நாங்கள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் வசித்து வந்தோம். போர் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவில் உள்ள அருணாசலம் முகாமில் தங்கியிருந்தோம். புதுக்குடியிருப்பில் இருந்த போது தரம் 1 தொடக்கம் 3 வரை ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வி பயின்றேன்.

இடப்பெயர்வு ஏற்பட்டதால் சிலகாலம் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. முகாமில் தான் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் படிக்கவேண்டி இருந்தது. எப்போதும் பெற்றோர் எனக்குத் துணையாக இருந்தனர். முகாமில் இருந்து நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு கடந்த வருடம் 11 ஆம் மாதம் வந்தோம்.

யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் என்னைச்சேர்த்துப் படிப்பிப்பதற்கு எனது பெற்றோர் முயன்றும் அவை பலனளிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆனைப்பந்தி, மெதடிஷ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. நான் தரம் 4, 5 ஐ இங்கு கற்றேன்.



அப்பா அரச ஊழியர். அவர் கண்டாவளையில் வேலை செய்கிறார். அம்மா தான் என்னைப் பாடசாலைக்குக் கூட்டிச் சென்று மீளவும் அழைத்து வருவார். எனது பெற்றோருக்கும் நான் பரீட்சையில் சித்தி பெறவேண்டும் என்ற ஆவல் இருந்தது. எல்லாவற்றையும் நான் நிறைவேற்றி இருக்கிறேன். இந்தச்சந்தர்ப் பத்தில் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக் கும், என்னை வழிப்படுத்திய எனது தாய் தந்தைக்கும் நான் நன்றி கூறுகின்றேன் - என்றார் கிருசிகன். (10)


## ஆங்கில வகுப்புக்கள் English Classes

"THE ASSOCIATION OF BUSINESS EXECUTIVES (U.K)," DIPLOMA IN BUSINESS ADMINISTRATION தகைமை உடைய ஆங்கிலத்தில் சரளமாக எழுதவும், உரையாடவும், வியாபாரத் தொடர்பாடல் நுட்பங்கள் (BUSINESS COMMUNICATION & PRESENTATION TECHNIQUES) உடையவரும், கொழும்பில் 10 வருடங்களுக்கு மேல் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.

**GENERAL ENGLISH LEADING TO SPOKEN**

அடிப்படை இலக்கணம், பிழையற்ற சொற்கள், பிழையற்ற வசனங்கள், வாசித்து கிரகித்தல் (READ & COMPREHEND), அடிப்படையில் இருந்து வாசித்து கதைத்து சம்பாசனை செய்யக் கூடியதாகக் கற்பிக்கப்படும்.

**BUSINESS ENGLISH, COMMUNICATION & PRESENTATION**

ஏற்கனவே சராசரியான ஆங்கில அறிவு உடையோருக்கும், அந்த ஆங்கில அறிவை தொழில் ரீதியாக உபயோகிப்போருக்கும், அதனை மேலும் மெருகூட்ட ( TO ENHANCE, IMPROVE & DEVELOP) எண்ணியுள்ளோருக்கும் அரச, தனியார், வங்கிகள், அரசுசார்பற்ற பல் தேசிய நிறுவனங்களில் தொழில் புரிவோர், எதிர்காலத்தில் இத்துறையில் பிரவேசிக்க உள்ளோருக்கும் கற்பிக்கப்படும்.

**இக்கற்கை நெறியின் சிறப்பம்சங்கள்**

❖மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கபட்டுள்ளது.
❖பாடவேளைகள் 90நிமிடங்கள் மட்டுமே. (1.30hrs)
❖மாணவர், மாணவியர் தனிப்பிரிவினர்
❖தொழிலுக்குச் செல்பவர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் மட்டும்.
❖ஒவ்வொரு மாத முடிவிலும் கணிப்பீடுகள், கலந்துரையாடல்களுடன் கூடிய பூரண விளக்கங்கள்.
❖நியாயமான மாதாந்தக் கட்டணமுறை

பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது - வகுப்புகள் அனைத்தும் 01.10.2010 இல் ஆரம்பமாகின்றன.

**UNI-ICT CAMPUS**

83, Palaly Road, Kantharmadam, Jaffna. Jaffna Road, Manipay.

DIAL:- 0776110802





# ஆஸ்திரேலியா செல்லும் கனவிலிருந்த ஈழத்தவர்57 பேர் தமிழகத்தில் கைது

உதகை, செப். 24

ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்கின்றனர் எனக்கூறி ஒருமாத காலமாக அலைக்கழிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் 57 பேர் உதகையில் பிடிபட்டனர்.

சென்னை புழல் முகாமிலிருந்த 15 இலங்கை அகதிகளுடன், தம்மம்பட்டி, கும்மிடிப்பூண்டி, சேலம் போன்ற பகுதிகளில் உறவினர்களுடன் வசித்து வந்த 42 பேரும் சேர்ந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல திட்டமிட்டனர். இவர்களில் 11 பேர் பெண்கள், 11 பேர் குழந்தைகள். இதற்காக ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபா வரை கட்டணமாகச் செலுத்தியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் நாளை முடிவு செய்தவுடன் தான் சொல்லும் இடத்திற்கு வந்து சேர வேண்டும் என பணத்தைப் பெற்ற நபர்தெரிவித்திருந்தாராம்.

அதனால், அகதிகள் 57 பேரும் கடந்த ஒரு மாதமாக குறித்த நபரின் அறிவுறுத்தலின்படி 3 வாகனங்களில் திருச்செந்தூர், குற்றாலம், பழனி, வேளாங்கண்ணி போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலா சென்றுவிட்டு நீலகிரிக்கு வந்தனர். மசினகுடிப் பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு தங்கியிருந்த அவர்கள் புதன்கிழமை அதிகாலையில் வேறு பகுதிக்குச் செல்லப் புறப்பட்டனர்.

ஆனால், நீலகிரி மாவட்டத்தில் முதுமலை புலிகள் காப்பகப் பகுதி வழியாக இரவு 9 மணிமுதல் காலை 6 மணிவரை வாகனங்கள் செல்லத் தடை இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை. சோதனைச் சாவடியில் நிறுத்தி விசாரித்த போது, புழல் முகாமிலிருந்து வந்தனர் எனக் கூறினர்.

அவர்களின் பேச்சு வித்தியாசமாக இருந்ததால் மசினகுடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அனைவரும், அங்கிருந்து மாவனல்லாவில் உள்ள அரச உறைவிடப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் மேற்கண்ட தகவல்கள் தெரியவந்துள்ளன.


**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பம் ஒன்றுக்கு இரண்டுபேர் தங்க வசதியுடைய வீடு வாடகைக்குத் தேவை. நாச்சிமார் கோயிலடி, கொக்குவில், குளப்பிட்டி, கோண்டாவில், இணுவில் பகுதிகள் விரும்பத்தக்கது.தொ.பே: 0716182182

**வீடு விற்பனைக்கு**

தட்டாரகடவை, அளவெட்டி வடக்கில் 2 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0722226374, 0772487653

**வீடு விற்பனைக்கு**

இல.31, சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் உள்ள 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. (மாநகர சபை எல்லைக்குட்பட்டது)
தொடர்புகளுக்கு : 0777396430


## இடைக்காடு ம. வி.யில் பரிசளிப்பு நிகழ்வு

கோப்பாய், செப். 24

இடைக்காடு மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை முதல்வர் அ. அருந்தவநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக விலங்கியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பெரியதம்பி வினோபாலா, சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் என். சுவாமிநாதன், கௌரவ விருந்தினராக மருத்துவர் செல்வி சரஸ்வதி நமசிவாயம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-72)

## பனடோலுக்குத் தட்டுப்பாடு

தென்மராட்சி,செப். 24

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பனடோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் வெளிக் கடைகளில் வாங்கிப் பயன்படுத்து மாறு வைத்தியர்க ளினால் அறிவுறுத் தப்படுவதாக நோயாளர்கள் தெரிவித்தனர். (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐ.தே.கட்சியின் உத்தேச பேரணி

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டவர் சரத் பொன்சேகா. அதில் வெற்றி அடையவில்லை. பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னர் அரசாங்கம் இராணுவ நீதிமன்றங்களை ஏற்படுத்தி அவர் மீது இரண்டு வழக்குகளைத் தொடர்ந்தது.

முதலாவது இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதால், அவர் தமது இராணுவப் பதவிகளில் பெற்றுக்கொண்ட பதக்கங்களையும் ஜெனரல் என்ற பதவியையும் இழந்தார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த வேளை மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தினால் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில், பொன்சேகாவுக்கு இரண்டு வருடங்களுக்கு மேலான சிறைத்தண்டனை கிடைக்கும். அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழப்பார்; கூடவும் சிவில் உரிமையை ஏழு வருடங்களுக்கு இழந்து விடுவார். இந்தக் காலத்தில் அவர் தேர்தல் எதிலும் போட்டியிட முடியாது.

இத்தகைய பின்னணியில், இராணுவ நீதிமன்றம் பொன்சேகாவுக்கு வழங்கிய தண்டனைகளுக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்தால், அரசுக்கு எதிராக மாபெரும் மக்கள் பேரணி ஒன்றை நடத்தப்போவதாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. தமது கட்சி நடத்த முடிவு செய்துள்ள மக்கள் பேரணிக்குத் தாமே தலைமைவகிக்க உள்ளார் எனவும், அதற்கு அரசு தடை விதித்தால் சிறை செல்வதற்குத் தாம் தயார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்கட்சி என்று ஐக்கிய தேசியக் கட்சி பெயருக்கு இருந்தாலும் அது பலமற்ற ஒன்றாக மாறியிருப்பது வெளிப்படையானது; நிதர்சனமானது. 18ஆவது திருத்தச் சட்டத்துக்கு அந்தக் கட்சியைச் சேர்ந்த 07 பேர் அரசுத் தரப்புக்குத் தாவி ஆதரவாக வாக்களித்தனர். எஞ்சியவர்களில் 25 பேர் தாம் சுயேச்சைக் குழுவாக இயங்கப் போகின்றனர் என அறிவித்திருக்கிறார்கள்.

இதனால் பிரதான எதிர்கட்சி பலவீனமடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் சஜித், கட்சியின் தலைமைப் பதவியில் கண் வைத்திருப்பதால் உட்கட்சிப் பூசல்கள் நிரம்பி வழிகின்றன. குறிப்பாக ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவம் பலவீனம் அடைந்திருக்கிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் ரணில் விக்கிரமசிங்கா தமது தலைமைத்துவத்தைத் தக்க வைக்க பொன்சேகா விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளார் என்பதே பொதுவான கருத்தாகும்.

ஐ.தே.கவின் உறுப்பினர்கள் மத்தியிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் தமக்குத் தோன்றியுள்ள எதிர்ப்பைச் சமாளிக்கவே ரணில் விக்கிரமசிங்கா மக்கள் போராட்டம் என்று கூறுகிறார் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார்.

எப்படியோ -

சென்ற மாதம் நாடாளுமன்றத்தில் அமோகமாக நிறைவேற்றப்பட்ட 18ஆவது சட்டத்திருத்தம் வழங்கும், தலைகால் விளங்காத அதிகாரங்களைக் கொண்டுள்ள அரசாங்கத்துடன் முட்டிமோத ரணில் செய்துள்ள முடிவு, அரசாங்கம் அது விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறது என்பதனை மக்கள் செயலளவில் அறிந்து கொள்ள ஓர் அமிலச் சோதனையாக இருக்கப்போகிறது.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளது. தலைநகர் கொழும்பிலோ அல்லது வேறு எந்தப் பகுதியிலோ ஐக்கிய தேசியக் கட்சி, பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி மக்கள் பேரணியை நடத்தக்கூடும். அது நாட்டில் அமைதி இன்மையை உண்டாக்கும், சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் என்ற காரணத்தைக் காட்டி அரசு உத்தேச பேரணியை தடைசெய்ய வாய்ப்பு உண்டு. மக்கள் சார்பில் நடத்தப்படுவதாகக் கூறப்பட்டாலும் அது குழப்பத்தையும் மோதல்களையும் உண்டாக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் என்று தெரிவித்து குறிப்பிட்ட பிரதேசத்தில் ஊரடங்குச் சட்ட விதிகளை நடைமுறையாக்கலாம். அதனை மீறி பேரணி நடத்தப்பட்டால் அதில் ஈடுபடுவோர் கைது செய்யப்படலாம்.

இத்தகைய ஓர் நிலைமை உருவாகும் பட்சத்தில், எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப் படுவதாக ஐ.தே.கட்சி தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படும்.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் முடக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்று கூறி, அதன் போர்வையில் அரசு தனது அதிகாரத் தனத்தை மிகுந்த வலுவுடன் நடத்திக்காட்டும். எதுவோ, ஜனநாயகமும் மக்கள் உரிமைகளும் காற்றில் பறக்கும். அதர்மம் தலைதூக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# மல்வத்த - அஸ்கிரிய பீடாதிபதிகள் பொன்சேகாவுக்காக அரசுடன் பேசுவர்

## அனோமா தலைமையிலான குழுவிடம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

முன்னாள் ராணுவ தளபதி சரத் பொன்சேகாவை துன்புறுத்த வேண்டாமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தாம் கேட்டுக்கொள்ள விருப்பதாக அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விரு மாநாயக்கர்களையும் ஜனநாயக தேசிய கூட்டணியின் உறுப்பினர்கள் குழுவொன்று திருமதி அனோமா பொன்சேகா தலைமையில் அண்மையில் சந்தித்து விடுத்த கோரிக்கையின் போதே அவர்கள் இவ்வித கருத்தை வெளியிட்டுள்ளனர்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அதிவணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் அனோமா தலமையிலான குழுவினருக்கு ஆறுதல் தெரிவித்தபோது ஏனைய பீடங்களின் தலைவர்களோடும் இது தொடர்பாக ஆலோசனைகள் நடத்துவார் என்றும் அதன் மீது ஒரு முடிவு எடுப்பார் என்றும் தெரிவித்தார். குழுவில் விஜிதஹேரத் மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகித்தனர். இதே வித கருத்தை அஸ்கிரிய பீடத்தின் மாகாநயக்கர் அதிவண.உடுகம சிறிபுத்தராகித்த தேரரும் தெரிவித்துள்ளார்.

அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளின் மீது பொன்சேகா எம்.பி. துன்புறுத்தப்படுவதை நிறுத்தும்படியாக மகாநாயக்கர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விருப்பதாக பிரான் அல்லஸ் எம்.பி. தெரிவித்தார்.

முன்னாள் ராணுவ தளபதியின் எல்லா வித பட்டங்களும் பதக்கங்களும் பறிக்கப்பட்டுவிட்டமை தெரிந்ததே. (ப)

## உலக இளையோர் மற்றும் மாணவர்விழாவில் இலங்கைப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவர்

### உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தகவல்

எதிர்வரும் டிசெம்பர் மாதம் தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ள ''உலக இளையோர் மற்றும் மாணவர் விழா'' தொடர்பாக இலங்கையின் இளையோர் மற்றும் மாணவர் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை அனுப்பி வைக்கவுள்ளதாக இந்த விழாவுக்கான இலங்கையின் தேசிய தயார்படுத்தல் குழுவின் தலைவரும் உயர் கல்வியமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

''உலக சமாதானம், ஒத்துழைப்பு மற்றும் சமுதாய மாற்றம் தொடர்பாக மேலாதிக்க வாதத்தைத் தோற்கடிப்போம்'' என்ற தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் டிசெம்பர் 13 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் இளையோர் மற்றும் மாணவர்விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

உலக ஜனநாயகவாத இளையோர் சம்மேளனம், உலகில் பல்வேறு நாடுகளிலும் செயற்படும் இளையோர் மற்றும் மாணவர் அமைப்புக்களுடன் இணைந்து உலக இளையோர் மற்றும் மாணவர் விழாக்களை நடத்திவருகின்றது. இந்தச் சம்மேளனத்தில் இலங்கையின் 19 இளைஞர்கள் மற்றும் மாணவர் சங்கங்கள் என்பனவும் அங்கம் வகித்து வருகின்றன எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். (ற-22)

## சமாதானப் பேரணி

வலி.வடக்கு, செப். 24

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு உடுவில் பிரதேச செயலக சிறுவர் பகுதியின் ஆதரவுடன் ஏழாலை ஸ்ரீ முருகன் சிறுவர் கழகம் நடத்தும் 'சிறுவர் உலகம் ஒளிபெற அனைத்துக் கரங்களையும் ஒன்றிணைப்போம்' என்னும் சிறுவர் சமாதானப் பேரணி நாளை சனிக்கிழமை பகல் 9 மணிக்கு ஏழாலை தெற்கு கரோப்பிய மண்டபத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. (த-86)

## கைதடி நவீல்ட் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 24

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் வி.மகேந்திரன் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மத்தியஸ்தர் சபையின் தலைவரும், கல்விப் பணிப்பாளருமான எச்.பி.என். லக்ஸ்மன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராகப் பொறியியலாளர் நிர்வாக சபையின் இயக்குநர் லகிதா மென்டிஸ் கலந்து கொள்வார். (த-ற)

## முறிகண்டி பிள்ளையார் கோயில் விவகாரம்; ஆய்வுக்கு உதவ அரச சட்டத்தரணி இணக்கம்

கொழும்பு, செப். 24

முறிகண்டி பிள்ளையார் கோயிலின் ஒருபகுதியில் கட்டடம் கட்டப்படுகின்றதா, அந்தக் குறிப்பிட்ட பகுதி இக்கோயிலுக்குரிய பகுதிதானா என்பது குறித்து ஆய்வு செய்வதற்கு அனுசரணை வழங்குவதாகவும் அதனை உறுதிப்படுத்த உதவுவதாகவும் அரச சட்டத்தரணி ராஜிவ் குணதிலக்க உயர் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துகொண்ட பொழுது வாக்களித்தார்.

முறிகண்டி பிள்ளையார் கோயில் மீண்டும் அதன் பாரம்பரிய தர்மகர்த்தாக்களிடம் கையளிக்கப்படவேண்டும் எனக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு அண்மையில் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சிரேஷ்ட அரசு தரப்பு சட்டத்தரணி அங்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்ட கோயிலின் வளாகத்தில் நிர்மாணிக்கப்படுவதாகக் கூறப்படும் கட்டடம் முதலாவது பிரதிவாதியான பிரதம மந்திரியும் பௌத்த விவகாரங்கள் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ணவால் அல்லது இரண்டாவது பிரதிவாதியான இந்து கலாசார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்றார்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், மோகன்பாலேந்திராவின் அனுசரணையுடன் தோன்றியிருந்தார். சிரேஷ்ட அரச சட்டத்தரணியின் முயற்சிக்களுக்கு தாங்கள் ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்தார்.

நீதியரசர்கள் ஷிராணி திலக்கவர்த்தன, கே.சிறிபவன் மற்றும் சந்திரா ஏக்கநாயக்க ஆகியவர்களின் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் போது வழக்கை ஒக்ரோபர் 5 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்வதென அறிவிக்கப்பட்டது.

மனுதாரரான ஜி.மணிவண்ணன் என்பவர் தமது கோயிலும் அதன் சுற்றாடலும் மீளவும் வர்த்தக செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றனவென்றும், ஏற்கனவே புலிகளால் செய்யப்பட்டது போன்று கோயிலின் புனிதம் கெட்டுவிடக்கூடிய நிலைமை ஏற்படலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

கோயிலின் ஆரம்பகாலத்திலிருந்து தனதும் 12 ஆவது பிரதிவாதியினதும் மூதாதையர்கள் கோயிலின் அருகாமையிலேயே குடியிருந்து வருகிறார்கள் என்றும் தமது மனுவில் அவர் தெரிவித்திருப்பதுடன் 1990 ஆம் ஆண்டு புலிகள் பலவந்தமாக கோயிலை தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டார்கள் என்றும் அதனால் தாங்கள் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றிருந்தார்கள் என்றும் தெரிவித்திருந்தார். (ப)

## ஜனாதிபதியின் பொது மன்னிப்புக் கிடைத்தும் இன்னமும் சிறைகளில் வாழும் வயோதிபக் கைதிகள்

கைதிகள் தினத்தை முன்னிட்டு 70 வயதைக் கடந்த அனைத்து சிறைக் கைதிகளையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் 70 வயதான 18 கைதிகள் இன்னமும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் ''ஓ'' பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள் அனைவரும் 70 வயதைக் கடந்தவர்கள் எனவும், சிறைத் தண்டனைகளுக்கு மேலதிகமாக அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகைகளைச் செலுத்தாததாலேயே அவர்கள் விடுவிக்கப்படாமல் தொடர்ந்தும் சிறைத்தண்டனையை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உள்ளிட்ட வயதை உறுதிப்படுத்தக்கூடிய எந்தவொரு ஆவணமும் இல்லாததால் 80 வயதுடைய கைதியொருவரும் விடுவிக்கப்படாமல் உள்ளார் எனவும் தெரியவருகிறது.

இந்தக் கைதி, 1952 ஆம் ஆண்டிலிருந்தே திருட்டுக் குற்றங்களுக்காக 26 தடவைகள் இவ்விதம் சிறைத் தண்டனைகளுக்கு உள்ளாகி வந்துள்ளதாகவும் இறுதியாக கடந்த ஆண்டிலும் திருட்டுக் குற்றத்துக்காக சிறைத் தண்டனையை இவர் அனுபவித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் 70 வயதைக் கடந்த சிறைக் கைதிகளை விடுதலை செய்வது சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் கடிதத்தில் காணப்படும் சிக்கலான நிலைகள் தொடர்பாகச் சிறைச்சாலை நிர்வாகம் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் ஆலோசனையைக் கோரியுள்ளதாவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-ற-22)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 09 | 25.09.2010 சனிக்கிழமை |
| திதி: | : துதியை பி.ப.06.09 வரை |
| நட்சத்திரம் | : ரேவதி பி.ப. 02.30 வரை |
| சுபநேரம் | : 03.02-04.32 வரை |
| ராகுகாலம் | : 09.02-10.32 வரை |

## சொல்ஹெய்ம் - வித்தியாதரன் சந்திப்பு ஈழத்தமிழர் எதிர்காலம் குறித்துப் பேச்சு



கொழும்பு, செப்.24

நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சரும், இலங்கையில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளின்போது அனுசரணையாளராகக் கடமையாற்றியவருமான எரிக் சொல்ஹெய்மை இலங்கையின் மூத்த தமிழ் ஊடகவிலாளர் ந.வித்தியாதரன் கடந்த 17 ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள், தமிழர் தரப்பின் அரசியல் எதிர்காலம், யுத்தத்தின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் நகர்வுகள், வியூகங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதிநேர ஆசிரியர்கள் தேவை

பரதநாட்டியம், சங்கீதம், மிருதங்கம், வயலின், கிற்றார் போன்றவை கற்பிக்கப் பகுதிநேர ஆசிரியர்கள் தேவை:
தொடர்பு : 0776646357
நேரம் : காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை (இ/571310)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2158 திகதி 22-09-2010

ஆங்கில எழுத்திற்கும் O

வெற்றி எண்கள் **03 06 13 17** போனஸ் இல: **26**

ஜக்பொட் பரிசு ரூ. 14,587,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 121322 | 20/- | 2,426,440/- |
| 2 இல | 8644 | 100/- | 864,400/- |
| 3 இல | 163 | 1,000/- | 163,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 4883 | 40/- | 195,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 328 | 1,000/- | 328,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,587,900/- | - |
| 1 இல + போனஸ் இல | 5742 | 100/- | 574,200/- |
| 2 இல + போனஸ் இல | 277 | 500/- | 138,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 217 | 200/- | 43,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 6,222,760/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 141611 | | 6,822,760/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அனுராதபுரம் | 202323618-8-38 |
| வவுனியா | 202323787-9-32 |
| திருகோணமலை | 202320974-1-20 |
| கொழும்பு | 202321582-9-13 |
| காலி | 202324909-5-13 |
| யாழ்ப்பாணம் | 202333914-9-20 |
| அம்பாந்தோட்டை | 202317877-4-07 |
| மாத்தளை | 202322598-6-49 |
| மாத்தறை | 202318324-9-04 |
| பொலன்னறுவை | 202327793-8-03 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 14,918,875/-**

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 25 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# ஏ.சீ.சீ.ஏ கற்கைநெறி பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், செப். 24

ஏ.சீ.சீ.ஏ கற்கைநெறிக்கான (2010 / 2011) புலமைப் பரிசில் பரீட்சை நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நுண்ணறிவு, பொது அறிவு ஆகிய இரண்டு பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டதாக அமையவுள்ள இந்தப் பரீட்சைக்கு இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் 077538356 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது பரீட்சை நிலையத்தில் தொடர்புகொண்டு தங்களது அனுமதி அட்டைகளைப் பெறமுடியும் என யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-10)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு தனியான மின்மாற்றி

தென்மராட்சி, செப். 24

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தனியான மின்மாற்றி மூலம் மின்சார விநியோகம் நேற்றுமுன்தினம் தொடக்கம் வழங்கப்பட்டுவருகிறது.

வைத்தியசாலைக்கு முன்னர் தனியான மின்மாற்றி மூலம் மின்விநியோகம் செய்யப்பட்டு வந்ததாகவும் இடப்பெயர்வுக்குப் பின்னர் பிரதான வீதியில் உள்ள மின்மாற்றி மூலமே மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்ததாக வும், தற்போது புதிய மின்மாற்றி வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தப்பட்டு நேற்றுமுன்தினம் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

# கண்காட்சியும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம், செப். 24

அராலி குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாவும் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அராலி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

அராலி குடும்ப செயலாளர் திருமதி ச.சிவரஞ்சினி தலைமையில் விழா இடம் பெறும் நிகழ்வில், வலி. மேற்கு பிரதேசசபை செயலாளர் சு.புத்திசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-302)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**27.09.2010 வரை யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=
கமல் ரூறிஸ்ற் இன்
(வெலிங்டன் சந்திக்கும் போதனா வைத்தியசாலைக்கும் இடையில்)
392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 071 9315664, 0777569205

## Tamil Virtual University ஊடாக
## தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நீங்களும் கலைப்பட்டதாரி(B.A) ஆகலாம்

**O/L பெறுபேறுகள் பற்றிய கவலை வேண்டாம்.**
தமிழ் இணையப்பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வுப்பரீட்சை நடைபெறவிருப்பதால் மாணவர்கள் தமது சுயவிபரக் கோவையினை 30/09/2010 திகதிக்கு முன்பதாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**A/L பரீட்சை எழுதிவிட்டீர்களா?**
பெறுபேறுகளுக்குக் காத்திருக்கத் தேவையில்லை. எமது நுழைவுத்தேர்வுப் பரீட்சையூடாக நீங்களும் ஒரு பட்டதாரி. (தமிழ் சிறப்புக் கலைப்பட்டதாரி)

**A/L பரீட்சையில் (மூன்று பாடங்கள் சித்தி)**
எந்த பிரிவினர் சார்ந்தவராயினும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம் கணிதம்) நேரடியாக இணைந்து தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டதாரி ஆகலாம்.

**நீங்கள் முழுநேர வேலை செய்பவரா அல்லது தொலை தூரங்களில் வசிப்பவரா?**
**வயதுவேறுபாடின்றி நீங்களும் பட்டதாரி ஆகலாம்.**

இப்பட்டப்படிப்பு தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் மூலம் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படுகிறது. உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. இப்பட்டம் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grant Commission) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**வீட்டிலிருந்தவாறே தபால் மூலம் கற்க ஓர் அரிய வாய்ப்பு.**
இதுசம்பந்தமான கருத்தரங்கு 25.09.2010 நாளை 11மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப்பிரிவில் நடைபெறும்.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகம்**

| | |
|---|---|
| ஞானத்துறந்தை இல்லம் | தென்மராட்சியில் |
| 49/5, பஸார். றோட், யாழ்ப்பாணம். | விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் |
| (ஸ்ரீதர் திரையரங்கு அருகிலான வீதி.) | ஆரம்பப்பாடசாலை அருகில், மீசாலை மேற்கு, மீசாலை. |
| T.P: 077 0418252- 0778849647 | T.P: 077 3174020 - 077 5835372 |

## யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
## BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

BCHS

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

- FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
- FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
- FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள்தேர்ந்தெடுப்பட்ட நாடுகளில் கற்கலாம்.
➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

**IELTS** (International English Language Testing System)
[Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது] 2 1/2 Months
(We guarantee minimum band 5.0 Upwards)

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

**SPOKEN ENGLISH**

இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகின்றது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வாரநாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

**Diploma in English** | **Advance Diploma lin English**

100 % பயிற்சி — மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது — 100 % வெற்றி

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935/0773501499

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி { 02.10.2010, 06.10.2010, 09.10.2010 } காலை : 10.00 மணி, மாலை : 04.00 மணி

## Computer Express
### Institute of Information Technology

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
**அதிரடிக் கட்டணக் கழிவு**

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book,Tally) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

30.09.2010 க்கு முன் பதிவுகளுக்கு முந்துங்கள். பயன்பெறுங்கள்.

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

Batch i -25.09.2010 } 11AM
Batch ii -26.09.2010 } 11AM
Batch iii -28.09.2010 -10AM
Batch iv -29.09.2010 -9AM

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Class Start 27.09.2010 9AM
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நவீன கலையரங்கு உடனடித் தேவை

## கலாசாரப் பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.24

நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையில் அங்கம் வகிக்கும் கலைக் குழுக்கள் மற்றும் கலாமன்றங்கள் தமது கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதற்கு வசதியாக நவீன வசதிகளைக் கொண்ட அரங்கு பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படவேண்டும் என நேற்றுமுன்தினம் நடைபெற்ற நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நல்லூர் பிரதேச சபைச் செயலர் செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

* நல்லூர் சங்கிலியன் தோப்பு, அரண்மனை, ஜமுனா ஏரி அடங்கிய பகுதிகளை நல்லூர் பிரதேச சபைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து பேணப்படவேண்டும்.
* நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வண்ணார்பண்ணை, அரியாலை, கந்தர்மடம், கோண்டாவில், கொக்குவில் போன்ற இடங்களில் வாழ்கின்ற வருமானமற்ற கலைஞர்களுக்கு ஓய்வூதியத் தொகை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
* தமிழர்களின் பாரம்பரிய பாவனைப் பொருள்கள் சேகரித்து அருங்காட்சியகம் அமைக்கப்படவேண்டும். ஆகிய தீர்மானங்களே அவை.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர் உரையாற்றுகையில் -

நவீனவதிகளைக் கொண்ட அரங்கை நிர்மாணிக்க அமைச்சால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரைபடங்கள் கீறப்பட்ட நிலையில் உள்ளன. 4 பரப்புக் காணியை யாராவது அன்பளிப்பாக வழங்கினால் அரங்கு அமைக்கப்படும்.

வருவாயற்று இருக்கும் கலைஞர்களுக்கே ஓய்வூதியம் வழங்க சிபார்சு செய்யப்படும். அதற்கான பட்டியலை தயாரித்து வழங்குமாறு புதிய நிர்வாகத்திடம் கேட்கப்படும்.

சங்கிலியனின் பிரதேசத்தை பாதுகாக்க யாழ்.மாநகர முதல்வருக்கும் அமைச்சர்கள் மற்றும் அரச அதிபர் ஆகியோருக்கும் நல்லூர் பிரதேச செயலகத்தால் அறிக்கைகள் அனுப்பிவைக்கப்படும் - என்றார்.

(த-204-160-7)

## ஜெசிகா சிறுவர் அமைப்பின் செயற்பாடுகள் மீள ஆரம்பம்

குருநகர், செப்.24

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் பங்கிலுள்ள சிறுவர்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்குடன் 'ஜெசிகா' சிறுவர் அமைப்பின் செயற்பாடுகள் இங்கு மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா. ஆர்.நேசராஜா அடிகள் தெரிவித்தார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்த 8 வயது தொடக்கம் 18 வயதையுடைய சிறுவர்கள் இவ்வமைப்பில் தம்மை இணைத்துக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (த-204-51)

## வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை


யாழ்ப்பாணம், செப்.24

யாழ்.சுற்றுவட்ட வீதி, கே.கே.எஸ். வீதியின் திருப்பத்தில் பள்ளமாகக் காணப்படுகின்றது. இதனால் மழைபெய்யும் நாள்களில் இப்பகுதியில் நீர் தேங்குவதனால் பயணிக்கும் பொதுமக்களும் வாகச் சாரதிகளும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வீதியில் ஆங்காங்கே பள்ளங்களும் காணப்படுவதால் வெள்ளம் தேங்கி நிற்காமல் இருப்பதற்கு இந்த வீதியை புனரமைப்புச் செய்யுமாறு பயணிகள் தெரிவிக்கின்றனர். (204-51)




## கூட்டுறவு திறந்த வெளிச் சந்தையின் விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன




யாழ்ப்பாணம், செப்.24

யாழ்.முற்றவெளிப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு திறந்த வெளிச்சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள இரு விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

மீன்கருவாடு, வாழைப்பழங்கள் போன்ற பொருள்களை விற்பனை செய்த நிலையங்களே பூட்டிய நிலையில் காணப்படுகின்றன.

இந்தக் கூட்டுறவு வெளிச்சந்தை உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கவும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யவும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விற்பனை நிலையத்தில் போதிய உற்பத்திப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படவில்லை என்று நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

விற்பனை நிலையங்களை முழுமையாகத் தரம் உயர்த்தி, மூடப்பட்ட நிலையங்களை மீளத் திறந்து விற்பனையை ஆரம்பிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (204-26)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் 'முத்தமிழ் சங்கமம்' நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.24

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் சங்கமம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து காலை நிகழ்வாக 'முத்தமிழ் சங்கமம்' நிகழ்வை முன்னிட்டு 'தேச வழமை' என்னும் மையப் பொருளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டிகள் இடம்பெறும்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்ராஸும் கலந்து சிறப்பிப்பார்கள். நிகழ்வில் கலை நிகழ்வுகளாக நடனங்களும் திருமறைக் கலாமன்ற இளையோர் அவையினர் வழங்கும் வில்லிசையும் இடம்பெறும். மாலை நிகழ்வுகளுக்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமை தாங்குவார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 'சிறுகதைப் பயிலரங்கு' இடம்பெறும். இதில் ஆர்வமுள்ளவர் பங்குபற்றமுடியும்.

கலை நிகழ்வுகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக ஆசிரியர் ந.விஜயசுந்தரமும், சிறப்பு விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் க.ஜெயசீலனும் கலந்து சிறப்பிப்பார்கள். கலை நிகழ்வுகளாக நடனங்களும், சிறப்பு நிகழ்வாக கவிச்சமரும் இடம்பெறும். மாலை நிகழ்வுகளுக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமை தாங்குவார்.

'முத்தமிழ் சங்கமம்' நிகழ்வுகளின் மூன்றாம், நான்காம் நாள் நிகழ்வுகள் ஒக்ரோபர் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறும். முத்தமிழ் சங்கமம் நிகழ்வுகள் ஒன்பது நாள்களுக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், செப்.24

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவுத் தொண்டர்கள் கௌரவிப்பு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பணிமனையில் ம.எ. அருந்தவசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவுத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீஸ்கந்தகுமார், பிரதேசசபைச் செயலாளர் எஸ். தம்பிராசா, ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.கமலேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(த-204-07)

## நல்லூர் பிரதேச செயலகப் பணிகளை புதிய கட்டடத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.24

நல்லூர்ப் பிரதேச செயலகம் எதிர்வரும் ஐப்பசி மாதத்தில் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

தற்சமயம் திருநெல்வேலியில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கிவரும் நல்லூர் பிரதேச செயலகத்திற்கென நல்லூரில் யாழ். மாநகரசபைக்கு அண்மித்ததாக உள்ள வகையில் புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

புதிய கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் விரைவில் பூர்த்தியாகிவிடும்.

இந்தக் கட்டடத்திறப்பு விழா உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோண் செனிவிரட்ண, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட பலர் கலந்துகொள்வர்.

திறப்பு விழாவை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையால் கும்மி, கோலாட்டம் போன்ற பாரம்பரிய தமிழ் கலை நிகழ்வுகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-204-07)

## புதிய செபமாலை அன்னை திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.24

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னையின் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.45 மணிக்கு நடைபெறும். நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலியும் மாலை 4.30 மணிக்கு நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.

ஒக்ரோபர் 3ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் மறையுரைக்கு என இந்தியாவில் இருந்து குருவானவர் அழைக்கப்பட்டுள்ளார் என பங்குத் தந்தை தெரிவித்துள்ளார். (த-204-317)



புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிசு உதான வங்கித் திறப்புவிழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் சு.இராசமனோகரன் பாடசாலை மாணவி ஒருவரிடமிருந்து வைப்புத்தொகையைப் பெறுவதையும் அருகில் 'சிசு உதான' பொறுப்பாளர் ப.உதயணன், உடுவில் கல்விக் கோட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் த.இராசரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (த-204)

## படகில் பயணிப்பவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள்

யாழ்ப்பாணம், செப்.24

மணியந்தோட்டதுக்கும் பூநகரிக்கும் இடையில் நடைபெற்றுவரும் பயணிகள் படகில் பயணம் மேற்கொள்வோருக்குத் தற்போது பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

படகில் பயணம் செய்யும் பயணிகள் அதற்கான பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ளதால் சிரமமின்றி படகில் பயணம் மேற்கொள்வதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-204-26)

## மாநகரசபைத் தொழிலாளர்கள் இருதடவை சுத்திகரிப்புப் பணி

யாழ்ப்பாணம், செப்.24

யாழ்.நகர்ப் பகுதியில் மாநகர சபைத் தொழிலாளர்கள் தினமும் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

காலை, இரவு என இரு தடவைகள் மாநகர தொழிலாளர்கள் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுவதனால் நகரில் தேங்கும் கழிவுப்பொருள்கள் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன.

வடிகால்வாய்களிலும் கிருமி நாசினி விசிறப்பட்டு துப்புரவு செய்யப்படுகின்றன.

நகரின் முக்கிய இடங்களில் கழிவுப் பொருள்கள் சேகரிப்பதற்கு கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன. (த-204-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அதிகார சபையின் கலாசார, இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றோரின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 24

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கு இடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி முதல் இடத்தைப்பெற்ற மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகி உள்ளனர்.

பேச்சு, அறிவிப்பாளர், தனிநபர் பாடல், குறுநாடகம், ஓவியம், கிராமிய நடனம் (தனிநபர்), கிராமிய நடனம் (குழு), சிறுகதை ஆகிய எட்டுப் பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக இடம்பெற்றன.

யாழ்.மாவட்டத்தில் முதல் இடம்பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**அறிவிப்பாளர்**

கீழ்ப்பிரிவு-பா.பானுஜா (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு), மத்தியபிரிவு-அ.சஜீவா (காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு), மேற்பிரிவு- ரா.அனுஷ்மாலா (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு).

**பேச்சு**

பா-கேதுசா (கீழ்ப்பிரிவு-சங்கானை), ந.வினோஜா (மத்திய பிரிவு-காரைநகர்), சி.லோகவதனி (மேற் பிரிவு-காரைநகர்).

**தனிநபர் பாடல்**

ஆ.அமிர்தா (கீழ்ப்பிரிவு-காரைநகர்), ந.கபில்ராஜ் (மத்தியபிரிவு-சண்டிலிப்பாய்), உ.உஷானா (மேற்பிரிவு- சங்கானை).

**குறுநாடகம்**

சுழிபுரம் மேற்கு சிறுவர் கழகம் (சங்கானை).

**ஓவியம்**

சோ.திலக்ஸ்சனா (கீழ்ப்பிரிவு- காரைநகர்), நகோமி விக்கேஸ்வரன் (மத்திய பிரிவு-யாழ்ப்பாணம்), ப.டவித்தா (மேற்பிரிவு-சண்டிலிப்பாய்).

**கிராமிய நடனம்-தனிநபர்**

ச.தனுசிகா (கீழ்ப்பிரிவு-காரைநகர்), சி.தேவிகா (மத்திய பிரிவு-சங்கானை), சி.அனுஷ்மாலா (மேற்பிரிவு- சண்டிலிப்பாய்).

**கிராமிய நடனம்-குழு**

பிள்ளைநிலா சிறுவர் கழகம் (கீழ்ப்பிரிவு-சண்டிலிப்பாய்), மூளாய் சிறுவர் கழகம் (மத்தியபிரிவு-சங்கானை), வட்டு.தெற்கு சிறுவர் கழகம் (மேற்பிரிவு சங்கானை).

**சிறுகதை**

பா.அம்சா (கீழ்ப்பிரிவு-சங்கானை), ச.நேமிதா (மத்தியபிரிவு-சங்கானை), எஸ்.மேரி நிஷாந்தினி (மேற்பிரிவு- மருதங்கேணி)

(6-250)


## பாடசாலைகளில் பாற்பொருள்கள் விற்பனை

பாடசாலைகளில் ''யாழ்கோ'' பாற்பொருள்கள் விற்பனை செய்வதற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அனுமதியளித்துள்ளதால் எமது சங்கம் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் பாற்பொருள்கள் விற்பனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டு ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.


## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, செப். 24

சண்டிலிப்பாய் புனித திரேசாள் ஆலய திருவிழா நடைபெற்று வருகிறது.

நாளை சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணை விழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொருப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

(204-135)

* * *

கொழும்புத்துறை, செப். 24

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் புதன் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொருப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (204-135)


# VACANCY ANNOUCEMENT

In response to the official request of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, a Japan International Cooperation Agency (JICA) team is going to implement "the Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District", or PDP Jaffna in short. To carry out the tasks of the project, the JICA team now invites applicants for local consultant positions specified below.

**POST TITLE:**
**Community Development Specialist□2 people□**

**General Qualifications:**
Applicants for the positions above must have at least the following qualifications.

(a) Proven ability to undertake research, analytical and evaluation work on well-defined tasks, collect and organize required data and information, and apply appropriate computer skills in analyzing data.
(b) Excellent command of English in speaking and writing – capable to produce well-organized reports.
(c) Excellent command of Tamil language at least in speaking. Originating from or resident in Jaffna District is an advantage.
(d) Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned university. A master's or more advanced degree is an advantage.
(e) Work experience with international donor organizations, bilateral development agencies, and projects supported by these organizations/agencies is an advantage.

**Qualification of Community Development Specialist:**
(a) Minimum of eight (8) years working experience in the area of community development
(b) Experience in conducting survey on community profiles and to scrutinize the needs
(c) Practical skills to implement livelihood development activities, such as business development, marketing development, and other income generating activities with community participation, especially women's organizations
(e) Minimum three (3) years working experience in Tamil speaking areas.

**Scope of Work:**
(a) Collecting basic data and information on communities and livelihood development activities
(b) Facilitating the process of planning and implementation of pilot activities for livelihood development with community participation
(c) Formulating and strengthening CBOs
(d) Analyzing the above tasks and producing well-organized reports
(e) Contributing to any other activities required for the Project.

**Closing Date 8th October 2010**

**How to Apply:**
To apply, please send your CV to the following email address by e-mail, or post the following address by post.

**SPEED MANAGEMENT SERVICE (PVT.) LTD.**
No 36/2, Rasavin Thoddam, Jaffna
Speedms2010@gmail.com



## வேலைக்கு ஆள் தேவை

**வீட்டில் தங்கி இருந்து BOSS வீட்டு வேலைக்கும், சமையலுக்கும் இளம் பெண் வயது 18-20 தேவை. (3வருடத்துக்கு)**

**சபின்ஸ் ஜெயசேகரா**
பாக்கிய இல்லம்,
நவாலி வடக்கு.
தொ.பே: 0778350478



## நீங்கா நினைவில்
# மூன்றாண்டுகள்

கதிரவன் மலரும் காலைப் பொழுதினில்
கருவிழி மூடி நீழ் துயில் கொண்டவனே
கலங்குகின்றோம் உன்னைக் காணாது
ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும்
ஆறிடுமோ உந்தன் பிரிவுத் துயர்



அமரர் கோபாலபிள்ளை
**சுபாஸ்கரன் (சுபாஸ்)**
திதி: பிரதமை (24.09.2010)

கண்மகிழ்: 03.04.1978
கண் நெகிழ: 27.09.2007

என்றும் உன் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

த.முகவரி:
11/1, திருவள்ளுவர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

நி.முகவரி:
நடராஜா வீதி, .வேலணை மேற்கு,
வேலணை-08


## இந்து சாதனம் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், செப். 24

சைவபரிபாலன சபையினரால் வெளியிடப்படுகின்ற 'இந்து சாதனம்' புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது.

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய முகப்புக் கோபுரமும், உற்வச மூர்த்தியும் இந்த இதழின் முன்பக்கத்தை அலங்கரிக்கின்றன.

அமரர் கலாநிதி கா.கைலாசநாதக் குருக்கள், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கவிஞர் இ.குகதாசன், முனைவர் ஆ.ஆனந்தராசன், சிவ.மகாலிங்கம், கம்பவாரிதி இ.ஜெயராஜ், பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா, நயினை நா.யோகநாதன், நீர்வை மணி ஆகியோரின் பல்வேறு ஆக்கங்கள் இந்த இதழை அலங்கரிக்கின்றன.

'இந்துக்களின் சந்தேகம்' என்ற தலைப்புடன் வரையப்பட்ட ஆசிரிய தலையங்கங்கள் இந்துப் பெரு மக்களைச் சிந்திக்க வும், செயற்படவும் தூண்டியுள்ளது. (க)


## டொல்பின் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள டொல்பின் ஒறிஜினல்12 A/C, P.B.XXXX தொடர் இலக்க வாகனம் விற்பனைக்குண்டு. (உற்பத்தி டிசெம்பர் 2001, ஒறிஜினல் மைலேஜ், கம்பனிப் பராமரிப்பிலுள்ளது).

சனிக்கிழமை மட்டுமே பார்வையிடலாம்.

தொ.பே: 0773910667



## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 529
சீட்டிழுப்பு திகதி: 22.09.2010

வெற்றி எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 09 23 35 61

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 10,000,000.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 131 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 316 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 7162 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 4068 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 103507 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 16391 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரு.4,154,880.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரு.10,385,443.20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்வளத்தை அழிக்கும் உபகரணங்களை வடமராட்சிக் கடலில் பயன்படுத்தத் தடை

## மீனவர் சங்கங்களின் கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.24

கடல் வளத்தை அழிக்கும் கடற்றொழில் உபகரணங்களை வடமராட்சி கடற்பகுதியில் பயன்படுத்துவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த 14ஆம் திகதி பருத்தித்துறை சக்கோட்டை பொது மண்டபத்தில் இடம் பெற்றபோது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், பொலிஸ், இராணுவ, கடற்படை அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

கடல்வளத்தை அழிக்கும் கடற்றொழில் உபகரணங்களான தங்கூசி வலைத் தொழில், இழுவைப் படகுத் தொழில் ஆகியவற்றை முற்றாகத் தடைசெய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டபோது அங்கிருந்த மீனவர் சங்கம் ஒன்று அதற்கு தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. அவ்வாறு தங்கூசிவலை, இழுவைப் படகுத் தொழில் தடை செய்வதாயின் கடல் வளத்தை அழிக்கும் ஏனைய உபகரணங்களும் தடை செய்யப்பட வேண்டும் என அந்தச் சங்கம் வேண்டுகோள் விடுத்தது.

மேற்படி சங்கத்தின் வேண்டு கோளையும் உள்ளடக்கி கடல்வளத்தைப் பாதிக்கும் தங்கூசிவலை, இழுவைப் படகு, டிஸ் கோவலை, நாய்வலை, விறாண்டி வலை, முரல்வலை ஆகியவற்றை வடமராட்சிக் கடற்பரப்பில் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்படுகின்றது என ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை மீறித் தொழில் செய்ய முற்படும் கடற்றொழிலாளர்கள் குறித்த முறைப்பாட்டை சங்கங்கள், சமாசத்துக்கு அறிவிக்கவேண்டும். சமாசம், யாழ். கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு அதனைத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கடற்படையினரின் உதவியை நாடி அந்தத் தொழிலை தடுத்து நிறுத்த அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (த-201-14)



ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் பயனாளி ஒருவருக்கு ஆடு ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## ஆலயத்துக்கு சித்திரத்தேர்

சண்டிலிப்பாய்,செப்.24

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு பல இலட்சம் ரூபா செலவில் சித்திரத் தேர் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஆலயத்தில் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த ஆலயத்தில் ஏற்கனவே அம்பாளும் பிள்ளையாரும் எழுந்தருள்வதற்காக பல இலட்சம் ரூபா செலவில் சித்திரத் தேர் நிர் மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-201-115)

## குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே விரைவில் கடற்பாதைச் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.24

குறிகாட்டுவான் துறைக்கும் நயினாதீவு துறைக்கும் இடையில் கடற்பாதை சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மேற்படி பாதைச் சேவையை நடத்துவதற்கு பாதை ஒன்று கனரக வாகனம் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:- இந்தப் பாதைக்கான உப கரணங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாதையைச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையிலான கடற் பயணத்தடைகள் நீங்கிவிடும். சிறியரக வாகனங்களையும் இந்தப் பாதையூடாக நயினா தீவுக்குக் கொண்டு செல்ல முடியும் என்றார். (த-201-26)




## சாட்டிமாதா திருவிழாவில் இளைஞர் சிலர் அட்டகாசம்

குருநகர்,செப்.24

தீவகம் சாட்டி சிந்தாத்திரை மாதா தேவலாயத்தின் திருவிழாத் திருப்பலி கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை நிறைவடைந்ததைத் தொடர்ந்து கொடியிறக்கும் வழிபாடு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இம்முறை நடைபெற்ற இந்த ஆலயத்தின் திருவிழாவில் பெரும் தொகையான பக்தர்கள் கலந்து கொண்டபோதிலும் ஒரு சில இளைஞர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதனால் பக்தர்கள் மிகவும் அச்சமடைந்த நிலையில் திருவிழாத் திருப்பலியில் பங்கேற்றனர். மது போதையில் தள்ளாடிய நிலையில் இளைஞர்கள் ஆலய வளவில் அன்றைய தினம் காணப்பட்டனர்.

இளைஞர்கள் சிலர் கையடக்கத் தொலைபேசிக் கமரா மூலம் வழிபாட்டுக்கு வந்த இளம் பெண்களைப் படம் எடுத்ததையும் காணமுடிந்தது.

எனவே இக்கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறாது அடுத்து வரும் திருவிழாக்கள் பக்தியுடன் நடைபெற ஆலய பரிபாலகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-201-51)

## அறநெறி வகுப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

நவாலி மாணவர்களின் சமய, சமூக அறிவை வளர்ப்பதற்கான அறநெறி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

நவாலி தெற்கு- ஹேமலதா சிறுவர் ஞாபகார்த்த நிறுவனத்தில் மேற்படி அறநெறி வகுப்பு இடம்பெறும்.

தரம் ஒன்று தொடக்கம் 7 வரையான மாணவர்கள் மேற்படி வகுப்புக்களில் கலந்து கொள்வதுடன் ஆன்மீக நூல்கள் - சஞ்சிகைகள் வாசிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி அறநெறிக் கல்வி மூலம் நவாலி - மானிப்பாய் - ஆனைக்கோட்டை - கட்டுடை மாணவர்கள் பயன்பெறமுடியும் என நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார். (த-201-302)

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதிக்கு ஒளியூட்டுமாறு மக்கள் கோரிக்கை

குருநகர்,செப்.24

ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையின் முன்னால் உள்ள ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதியில் தெரு விளக்கு இல்லாமையால் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு இரவு நேரங்களில் வருகை தரும் நோயளர்கள் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலைக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ள சோலர் மின் குமிழ் பழுதடைந்து தற்போது எரிவதில்லை. ஊர்காவற்றுறை பகுதியில் சில இடங்களில் மக்கள் மீளக் குடியேறி வருவதனால் வைத்தியசாலைக்கு இரவு நேரங்களில் வருகை தரும் நோயாளர்களும் அதிகரித்து வருகின்றனர்.

எனவே இந்த வைத்தியசாலைக்கு இரவு நேரங்களில் வருகை தரும் நோயாளர்களின் நன்மைகருதி மேற்படி வைத்தியசாலைக்கு முன்பாக மின்சார சபைமின் குமிழ்களை வழங்கி இவ்வீதியில் ஒளியூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-201-51)

## ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் 10 மில்லியன் மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம்,செப்.24

யாழ்.குடாநாடு முழுவதும் 10 மில்லியன் மரக்கன்றுகளை ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி நடுவதற்கு தீர்மானித்துள்ளதாக பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நான்கு பரப்புக்கு மேற்பட்ட காணிகளில் தென்னைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட உள்ளதாகவும் மேலும் 10 மில்லியன் மரக்கன்றுகளை வீடுகள், பாடசாலைகளில், கோயில்கள், வீதி யோரங்களில் நடக்கூடியவாறு பிரித்து மரக்கன்றுகளை தெரிவு செய்யுமாறு பிரதி விவசாய பணிப்பாளர் சி.சிவகுமாரை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை வீதி அகலிப்புக் காரணமாக வீதியோரங்களில் மரங்கள் நட முடியாத நிலை இருப்பதாக சுட்டிக்காட்டப் பட்டது. எனவே வீதியோரங்களில் உள்ள அரச காணிகளில் மட்டும் பெரிய மரக் கன்றுகளை நடுவதென்று தீர்மானிக்கப் பட்டது. (த-201-15)

# நவோதயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி மாணவர் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,செப்.24

ஏழை மக்களுக்கு வரப்பிரசாதமாக வழங்கப்பட்டு வரும் இலவசக் கல்வியைத் தரம்மிக்கதாக்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய நவோதயப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. எனவே நவோதய பாடசாலைத் திட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்தி மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம்.

வித்தியாலய பிரதி அதிபர் ஏ.அரியரத்தினம் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நவோதய வாரத்தை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் ஒவ்வொரு பாடசாலைகளை நவோதய செயற்றிட்டத்தின் கீழ் உள்வாங்கி வளம் மிக்கதாகவும் கல்வியில் தரம் மிக்கதாக வும் வளர்த்தெடுப்பதற்கு கல்வியமைச்சு நாடெங்கிலும் 378 நவோதயப் பாடசாலைகளை உருவாக்கியுள்ளது. இந்த நவோதயப் பாடசாலைகளை சிறப்பாக வளர்த்தெடுப்பதற்காக கல்வித் திணைக்களம் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வகையில் நவோதய வாரம் அனுஷ்டிப்பு மிக முக்கியம் வாய்ந்ததாகும். உரிய வகையில் வளங்களைப் பெற்று உச்சப் பயனடிப்படையில் வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் நல்லதோர் உதாரணமாகும்.

இந்தப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற் றோர்கள் ஆகியோரின் பங்களிப்பின் போது விஞ்ஞான முறையிலான முகாமைத்துவச் செயற்பாடுகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருவது எதிர்பார்க்கப்படும். இலட்சியத்தை அடைய வழி வகுக்கும்.

எதிர்காலத்திலும் இவ்வித்தியாலம் பல சாதனைகளைப் புரிந்து முன்னுதாரணமாக மூலாதாரப் பாடசாலையாகத் திகழ வேண்டும்.

நவோதய பாடசாலை வாரத்தின் 2 ஆம் 3 ஆம் நாள்களில் சிரமதான நிகழ்வுக ளும் 4 ஆம் நாள் சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-201)

## பிரதேச செயலகத்தில் சைக்கிள் திருட்டு

தென்மராட்சி பிரதேச செலயக வளாகத்தில் ஒரு புதிய சைக்கிள் கடந்த செவ்வாய்க்கிழமை திருட்டுப்போயுள்ளது.

சாவகச்சேரி சரசாலையைச் சேர்ந்த தங்கவேலு தனுஷன் என்னும் மாணவனுக்கு நிறுவனமொன்றினால் வறுமை நிலை காரணமாக வழங்கப்பட்ட சைக்கிளை பிரதேச செயலக வளாகத்தில் விட்டுப் பூட்டிவிட்டு தனது தேவைக்காக உள்ளே சென்றதாகவும் அங்கிருந்து வந்து பார்த்தபோது சைக்கிள் காணாமல் போனது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலக வளாகத்தில் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-201-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 11 ஆண்டுகள் விரிவுரையாளராக,
பிரதி அதிபராகப் பணியாற்றி இன்று மணிவிழாக் காண்கின்ற
எங்கள் அன்பிற்கினிய ஆசான்
'பண்டிதர்'. 'சைவப்புலவர்'. 'கலைவாரிதி'. 'கலாநிதி'

## செல்லையா திருநாவுக்கரசு

*B.A., M.A.* (தமிழ்), *M.Ed., Ph.D., Dip.in Ed. (Merit), Dip. in Management, S.L.P.S. 2 - I, S.L.E.A.S. - Class III*

**கல்விச் சேவை விவரம்**

26.12.1985 - 23.08.1991 ஆசிரியர். வவுனியா மாதர்பணிக்கர்மகிழங்குளம் அ.த.க. பாடசாலை
24.08.1991 - 31.12.1992 ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
01.01.1993 - 31.12.1994 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர். நல்லூர் கல்விக் கோட்டம்
01.01.1995 - 21.03.1997 ஆசிரியர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
22.03.1999 - இன்றுவரை விரிவுரையாளர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

1994 1995 : யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை இடைவரவு விரிவுரையாளர்
2001 - இன்று வரை: தேசியக் கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை விரிவுரையாளர்

**இன்று காலை எமது கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் மணிவிழாக் காணும் ஆசானை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்**

**- கலாசாலைச் சமூகம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**

## சாட்டி கடற்கரையில் அந்தியேட்டி மடம்

யாழ்ப்பாணம்,செப்.24

வேலணை சாட்டி கடற்கரையில் அந்தியேட்டி மடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த அந்தியேட்டி மடம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை வேலணைப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

இந்தப் புதிய அந்தியேட்டி மடத்தை அமைப்பதற்கான கேள்வியை பிரதேச சபை ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரியுள்ளது.

(த-26)

**விற்பனைக்கு**

HP Branded Computers
3.2 GHZ (HT),
1GB DDR 2RAM,
80GB SATA HD,
Combo Drive
22,000/=
தொடர்பு: 021 7394470

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 58
திகதி - 22.09.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: U | அதிர்ஷ்ட இலக்கம்: 10 | வெற்றி இலக்கம்: 3 8 9 6 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 10 | 3 | 8 | 9 | 6 | 7 | ரூ. 18,305,138.00 | பரிசு | - |
| 1 பரிசு | | 10 | 3 | 8 | 9 | 6 | 7 | ரூ. 2,000,000.00 | பரிசு | - |
| 2 பரிசு | | | 3 | 8 | 9 | 6 | 7 | ரூ. 100,000.00 | பரிசு | 03 |
| 3 பரிசு | | | | 8 | 9 | 6 | 7 | ரூ. 10,000.00 | பரிசு | 20 |
| 4 பரிசு | | | | | 9 | 6 | 7 | ரூ. 1,000.00 | பரிசு | 185 |
| 5 பரிசு | | | | | | 6 | 7 | ரூ. 50.00 | பரிசு | 1737 |
| 6 பரிசு | | | | | | | 7 | ரூ. 20.00 | பரிசு | 16919 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | | |
| 7 பரிசு | | | 3 | 8 | 9 | 6 | | ரூ. 1,000.00 | பரிசு | 22 |
| 8 பரிசு | | | 3 | 8 | 9 | | | ரூ. 100.00 | பரிசு | 176 |
| 9 பரிசு | | | 3 | 8 | | | | ரூ. 50.00 | பரிசு | 1772 |
| 10 பரிசு | U | | | | | | | ரூ. 20.00 | பரிசு | 6989 |
| 11 பரிசு | U | 10 | | | | | | ரூ. 100.00 | பரிசு | 762 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. **1,454,410.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகது.

தேசிய லொத்தர் சபை
2342, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. **18,508,345.00**

# மணிவிழா வாழ்த்து



அறிவுக்கு ஆசானாம் அல்லைதிருநாவுக்கரசு - செல்வ
அழகிற்கு அரசியாம் அனலைவிஜயலட்சுமி எனும்
நல்லுலகம் போற்றும் ஆதர்ஷத்தம்பதி நீதியில்!
நல்லூரிறை யருளால்பிறை ஆயிரம் கண்டுவாழி!!

84, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி **திருநாவுக்கரசு விஜயலட்சுமி** தம்பதிகளின் மணிவிழாவினை முன்னிட்டும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி இன்று சேவைநலன் பாராட்டு விழாவினை ஏற்று நிற்கும் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு பண்டிதர், சைவப்புலவர், கலைவாரிதி, பி.ஏ, எம்.ஏ, எம்.ஈ.டி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா (சிறப்பு), முகாமைத்துவ டிப்ளோமா, பி.எச்.டி, இ.அ.சே.2 - I, இ.க.நி.சே.வகுப்பு - III அவர்களையும் அவர்தம் பாரியார் அவர்களையும் நூறாண்டு காலம் வாழ வாழ்த்தி ஆசி வேண்டுவோர்.

கந்தசாமி குமரன் *(அனலைதீவு)*,
இறுதியாண்டு மாணவன்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

சிவலிங்கம் துஜியந்தன் *(அனலைதீவு)*
2ஆம் ஆண்டு முகிழ்நிலை ஆசிரிய மாணவன்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

*(103706)*

THE GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
MINISTRY OF WATER SUPPLY AND DRAINAGE
NATIONAL WATER SUPPLY AND DRAINGE BOARD

**CONTRACT No.: RSC (N)/WB/ENREP/DGM/SURVEYING/JAF/2010/32**
**EMERGENCY NORTHERN RECOVERY PROGRAMME**

**Tender For Topographical Surveying Works at Jaffna District**

**INVITATION FOR BIDS (IFB)**

1.The Chairman, Regional Procurement Committee, the National Water Supply and Drainage Board (NWSDB), Mannar Road, Vavuniya now invites sealed bids from qualified licensed surveyors or Survey firms of Sri Lanka having valid registration to practice for the topographical survey works.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.Alternative bids shall not be accepted. Bidders may purchase bidding documents in required number and may submit one or more independent offers. The independent offers shall be in separate set of bidding documents together with separate bid securities.

4.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have license for surveying in Sri Lanka having valid registration as licensed surveyor or survey firms,

5. Interested bidders may obtain further information from Regional manager (Jaffna) over the telephone number 0212223742 or 0212228962 or facsimile number 0212227965 and bidding docunments may be inspected free of charge at the office of the Deputy General Manager. (N). NWSDB. Mannar Road, Vavuniya.

6. A complete set of Bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy General Manager (NWSDB. Mannar Road, Vavuniya or Regional Manager J), Kandy Road, Jaffna. from 27-09-2010 until 18. 10-2010 from 09-00 hours to 12.00 hours and from 13.00 hours to 15.00 hours on normal working days upon payment of a non refundable tender fee of Rs 500/= Plus VAT in cash.

7 Bids shall be delivered to the Deputy General Manager (N), NWSDB, Mannar Road, Vavuniya, at or before 2.00 pm hrs on 05-11-2010 Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

8. Late Bids will be rejected

9. All Bids shall be accompanied by a bid security of Rupees 20.000/= and the bid security should be valid for 91 days from the closing date of bid.

Chairman
Regional procurement Committee
National Water Supply and Drainage Board
Mannar Road, Vavuniya, Sri Lanka

THE GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
MINISTRY OF WATER SUPPLY AND DRAINAGE
NATIONAL WATER SUPPLY AND DRAINGE BOARD

**CONTRACT No.: RSC (N)/WB/ENREP/DGM/SURVEYING/MULLAI/2010/33**
**EMERGENCY NORTHERN RECOVERY PROGRAMME**

**Tender For Topographical Surveying Works at Mullaithivu District**

**INVITATION FOR BIDS (IFB)**

1.The Chairman, Regional Procurement Committee, the National Water Supply and Drainage Board (NWSDB), Mannar Road, Vavuniya now invites sealed bids from qualified licensed surveyors or Survey firms of Sri Lanka having valid registration to practice for the topographical survey works.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.Alternative bids shall not be accepted. Bidders may purchase bidding documents in required number and may submit one or more independent offers. The independent offers shall be in separate set of bidding documents together with separate bid securities.

4.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have license for surveying in Sri Lanka having valid registration as licensed surveyor or survey firms,

5. Interested bidders may obtain further information from Regional manager (Jaffna) over the telephone number 0212223742 or 0212228962 or facsimile number 0212227965 and bidding docunments may be inspected free of charge at the office of the Deputy General Manager. (N). NWSDB. Mannar Road, Vavuniya.

6. A complete set of Bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy General Manager (NWSDB. Mannar Road, Vavuniya or Regional Manager J), Kandy Road, Jaffna. from 27-09-2010 until 18. 10-2010 from 09-00 hours to 12.00 hours and from 13:00 hours to 15:00 hours on normal working days upon payment of a non refundable tender fee of Rs 500/= Plus VAT in cash.

7 Bids shall be delivered to the Deputy General Manager (N), NWSDB, Mannar Road, Vavuniya, at or before 2.00 pm hrs on 05-11-2010. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

8. Late Bids will be rejected

9. All Bids shall be accompanied by a bid security of Rupees 30.000/- and the bid security should be valid for 91 days from the closing date of bid.

Chairman
Regional procurement Committee
National Water Supply and Drainage Board
Mannar Road, Vavuniya, Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை ஏமாற்றிப் பிழைப்பது துரோகத்தனமா அவர்களுக்கு சேவை செய்ய முனைவது துரோகத்தனமா?

## வரவேற்பு விழாவில் அம்பாறை மாவட்ட எம்.பி.பியசேன கேள்வி

மட்டக்களப்பு, செப்.24

''கடந்த காலங்களில் சேவைசெய்ய வென்று புறப்பட்ட பலர் மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை. கேட்டால் அதற்குரிய சூழல் இல்லை என்றார்கள். அப்படி வீணாக மக்களை ஏமாற்றிக் காலத்தை கடத்த நான் விரும்பவில்லை. எனது மக்களுக்கு சேவை செய்ய ஆசைப்படுகிறேன்.''

- இவ்வாறு அக்கரைப்பற்றை அடுத்துள்ள கண்ணகி கிராம மக்கள் அளித்த வரவேற்பு விழாவில் பேசுகையில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.பியசேன தெரிவித்தார்.

இவ்வரவேற்புவிழா கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் எஸ்.தியாகராசா தலைமையில் ஞாயிறன்று நடைபெற்றது. முன்னதாக எம்.பிக்கு ஆளுயர மாலை சூட்டப்பட்டது. பட்டாசு, வாண வேடிக்கை சகிதம் வரவேற்பு வழங்கப்பட்டது. வரவேற்பு விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

''மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவால் உருவாக்கப்பட்ட இக்கண்ணகி கிராமம் அவரின் பின் எந்த அபிவிருத்தியுமில்லாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பின்னடைவுக்கு இக்கிராமம் ஒரு நல்ல உதாரணமாகும். இதனை யார் அபிவிருத்தி செய்வது? நான் பழைய கட்சியில் இருந்தால் ஏதாவது செய்ய முடியுமா என நீங்கள் கேட்டதற்கிணங்கவே நான் மாறினேன். சிலருக்கு எனது பாதை பிழையாக விளங்கலாம். அதற்காக என்னால் வருந்த முடியாது. அவர்கள் ஒருநாள் நான் செய்தது சரியென்று சொல்வார்கள்.

என்னால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட கருத்துகளின்பால் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். பலர் வீடுதேடி வந்து வாழ்த்தினர்.

நல்லதைச் செய்யவேண்டுமென எண்ணினேன். செய்கிறேன். மக்களை ஏமாற்றிப் பிழைப்பது துரோகத்தனமா? மக்களுக்கு ஏதாவது செய்ய முனைவது துரோகத்தனமா? நீங்களே சொல்லுங்கள்.

இந்தக் கிராமத்தில் படித்த இளைஞர்களுக்கு அரச உத்தியோகம் பெற்றுத்தருவேன். உங்கள் பிள்ளைகளைப் படிக்க வையுங்கள். நான் சொத்து சுகத்திற்காக மாறவில்லை. நான் கடையிலிருந்து செய்த சேவையைக்கூட செய்யமுடியாத நிலை இருக்கும். கூட்டமைப்புக்கு மக்கள் பதில் சொள்வார்கள் என்றார்.

கண்ணகி கிராம இந்து மாமன்ற உறுப்பினர் எஸ்.செல்வநாயகம் உள்ளிட்டோரும் உரையாற்றினர். (ளி)

# சட்டவிரோதமாக மீன்பிடி: கல்முனையில் ஒருவர் கைது

மட்டக்களப்பு,செப்.24

கல்முனைப் பிரதேசத்தில் டைனமற் போன்ற தடுக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த ஒருவரைக் காரைதீவு விசேட அதிரடிப்படையினர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை முதல் மாலை வரை காத்திருந்து கைது செய்தனர்.

இது தொடர்பாகக் காரைதீவு விசேட அதிரடிப் படையின் நிலையப் பொறுப்பதிகாரி சீ.ஐ.பந்துல பெர்னாண்டோ தெரிவித்தவை வருமாறு:-

எமக்குக் கிடைத்த தகவலையடுத்து திங்கட்கிழமை காலை எமது மோட்டார் சைக்கிள் பிரிவினர் சீருடையின்றி கடற்கரைப் பள்ளிவாசலை அண்டிய பகுதியில் உள்ள மரங்களின் மேலேறி இரகசிய மாக அமர்ந்து கொண்டு தொலைநோக்கி மூலம் மாலை வரை அவதானித்தனர்.

மாலை ஆறு மணியளவில் கரைக்குத் திரும்பிய ஒருவரை அனைத்துப் பொருட்களுடன் கைது செய்தனர். மேலும் இரு படகுகளில் வந்தவர்களைத் தேடி வருகிறோம் இப்படி அவர் கூறினார்.

சட்டவிரோதமான பொருட்கள், பிடிக்கப்பட்ட மீன்கள், மீன்பிடி உப கரணங்கள் ஆகியவை சகிதம் அன்று குறித்த நபர் இரவு 9.30 மணியளவில் கல்முனைப் பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டார். (ளி)

# விளைந்த நெல்லை விற்கமுடியாது காரைதீவு விவசாயிகள் திண்டாட்டம்

மட்டக்களப்பு, செப்.24

கஷ்டப்பட்டு உற்பத்திசெய்த நெல்லை உரிய விலைக்கு விற்கமுடியா மல் தாங்கள் திண்டாடுகின்றனர் என காரைதீவு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச மானியவிலையில் நெல் கொள்வனவுச் செயற்பாடு காரைதீவில் செயற்படுத்தப்படவில்லை. காரைதீவில் ப.நோ. கூ. சங்கமும் கமநல கேந்திர நிலையமும் இருக்கின்றன. எனினும் அரச நெல் கொள்வனவு இடம்பெறவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடன்பட்டு விதைநெல், உரம் ஆகியவற்றைக் கொள்வனவு செய்து உழவு வேலைகளைப் பூர்த்தி செய்த விவசாயிகள் விளைந்த நெல்லை விற்று பட்ட கடனை அடைப்பது வழக்கம். எனினும் இம்முறை அறுவடை முடிந்ததும் மூடை ஒன்று ரூபா 1,100க்குத் தனியார் நெல்லைக் கொள்வனவு செய்தனர். அரச நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படவில்லை.

நெல்லை வாங்கிக்கொண்டிருந்த சம்மாந்துறை, சாய்ந்தமருது ப.நோ. கூ.சங்கங்களில் காரைதீவு விவசாயிகள் நெல்லை விற்கமுடியாதிருந்தனர். அங்கும் தற்போது நெல் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறிய காரைதீவு வளைந்த வட்டைகிழல் கண்டத் தலைவர் எஸ். நேசராஜா காரைதீவில் நெல் கொள் வனவை கமநல கேந்திர நிலையம் நடத்தாமை குறித்து கவலையும் கண்டனமும் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான நெல் மூடைகளுடன் பணத்துக்காகக் காத்திருக்கும் நூற்றுக்கணக்கான விவசாயிகளின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்வது யார்? - என்று அவர் கேட்கிறார்.

அரச நெல் கொள்வனவு காரைதீவில் இடம்பெறாமை குறித்து விவசாயிகள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். தனியார் நிலைமை யைப் பயன்படுத்தி மூடைக்கு ரூபா 1,600 கொடுத்து வாங்குகின்றனர். கவனிப்பார்களா? - என்று கேட்கிறார். (ளி)

# பத்திரகாளியம்பாள் ஆலயத்தில் தீ மிதிப்பு உற்சவம் புதன்கிழமை

மட்டக்களப்பு, செப்.24

சம்மாந்துறை தமிழ்க்குறிச்சி பத்திர காளி அம்பாள் ஆலய வருடாந்த தீ மிதிப்பு வைபவ அலங்கார உற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

இதைத் தொடர்ந்து 9தினங்கள் விசேட பூஜையுடன் கூடிய திருவிழாக்கள் இடம்பெறும்.

அடுத்த மாதம்8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும். தீ மிதிப்பு கிரியைகள்யாவும் பிரதம பூசகர் சி.சதாசிவம், ஆலய பூசகர் கு.லோகேஸ் ஆகியோரின் தலைமையில் நடை பெறும்.

பாற்குட பவனி உற்சவ காலத்தின் போது இடம்பெறும். 15ஆம் திகதி மாலை வைரவர் இடும்பன் பூஜையும் நிகழும் என பரிபாலனசபைத் தலைவர் சுப்பிரமணியம் தெரிவித்தார். (ளி)




# மத்திய மாகாணசபை சிறப்புரிமைக் கூட்டம் முதலமைச்சர், அமைச்சர்களின்றி நடந்தது

## ஐ.தே.க. உறுப்பினர் ஜெயுனுலாப் டீன் பாய்ச்சல்

கண்டி,செப்.24

''மாகாணசபை உறுப்பினர்களின் சிறப்புரிமை பற்றிய விசேட கூட்டத்திற்கு முதலமைச்சரோ, அமைச்சர்களோ ஏன் வரவில்லை? சபைத் தலைவரையும் காணோம். தேவையான கோவைகள் இல்லை, வாகனம் இல்லை. இங்கு என்ன நடக்கிறது? முதலமைச்சர், அமைச்சர்கள் மூலம் மீறப்படும் சிறப்புரிமைகளை நாம் யாரிடம் முறையிடுவது''?

-இவ்வாறு ஐ.தே.கவின் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜமால்டீன் ஜெயுனுலாப்டீன் கேள்வி எழுப்பினார்.

மத்தியமாகாணசபையின் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு கண்டி பள்ளேகல மாகாண சபை மண்டபத்தில் நடை பெற்றது.

இங்கு உரையாற்றுகையிலேயே ஜமால்டீன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

சபைத்தலைவர் சாலிய திஸாநாயக்க, பிரதித்தலைவர் எம்.யசமான ஆகியோர் சமுகமளிக்காத நிலையில் ஐ.ம. சு. மு உறுப்பினர் எ.ஜி. சிறிசேன சபைக்குத் தலைமை தாங்கினார்.அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:-

''எமக்கு வாக்களித்த மக்களின் சிறப்புரிமை பேசப்பட வேண்டும். வாக்களித்த மக்களின் குறைபாடுகளைத் தட்டிகேட்க வேண்டும். எனினும், அதனை அலட்சியப் படுத்துவதால் உறுப்பினரின் சிறப்புரிமை மீறலின் கீழ் நாம் அப்பிரச்சினையை இங்கு முன்வைக்கின்றோம்.

ஆனால், முதலமைச்சர் என்னை அலட்சியப்படுத்தினார். நான் ஒரு வீதியோர நடை பாதை வியாபாரி என்பதைச் சொல்லிக் காட்டினார்.

4 கோடி ரூபா அதிக விலையில் கோரப்பட்ட விலைமனுவுக்குதிகன விளை யாட்டு மைதான வேலையை வழங்கியமை பற்றி நான் சுட்டிகாட்டியபோது, நான் செய்யும் வடை வியாபாரம் போலல்ல இது என நக்கல் அடித்தார். அப்படிச் சொல்வது ஒரு முதலமைச்சருக்கு பொருத்தமா? இந்த நிதி மக்களுடையது''- இப்படி ஜெயுனுலாப்டீன் தெரிவித்தார்.

ஐ.தே.க. உறுப்பினர் சஞ்சீவ கவிரத்ன கூறியவை வருமாறு:-

''மத்திய மாகாணப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக்கப்பட்டபோது மாகாணசபையின் அனுமதி பெறப்படவில்லை. எமது சொத்துப் பறிபோன போது. மாகாண சபை பார்த்துக் கொண்டிருந்தது. இதுபோல பிரதேச செயலகங்களையும் மாகாணசபையிலிருந்து மத்திய அரசு எடுத்து கொண்டது.

மாகாணசபையில் ஏகமானதாக அல்லது இரண்டு கட்சியினர் வாக்களித்து நிறைவேற்றும் பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இவை அமுல்படுத்தப்படாமைக்கு காரணம் என்ன?

முன்னர் முதலமைச்சராக இருந்த பி.பீ.திஸாநாயக்கவுக்கு (ஐ.தே.க) எதிராக அப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

அமைச்சுகளுக்கு மேற்பார்வை செய்ய சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். இவர்கள் சபைக்குப் பதில் சொல்வதில்லை. இப்படி சஞ்சீவ தெரிவித்தார். (ளி)

# பொய்ச்சாட்சிக்கு இரு வருடச் சிறை


பறகஹதெனிய, செப். 24

கொலைச் சம்பவம் தொடர்பாக பொய் சாட்சியமளித்த இளைஞர் ஒருவருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கி வடமத்திய மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேய சுந்தர தீர்ப்பளித்தார்.

கெக்கிராவை கும்புக்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த சுரேஸ் விஜேசுந்தர என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த இளைஞர், லீலாவதி விஜேசிங்க என்கின்ற வயோதிபமாது ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் சாட்சியமளித்து வந்துள்ளார்.

சாட்சியத்தில் முரண்பாடு காணப்பட்டதையடுத்து இது பொய்ச்சாட்சியம் எனத் தெரியவந்தது. அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதற்குப் பின்னர் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.




# இலங்கையின் சிறுவர் நரம்பியல் வைத்தியர்கள் இருவரும் கொழும்பு வைத்தியசாலையில்; கண்டியில் அசௌகரியம்

கொழும்பு , செப். 24

இலங்கையில் சிறுவர் நரம்பியல் வைத்திய நிபுணர்கள் இருவரே உள்ளனர்.

இவ்விருவரும் கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் பணிபுரிகின்றனர். இதனால் கண்டி வைத்தியசாலைக்கு வரும் சிறுவர் நோயாளிகள் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்தன.

இவ்விரு வைத்திய நிபுணர்களில் ஒருவர் கண்டியில் பணிபுரிய வேண்டியவர். எனினும் இருவருமே கொழும்பு 'ரிட்ஜ்வே' அம்மையார் வைத்தியசாலையில் பணி புரிகின்றனர்.

இதனால் கண்டி வைத்தியசாலையில் சிறுவர் நரம்பியல் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத இக்கட்டுநிலை ஏற்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு ஒரு வைத்திய நிபுணரை கண்டிக்கு அனுப்ப வேண்டும் என வைத்தியசாலை வட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ளி)

# வத்துகாமம் கல்வி வலயத்தில் சுகாதாரம் - போஷாக்கு திட்டம்

கொழும்பு,செப். 24

வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 'சுகாதாரமும் போஷாக்கும்' எனும் வேலைத் திட்டமொன்றை கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகிறது.

பெருந்தோட்டப் பகுதி பாடசாலை மாணவர்களது கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதில் பெரும் தடையாக இருப்பது மந்தபோஷனையும், குறைந்த வாழ்க்கைத் தரமும் என்று அறியப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்கு அறியாமையே முக்கிய காரணி என்பதும் ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பெருந்தோட்டப் பகுதியிலுள்ள வளங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் - என இச்செயலமர்வுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திலகா குமாரி ஹாமி தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்

இந்தியா - ரூ.2.00

கனடா - ரூ.2.50

அமெரிக்கா - ரூ.2.50

யூகே - ரூ.2.50
(நிலையான தொலைபேசிகளுக்கு)

குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, M.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

அரசின் அமைச்சர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாடுகளின் பிரதிநிதிகள் எனப் பலர் யுத்த அழிவுகளை ஜப்பானின் குரோஷிமாவுக்கு ஒப்பிட்டனர்.

யுத்தத்தின் கொடூர அழிவுகளால் சாவகச்சேரி நகர்ப்பகுதி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப பல வருடங்கள் செல்லுமென கணக்கிட்டுச் சென்றனர்.

மீளக் குடியமர்ந்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொதுமக்கள் அனைவரும் சாவகச்சேரி நகர்ப்பகுதி மீளமைக்கப்படுமா என்ற கேள்வி எழுந்த நிலையில் இருக்க, ஒன்றிணைந்து செயற்பட்டால் மலையைக் கூடத் துரும்பாக மாற்றலாமென்ற மனோதிடத்துடன் மாற்றம் எடுத்த முடிவு குறுகிய காலத்தில் சாவகச்சேரி நகர்ப்பகுதியைப் பழைய நிலைக்குக் கொண்டுவர உதவியது. சந்தையைப் புனரமைத்தால் நகர்ப்பகுதி முழுமைபெறும் என்ற திடமான நம்பிக்கை வெற்றியளித்தது. மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாரிய சிரமதானம் மேற்கொள்வதென திட்டமிடப்பட்டது.

குறித்த திகதியில் வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான அங்கத்தவர்கள் சிரமதானத்திற்கு வருகை தந்திருந்தனர். அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ந.இரவிராஜ், யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, தென்மராட்சிப் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், நகர சபையினர், ஈ.பி.டி.பியினர், ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர், அயல் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் பொதுச்சந்தை, நகரப்பகுதி ஆகியவற்றில் சிரமதானத்தில் ஈடுபட்டனர். பொது சந்தையில் காணப்பட்ட இடிபாடுகளை அகற்ற புல்டோசர் வாகனங்களை அப்போதைய நகர்ப்பகுதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஹலங்கொட வழங்கியிருந்தார்.

நகர்ப்பகுதி மட்டுமல்ல சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, டிறிபேக் கல்லூரி, மகளிர் கல்லூரி, அஞ்சல் அலுவலகம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், ஆலயங்கள் போன்றவை வர்த்தகர்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. இவைகளில் அப்போதைய யாழ்.மாநகரசபை ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் அமரர் க.சுமந்திரன் முன்னின்று செயற்பட்டுள்ளார். ஒவ்வொரு சிரமதானத்திலும் கலந்து கொள்வோருக்கு சிற்றுண்டி, தேநீர் போன்றவற்றினை மன்றம் வழங்கியது.

நவீன சந்தையின் சேதமடையாத விறாந்தைப் பகுதியில் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது. காலையில் விற்பனைப் பொருள்களுடன் வரும் வியாபாரிகள் மாலையில் மிகுதிப் பொருள்களுடன் தாம் வசித்த வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளுக்குச் சென்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகள் செய்யாத நிலையில் பெரும் கஷ்டமான சூழலில் வசித்த வர்த்தகர்கள் கடன்களைப் பெற்று வர்த்தக நிலையங்களைப் புனரமைத்து வணிகத்தினை ஆரம்பித்தனர். சாவகச்சேரி வணிக வளாகம் இன்று பெருவளர்ச்சியுடன் காணப்படுவதற்கு மன்ற அங்கத்தவர்களின் பெருமுயற்சியே காரணம் என்று கூறலாம்.

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் வைத்தியசாலை வசதிகள் இல்லாத வேளையில் மன்றத்தினர் கியூமெடிக்கா வைத்தியசேவை நிறுவனத்தின் நடமாடும் வைத்திய சேவையினை மன்ற அலுவலகத்தில் நடத்தினர்.

மன்ற நிர்வாகத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக யுத்த வேளையில் வர்த்தக நிலையங்களில் கைவிட்டுச் சென்ற வியாபாரப் பொருள்களை மீட்டுச் சென்றவர்களிடமிருந்து 20 மில்லியன் ரூபா பெறப்பட்டு 47 வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் வர்த்தக நிலையத்திலிருந்து மீட்கப்பட்ட ஆவணங்களும் மீளப்பெற்று வழங்கப்பட்டன.

இந்து கலாசார அமைச்சினால் 2003ஆம் ஆண்டு இரண்டாவது உலக இந்து மாநாடு அப்போதைய அமைச்சர் தி.மகேஸ்வரனின் அனுசரணையுடன் மன்றினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வெகு



சிறப்பாக நடத்தப்பட்டது.

1990 தொடக்கம் 1992வரை மன்றின் தலைவராக இருந்து மன்றின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக செயற்பட்ட கு.தவராஜசிங்கம் 2004ஆம் அண்டு மரணமடைந்ததையிட்டு மன்றினால் வழங்கப்பட்ட மரண சகாய நிதியினை (ரூபா 25 ஆயிரம்) நலத்திட்டம் ஒன்றுக்கு பயன்படுத்துமாறு அன்னாரின் குடும்பத்தினரால் விடுத்த கோரிக்கையை அடுத்து அத்தொகை வைப்பிலிடப்பட்டு 2005ஆம் ஆண்டு தொடக்கம் கு.தவராஜசிங்கம் விதவை உதவு தொகை நிதியம் என்னும் பெயரில் வருடாவருடம் விதவைகளுக்கு நிதி வழங்கப்பட்டு வருகிறது.

*(தொடரும்)*

# சப்பச்சி மாவடிப் பிள்ளையார்




*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் விஸ்வநாதர் தாமோதரம்பிள்ளை இந்து ஆலயத்தைப் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்று நடத்தினார். இவரது காலத்தில் வைரக்கல் பொழிந்து மூலஸ்தானம், அர்த்தமண்டபம் ஆகியவற்றையும் சுண்ணாம்புக் கற்களால் மகா மண்டபத்தையும் தகரக் கூரைபோட்டு பலிபீட மண்டபத்தையும் அமைத்து ஆலயத்திற்கு வேண்டிய திருப்பணிகளை பூர்த்தியாக்கினார்.

திருப்பணிகள் பூர்த்தி செய்த பின்னர் வேதாரணியத்திலிருந்து குருமார் பலரை வரவழைத்து 11.02.1932ஆம் ஆண்டு (ரேவதி நட்சத்திரத்தில்) மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார். இதே தினத்தில் வருடாவருடம் ஆலயத்தின் மணவாளக்கோல பூஜை நடத்தி அலங்கார உற்சவத்தின் ஆரம்ப தினமாக அனுஷ்டிக்கின்றனர். தற்போது தைமாத ரேவதி நட்சத்திரத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெற்று வருகிறது.

தாமோதரம்பிள்ளை அவர்களின் காலத்தில் தாமு வல்லிபுரம் என்னும் அடியார் ஆலய பரிபாலனத்தை மேற்பார்வை செய்ததுடன் ஆலயத்தில் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் தேவார, திருவாசக தோத்திரம் போன்றவற்றைப் பாடி சமயப் பணிசெய்தார். ஆலய வரலாற்று நூலையும், தோத்திர மலரையும் தொகுத்து வெளியிட்டார். அத்துடன் விநாயக சஷ்டி, பெருங்கதை, மார்கழி உதயபூஜை ஆகியவற்றைச் சிறப்பாக நடத்தி வந்தார்.

வி.தாமோதரம்பிள்ளையின் பின்னர் அவரது மகனான வைத்தியக் கலாநிதி பொன்னுச்சாமி தாமோதரம்பிள்ளை ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். இவரது காலத்தில் 1957ஆம் ஆண்டு 50 ஆயிரம் ரூபாவுக்கு மேலான தொகையில் பலிபீட மண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை, கோபுரவாசல், வெளிமண்டபம் ஆகியவற்றைப் புதிதாகவும் அழகாகவும் ஓர் குறுகிய காலத்திற்குள் அமைத்துக் கொடுத்தார்.

1977ஆம் ஆண்டு ஆலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்து 08.06.1977ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இத் திருப்பணிகளைப் பூர்த்தி செய்து தொடர்ந்து ஆலயப் பணிகளில் ஈடுபட்டுவந்த பொன்னுச்சாமி தாமோதரம்பிள்ளை 32 வருடங்களுக்கு முன்னர் சிவபதமடைந்த தனது தந்தை இயற்கையெய்திய தினத்தில் சிவபதமடைந்தது விநாயகரின் அற்புத நிகழ்வாக அமைந்தது.

பொன்னுச்சாமி தாமோதரம்பிள்ளையின் மகளான கமலாவதியும் அவரது கணவனான சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் க.மண்டலேஸ்வரனும் ஆலயத்தில் பல திருப்பணிகளை மேற்கொண்டனர்.

1959ஆம் ஆண்டு ஆலயத்திற்கு வைரக் கல்லினால் மணிக்கோபுரம் அமைத்து 500 இறாத்தல் எடையுடைய மணியையும் செய்வித்து மணியேற்றி அபிஷேகம் செய்தனர்.

அத்துடன் பொன்னுச்சாமி தாமோதரம்பிள்ளையின் மூத்த மகளின் மகனான சரவணமுத்து பாலகிருஷ்ணமூர்த்தி வைரக் கல்லால் வைரமூர்த்தி கோயிலைக் கட்டி 05.12.1960ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து முடித்தார்.

வைத்தியக் கலாநிதி பொன்னுச்சாமி தாமோதரம்பிள்ளையின் மறைவின் பின்னர் அவரது மகனான சரவணமுத்து தாமோதரம் ஆலயத்தின் பொறுப்பினை ஏற்றார்.

திருமதி சிவகங்கை பரமநாதன் விநாயகர் பவனிவர எலி வாகனத்தையும் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள ஆ.சுப்பையா என்பவர் உற்சவமூர்த்தியின் அழகுபொலிவு விளங்கும்படி ஓர் அழகிய திருவாசியையும் சற்குணசிங்கம் சிவஞானவதி குடும்பத்தினர் வள்ளி, தெய்வயானை சமேத சுப்பிரமணியர் விக்கிரகம் செய்வித்தும் ஆலயத்திற்கு வழங்கியுள்ளனர்.

இவ் ஆலய அடியார்களின் முயற்சியினால் ஆலயத்தின் கிழக்கு, வடக்கு வீதிகளில் சுற்றுமதில் கட்டப்பட்டு பூங்காவனம் உருவாக்கி செங்கழு நீர்த்தடாகமும் அமைக்கப்பட்டது. இந்தப் பூங்காவனத்திலிருந்து பறிக்கப்படும் மலர்களே விநாயகப் பெருமானுக்குத் தினமும் சூட்டப்படுகிறது.

*(தொடரும்)*

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



எதிர்பாராத திடீர் செலவுகளை சந்திக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் உங்களிடம் பணம் கேட்கலாம் அல்லது நீங்கள் அவர்களிடம் கேட்கலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளவும். களவுத் தொல்லையுண்டு.

### இடபம்



மனதை வாட்டிய கவலைகள் நீங்கி, சந்தோஷம் மகிழ்ச்சி அதிகரிக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நண்பர்களிடம் பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். சுலபமாக சில வேலைகள் முடியும்.

### மிதுனம்



கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். முக்கியமான சில வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாமல் நீங்களே செய்ய நேரிடலாம். ஒருவரிடம் கைமாற்றாகக் கொடுத்த பணம் திரும்ப வரும். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திக்கலாம்.

### கடகம்



இரண்டு நாள்களாக இழுத்தடித்த வேலை ஒன்று இன்று முடிவுக்கு வரும். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரை பார்க்கச் செல்லலாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வீர்கள். சிறிய விடயம் ஒன்றை நினைத்து பெரிய அளவில் பதட்டம் அடைவீர்கள். சிலருக்காக காத்திருக்கலாம்.

### சிங்கம்



பயணங்களால் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். குறைவான செலவில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம்.

### கன்னி



உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். வரவு ஒன்றை எதிர்பார்த்து கையில் இருக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். அயலாருடன் சேர்ந்து கூட்டாக சில காரியங்களைச் செய்வீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### துலாம்



பொறுமையாகச் செயற்பட்டு எந்த வேலையையும் கச்சிதமாக முடிப்பீர்கள். ஒரு விடயத்தில் ஆதங்கம் ஏற்பட்டாலும், மற்றொரு விடயத்தில் திருப்தி காண்பீர்கள். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றிப் புதிய பொருள்கள் வாங்குவீர்கள். பண உதவி கேட்ட சிலருக்கு மற்றவர்களிடம் வாங்கிக் கொடுப்பீர்கள். உற்சாகம் கூடும்.

### விருச்சிகம்



சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். நண்பர்கள் சிலருக்கு உதவி செய்வதாகச் சொல்லி விட்டு, அதில் மாற்றங்கள் செய்யலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில செலவுகளைச் செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். முக்கிய செய்தி கேட்கலாம்.

### தனுசு



குடும்ப உறுப்பினர்கள் சிலரிடம் சண்டை போட்டு விட்டு, பின்னர் சமாதானமாகச் செல்வீர்கள். பெற்றோர் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் ஆரம்பத்தில் குழப்பங்களைச் சந்தித்தாலும், பின்னர் தெளிவான முடிவு எடுப்பீர்கள். வழக்கமான வேலை ஒன்றை செய்யாமல் திடீரென ஒத்திவைக்கலாம்.

### மகரம்



உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். புதிய முயற்சிகளில் எதிர்பாராத வெற்றி கிடைக்கும். தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள். ஏதோ ஒருவழியில் சிறு பணம் அல்லது பொருள் ஆதாயங்களைப் பெறலாம்.

### கும்பம்



வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உங்களின் பழைய பெருமைகளைப் பற்றி அயலாரிடம் பேசுவீர்கள். சிலரைக் கேலி கிண்டல் செய்து அவர்களின் அதிருப்திக்கு ஆட்படலாம். சில பொருட்களை மறதியாக வைத்து விட்டுத் தேடலாம்.

### மீனம்



உங்களின் திறமையான செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பிரியமான நண்பர்கள் அல்லது தோழிகளுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். செல்வாக்கு கூடும் நாள்.

## தமிழர் படுகொலைகளை நினைவுகூருவது எந்தவோர்-இனத்திற்கும் எதிரானதல்ல

### அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

''தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட தினத்தை நினைவுகூரும் நிகழ்வை எந்தவொரு இனமும் தங்களுக்கு எதிரான நிகழ்வாகவோ - செயலாகவோ - கருதக் கூடாது'' - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிராமத்தில் கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் அப்பாவி தமிழ் மக்கள் 17 பேர் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டதனை நினைவுகூரும் முகமாக கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினர் மெழுகுவர்த்தி வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்தத் துக்கத்தின் அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசிய் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அரியநேத்திரன் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் அப்பாவிப் பொது மக்கள் வகைதொகையாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். இவற்றில் ஒன்று [illegible]ருப்புப் படுகொலை. இந்த 1990ஆம் ஆண்டு படுகொலைகளை யாராலும் நினைவு கூராமல் இருக்க முடியாது. 20 ஆண்டுகள் கடந்து விட்டாலும் உயிர் நீத்த அந்தக் குடும்பங்களின் துயரங்கள் நீங்கவில்லை. உறவுகளை இழந்தவர்களின் மனங்களிலும் எப்போதும் ஏக்கம் நிறைந்திருப்பதைக் காண்கின்றேம்.

ஆனால், தற்போது இப்படியான அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை நடத்துவதற்கு சிலபேர் விரும்புவது இல்லை. இது மாறவேண்டும், படுகொலை செய்யப்பட்டவர்களைக் கண்டிப்பாக நினைவுகூர வேண்டும். அத்துடன் அவை எவ்வாறு நிகழ்ந்தது என்பதனையும் எமது அடுத்த சந்ததியினர் அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் இவ்வாறான திட்டமிட்ட படுகொலைகளிலிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

- இப்படித் தெரிவித்தார். (சி)

வடக்கின் அத்தியாவசியம்



நீர் வாழ்வாதாரம், வழங்குவது அன்டன்

உங்கள் அன்றாட வீட்டுப் பாவனைக்குத் தேவையான சுத்தமான, பாதுகாப்பான நீரை. வழங்கும் சேவையில் 50 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கோண்டது அன்டன். எனவே தான் அன்டன் தரும் உன்னதமான சேவையை உங்கள் வீட்டிலேயே நீங்கள் பெறமுடிகிறது.

ANTON

சென். அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ் குருப் (பிரைவட்) லிமிட.

GERMAN SWISS

மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு: 10, PALALY ROAD, JAFFNA. T.P.: 0771604823

(103656)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:

ROYAL Industries

Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா

நறுமணப்

பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானியும் குடிகாரனும்



பாயஸுத் பிஸ்தாமி என்பவர் ஒரு பெரிய ஞானி. அவர் ஒரு நாள் இரவு மிகவும் நீண்ட நேரம் மசூதியில் இருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

வழியில் ஒரு குடிகாரன்; அவன் கையில் ஒரு இசைக்கருவி. அதை அந்தக் குடிகாரன் கன்னாபின்னாவென்று மீட்டிக்கொண்டு வாய்க்கு வந்தபடி எதையோ பாட்டு என்று நினைத்துப் பாடிக் கொண்டிருந்தான். அதோடு நில்லாமல் அந்தப் பக்கமாகப் போகிறவர்கள், வருகிறவர்கள் எல்லோரையும் அவன் கண்டபடி திட்டிக்கொண்டிருந்தான்.

பாயஸுத் அந்தப் பக்கம் சென்றார். அவனது நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டு, "ஏனப்பா இப்படி நீ நடந்து கொள்ளலாமா?" என்று கனிவுடன் புத்திமதி கூற ஆரம்பித்தார். உடனே குடிகாரனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் தன் கையில் வைத்திருந்த வாத்தியக் கருவியால் பாயஸுத்தரின் தலையில் ஓங்கி அடித்தான். அவருக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது. இசைக்கருவியும் இரண்டாக உடைந்து போயிற்று.

இவ்வளவு தூரம் நடந்தும் அந்த மாபெரும் ஞானி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. தன் தலையைப் பிடித்துக்கொண்டே சென்று விட்டார். மறுநாள் அந்தப் பெரியவர் என்ன செய்தார் தெரியுமா? கொஞ்சம் இனிப்புப் பண்டங்கள்- கொஞ்சம் பணம் இவை இரண்டையும் ஓர் ஆள் மூலம் அந்தக் குடிகாரனுக்கு அனுப்பி வைத்தார்.

குடிகாரனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன விவரம்?" என்று விசாரித்தான். வந்த ஆள் ஒரு கடிதத்தை நீட்டினார். அதில் விவரம் இருந்தது. ஞானி பின்வருமாறு எழுதியிருந்தார்.

"உங்களுடைய இசைக்கருவி உடைவதற்கு என் தலை காரணமாகிவிட்டது. அதற்காக நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். அதற்காகத்தான் பணம் அனுப்பியிருக்கிறேன். நீங்கள் புதிதாக வேறு ஓர் இசைக்கருவியை வாங்கிக் கொள்ளுங்கள். பின்னொரு விஷயம் நேற்றிரவு என்னிடம் ஏகப்பட்ட கசப்பான வார்த்தைகளை நீங்கள் பேசியதாக நினைக்கிறேன். இத்துடன் அனுப்பியிருக்கும் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்டு உங்கள் நாவில் இருக்கும் கசப்பை மாற்றிக் கொள்ளுங்கள்".

கடிதத்தைக் குடிகாரன் படித்தபோது அவனது குடிமயக்கம் தெளிந்திருந்தது. எனவே ஞானியின் கடிதத்தைப் பார்த்தவுடன் அவனுக்கு வெட்கமாகிவிட்டது. தலை குனிந்தான்; யோசித்தான்.

சிறிது நேரத்தில் அவன் தன்னுடைய நண்பர்கள் சிலரையும் அழைத்துக்கொண்டு அந்த ஞானி இருக்கும் இடம்தேடிப் போனான். அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். "பெரியவரே! தெரியாமல் நான் இந்தப் பாவச் செயலைச் செய்து விட்டேன். அதற்காக என்னை மன்னியுங்கள். உங்களது பொறுமையும் போதனையும் என் கண்களைத் திறந்து விட்டது. இனிமேல் நானும் என் நண்பர்களும் நல்ல வழியில் திருந்தி வாழப் போகிறோம்" என்று தெரிவித்துக் கொண்டான்.

ஞானி செய்த 'நன்னயம்' குடிகாரனை எப்படித் திருத்தியிருக்கிறது பார்த்தீர்களா?

**கோ.சுவாமிநாதன்.**

# பெண்ணின் மதிப்பு

இளம் பெண்களை மன அழுத்தத்தில் தள்ளும் இன்னொரு விடயம் கலாசார தடுமாற்றம். வசதியான பெண்கள் அணிகிறார்கள் என்று தங்கள் சூழலுக்குப் பொருந்தாத ஆடைகளை அணிவதிலிருந்து, மாறிவரும் உலகில் தொலைபேசிகளோடு மற்றவர்கள் போல் எம்மாலும் வாழ முடியவில்லையே என்ற ஏக்கம்தான் இந்த மன அழுத்தத்துக்குக் காரணம்.

காலத்தோடு ஒட்டி வாழ்வது தப்பு இல்லை. ஆனால் அதற்காக கலாசாரத்தைப் பறிகொடுத்து அவற்றுக்கு அடிமையாக வாழ்வது மனக்குழப்பத்தையே உண்டு பண்ணும். நெற்றியில் பொட்டு, தலைக்கு கிளிப், உதட்டுக்குச் சாயம் இப்படியான ஆடம்பரச் செலவுக்கு எம்மை அடிமையாக்கும் போது எமது வருங்காலம் எங்கே போய் முடியும்? திருமணமான பின் இப்படி வாழ முடியுமா? எமது பண்பாட்டுக்கு ஏற்றாற்போல் தலையில் பூமாலை, உடலைச் சுற்றிய சருகைச்சாறி இவை அனைவர் கண்களையும் திரும்பிப் பார்க்க வைக்கும்.

மற்றவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை விட நாம் எப்படி வாழ்கிறோம் என்பதுதான் முக்கியம். பெண்கள் பெற்றோரிடம் அனைத்தையும் ஒளிவு, மறைவின்றிப் பேசப் பழகிக் கொள்ளல் வேண்டும். இதன் போது நாம் எமது மனப்பாரத்தை வெளியகற்றிவிட்ட நிம்மதி கிடைக்கும்.

தொலைபேசிப் பாவனை அதிகரிப்பு எம்மத்தியில் பரவலடைந்து விட்டது. "விரலுக்கு ஏற்றது தான் வீக்கம்". வேண்டாத செலவு எமக்கு எதுக்கு?

பெண்கள்தான் கலாசார சீரழிவுக்குக் காரணம் என்பது மாறாத சுவடியாகி விட்டது. இவற்றில் இருந்து விடுபட எம்மை நாம் மாற்ற வேண்டும். எமது பண்பாட்டை மதித்து அதற்கேற்றால் போல நாம் வாழப் பழகிக் கொள்வோம்.

**க.நிஸா.**

# மூலிகைகளும் நோய்களும்

அறுகம்புல்:
சிறுநீரில் குருதி வெளியேறுவதைத் தடுப்பதற்கும்,கண் வலிப்பைப் போக்குவதற்கும் இதன் சாறு நன்மை தரும்.

நெல்லி:
சிறுநீரகக் கோளாறு, மஞ்சள் காமாலை, அஜீரணம், கண்வலி போன்ற நோய்களுக்குச் சிறந்தது.

ஏலக்காய்:
வயிற்றுவலி, ஜீரணக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி, பலவீனம் இவற்றுக்குச் சிறந்தது.

எலுமிச்சை:
பசியினைத் தூண்டும், வாந்தி, வயிற்றுவலி, ஜீரணக் கோளாறு, கல்லீரல் தொல்லை, நுரையீரல் நோய்களைத் தீர்க்கும்.

நாரத்தை:
மலச்சிக்கல், சிறுநீர்க்கல் ஆகிய நோய்களைத் தீர்க்கும், குளிர்ச்சி தரக்கூடியவை. காய்ச்சலைத் தணிக்கும். பசியினைத் தூண்டும்.

மஞ்சள்:
வயிற்றுவலிக்கு நல்லது. வீக்கம், மூட்டுவலி போன்றவற்றுக்கும் ஆஸ்துமா, மூலநோய், சுளுக்கு, காயங்களுக்கும் சிறந்தது.

துவரை:
இதனை உப்புடன் கலந்து உட்கொண்டால் மஞ்சள் காமாலை நோய் தீரும்.

பப்பாளி:
சிறுநீர் கழிவை அதிகரிக்கும். வட்டப்புழு, பூச்சிகளை அகற்றும். தோலில் ஏற்படும் கரும்புள்ளி பருக்களை அகற்றும். மாதவிடாய்ப் போக்கை அதிகரிக்கும். இதன் இலையின் சாறு காய்ச்சல் நீக்கு. இருதய நோய்களைக் குணப்படுத்தும்.

முடக்கத்தான்:
முதுகுவலி, முடக்குவாதம், தோல் நோய்கள், வாந்தி, மலமிளக்கி இவ்வாறான நோய்களுக்கு இதன் இலைகளிலிருந்து கசாயம் செய்து குடிக்கலாம்.

சவுக்கு:
இதன் பட்டை, விதை இரண்டையும் கசாயம் செய்து குடித்தால் வயிற்றுப் போக்கு, சீதபேதி, குடல் வலி நோய்களைத் தீர்க்கும்.

மிளகாய்:
இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும், சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்யலாம்.

**க.நிலா.**

# வினை விதைத்தவன் வினை அறுப்பான்

"தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்பார்கள், இது ஏதோ ஒரு வகையில் உண்மைதான். நாம் செய்யும் செயல்கள் அடுத்தவர்களைப் பாதிக்காத வண்ணமும், துன்புறுத்தாத படியும் இருக்கவேண்டும்.

ஒரு சமயம் ஓர் அந்தணர் யாகம் ஒன்றை நடத்துவதற்காக, வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அந்த யாகத்தில் பலியிடுவதற்காக ஆடு ஒன்றையும் கொண்டுவந்து நிறுத்தினார். அந்த ஆட்டுக்கு மாலை அணிவித்து, தீபாராதனையும் பலிகொடுப்பதற்காகத் தன் அரிவாளை ஓங்கினார். திடீரென ஆடு சிரிக்கத் தொடங்கியது. சிரித்த ஆட்டின் அருகே தன் காதைக் கொடுத்தார் அந்தணர். அப்போது அந்த ஆடு "ஐயா சொற்ப பலனைத் தரும் இந்த யாகத்திற்காகவா என்னைப் பலியிடப்போகிறீர்கள்" என்று கேட்டது.

அதைக் கேட்ட அந்தணர் "நீங்கள் யார்? எப்படி இந்த ஆட்டின் உருவம் உங்களுக்குக் கிடைத்தது? எதற்காக இவ்வாறு சிரிக்கிறீர்கள்?" என்று வினவினார்.

அதற்கு அந்த ஆடு "அந்தணரே! நான் எனது முதல் பிறவியில் உம்மைப் போன்றதொரு அந்தணராகவே பிறந்தேன். எனக்குப் பல காலமாகப் பிள்ளைப் பாக்கியம் இருக்கவில்லை. பல யாகங்களின் பலனாக ஓர் அழகான ஆண்குழந்தை பிறந்தது. ஆனால் திடீரென என் குழந்தை நோய்வாய்ப்பட்டு, வைத்தியங்கள் எவையுமே பலனளிக்காத நிலையில் சாவின் விளிம்பில் துடித்துக்கொண்டிருந்தது. வேளை, சிறிய ஆட்டுக் குட்டி ஒன்றைப் பலி கொடுத்தால் என் குழந்தை பிழைக்கும் என கூறிய வேறு சிலரின் பேச்சைக்கேட்ட நான் பிள்ளைப் பாசத்தால் யாகம் ஒன்றை நடத்தி, ஆட்டுக்குட்டி ஒன்றையும் பலி கொடுத்தேன்.

இவை அனைத்தையும் தன் கண்முன்னே பார்த்த தன்குட்டியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதை நினைத்து தாய் ஆடு கதறி அழுதது; வேதனையால் மண்ணிலே புரண்டது. பின் அந்தத் தாய் ஆடு "பல பிறவிகளைப் பெற்று பல கஷ்டங்களையும் அனுபவித்து, பின் ஆடாகப் பிறப்பாயாக" என்று எனக்கு சாபமிட்டுத் தானும் மடிந்து போனது.

இதைக் கேட்ட பிராமணர் "நீர் முதல் எடுத்த பிறவிகளைக் கூறமுடியுமா?" எனக் கேட்டார்.

ஆடு மீண்டும் பேசத் தொடங்கியது. "ஐயா நான் முதலில் குரங்காகப் பிறந்தேன், குரங்காட்டி ஒருவனால் படாத பாடுபடுத்தப்பட்ட பின் என் பிறவியை முடித்துக் கொண்டேன்.

இரண்டாவதாக ஒரு நாயாகப் பிறந்து எச்சில் சோற்றை உண்டு வயிறு வளர்த்தேன்.

மூன்றாவது பிறப்பு குதிரை. எனவே மூட்டைகளையும் மனிதர்களையும் சுமந்து அல்லல்பட்டே இறந்தேன்.

பின்பும் சிறிய சிறிய பூச்சி புளுக்களாகவும் உருவெடுத்தேன். இறுதியாகவே இவ் ஆட்டுருவம் பெற்றேன்.

அந்தணரே நீரும் என்னைப் பலியிட்டு என்னைப் போன்று வினைகளைச் சுமக்க வேண்டாம், இதற்குப் பதில் ஸ்ரீ பகவானின் உபதேசத்தை உச்சரித்தாலே யாகத்தின் உச்சப்பலனை அடையலாம்" எனக் கூறியது அந்த ஆடு.

இது உண்மைதான். பாவங்களைச் செய்தால் நாம் மேலும் பாவிகளாகிப் பல பாவங்களைச் சுமக்க நேரும். நாம் செய்யும் வினைகள் யாவும் எம்மையே சேரும் என்பதற்கு ஆடாகப் பிறந்த அந்தணர் சிறு எடுத்துக் காட்டு. மனிதர்கள் நாம் பகுத்தறிவு கொண்டவர்கள். எதையும் பகுத்தாராயும் ஆற்றல் படைத்தவர்கள். எனவேதான் எம்மால் இயன்றவரை பாவங்களைத் தவிர்த்து பரிசுத்தமாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

**எஸ். செந்தமிழ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளைத் தொலைத்து ஒளியைத்தேடி
# இனிய வாழ்வு இல்லத்தின் நெடிய பயணம்

*(நேற்றைய தொடர்ச்சி....)*

உடலில் குறைபாடுகளோடு பிறக்கின்றவர்களைத் தீண்டத்தகாதவர்கள்போல நோக்குகின்ற கண்களே எமது சமூகத்தில் அதிகம். ஆயினும் உண்மையில் இத்தகைய நோக்கு தவறானதொன்றாகும்.தம்மைப் போல அந்த மாணவர்களும், ஏன் சமூகத்தில் கட்புலன் செவிப்புலன் அற்று இருக்கும் ஏனைய பிள்ளைகளும் இருக்க வேண்டும் - அவர்களுக்கும் இந்த உலகில் வாழ்க்கை இருக்கின்றது. அதை அந்தப் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற பரந்த மனப்பாங்குடன் இந்த சங்கம் உருவாக்கப்பட்டு அந்த மாணவர்களால் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இனியவாழ்வு இல்லத்தினை மீளமைக்க முனைவோர் சங்கத்தின் மூலம் முதற்கட்டமாக நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 2009 ஆம் ஆண்டில் உயர்தர பரீட்சை எழுதவிருந்த மாணவர்களை வெளி யில் கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்னும் நிவாரணக் கிராமங்களிலும், மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளிலும் இருந்த இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகளில் 60 பேர் வரையில் இனங்காணப்பட்டு அவர்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் விசேட தேவைகளுக்குரிய மாணவர்களுக்கான பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக சேர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மீளமைக்க முனைவோர் சங்கத்தினர் நாட்டின் அனைத்து பாகங்களிலும் இருந்து இன, மத, மொழி கடந்து கட்புல, செவிப்புலத் தேவையுடையவர்களை இனங்கண்டு அவர்களின் வாழ்வுக்காக வழிகாட்ட உதவுவதே தமது நோக்கம் என்று குறிப்படுகின்றனர்.

இந்த நோக்குடன் இதுவரையில் பாதிக்கப்பட்ட 200இற்கு மேற்பட்ட பிள்ளைகளைத் தாம் இனங்கண்டுள்ளதாகவும் குறிப்படுகின்றனர்.

எனினும் இனியவாழ்வு இல்லத்தை மீளமைக்க முனைவோர் சங்கமானது யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இயங்குவதாலும் ஏற்கனவே இனியவாழ்வு இல்லம் இருந்த வள்ளிபுனம் பகுதியில் இதுவரை மீள்குடியேற்றம் இடம் பெறாமையாலும் மாணவர்களை இணைத்து இல்லத்தை மீள ஆரம்பக்கவோ சேவை வழங்கவோ முடியாதுள்ளது.

மீளமைக்க முனைவோர் சங்கத்தினர் இல்லத்தினை இயக்குவதில் இப்போது இரு வேறு பிரச்சினைகளுக்குள் இருக்கின்றனர். ஒன்று நிதி பொருளாதார பிரச்சினை மற்றயது இடநெருக்கடி. இதில் வள்ளிபுனம் பகுதியில் போதிய இட வசதி இருந்தாலும் அங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கட்டட, தளபாட வசதிகள் மற்றும் சொத்துக்கள் யாவும் அழிவடைந்து விட்டன. ஆகையால் அவற்றினை மீள நிர்மானிப்பதற்கு பெருந்தொகையான நிதித் தேவைகள் இவர்களுக்கு இருக்கின்றது,

அடுத்து ஏனைய தேவைகளாகப் பிள்ளைகளைப் பராமரித்து அவர்களது அடிப்படைத் தேவைகளையும் நிறைவுபடுத்தி தொடர்ந்து அவர்களை பூரண மனிதர்களாக வளர்த்தெடுப்பதற்கான தொடர் நிதித் தேவை இருக்கின்றது.

கடந்த காலங்களில் இந்த இல்லத்திற்கென உதவி புரிந்த புலம் பெயர் உறவுகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பரதி நிதிகளது தொடர்புகளும் இப்போது கிடைக்காத நிலையிலே காணப்படு கின்றது.

வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லம்



இதனால் தற்காலிகமாக பராமரிக்கப்படும் பிள்ளைகளையும் புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட பிள்ளைகளையும் உள்வாங்கி அவர்களைப் பராமரிப்பதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

14ஆவது ஆண்டில் கால்பதித்துள்ள இனிய வாழ்வு இல்லம் இந்த ஆண்டில் ஒரு புதிய மாற்றத்துடன் சமூகத்தில் விசேட தேவைக்குரியவர்களாக இருக்கும் பிள்ளைகளுக்கு உதவி அவர்களைத் தங்களுடன் இணைத்து சமூகத்தில் முன்மாதிரியான வர்களாக மாற்றி குறை தீர்க்க எண்ணி நிற்கின்றது.

இந்த நாளில் தன் போன்று குறைபாடுள்ள பிள்ளைகள் சமூகத்தில் சிறந்த மனிதர்களாக வளர வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து யுத்தத்தின் போது மரணமடைந்த அமரர் மாசிலாமணி என்ற மாந்தரை நினைவு கூர்ந்து 14வது ஆண்டு விழாவை ஒரு நினைவு நிகழ்வாகவும் மீளமைக்க முனைவோர் சங்கத்தினர் கடந்த 19ஆம் திகதி கடைப்பிடித்தனர்.

இந்ச் சந்தர்ப்பத்தில் புலம் பெயர் உறவுகளிடமும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் சமூக நலன் விரும்பிகளிடமும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மறுவாழ்வளிக்க முன்வரும்படி இனிய வாழ்வு இல்லத்தினை மீளமைக்க முனைவோர் சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உலகில் பிறந்த மனிதர்கள் எவற்றாலும் குறைபாடுடையவர்கள் அல்லர். எல்லோரும் மனிதர்கள் - அனைவருக்கும் வாழ்க்கை என்ற ஒன்று உள்ளது. எனவே இயற்கை யாவோ இடையிலே பாதிக்கப்பட்டு சமூகத்தில் தமக்கு இடம் இல்லை என ஒதுங்க நினைக்கும் மனிதர்களை இணைத்து அவர்களை முன்மாதிரியானவர்களாக மாற்ற பணிபுரியும் மீளமைக்க முனைவோர் சங்கத்துக்கு கைகொடுத்து விசேட தேவைக்குட்பட்ட உறவுகளுக்கு கைகொடுக்க முன்வருவோம்.

**தொடர்புகளுக்கு -:**

**தொ.பே. 0214922702,0771102405**

**இனிய வாழ்வு இல்லத்தை மீளமைக்க முனைவோர் சங்கம்**

**54/4, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். எனும் முகவரியில் தொடர்பு கொண்டு தங்களாலான உதவிகளினை வழங்க முடியும்.**

(முற்றும்)

# பௌத்த பெறுமானங்களின் அடிப்படையில் அபிவிருத்தி இலக்குகளை அடையத் திட்டம்

## நியூயோர்க்கில் வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு



நியூயோர்க்,செப்.24

பௌத்த பெறுமானங்களின் அடிப்படையில் புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளை அடையத் திட்டமிட்டுள்ளார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.நாவின் புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளின் செயற்பாட்டுச் சுட்டிகளை இலங்கை தனது வரவு - செலவுத் திட்டக் கொள்கைகளில் இணைத்துள்ளது.

அதனால், இலங்கை ஏற்கெனவே புத்தாயிரமாண்டின் இலக்குகளை அடைந்துள்ளது அல்லது அவற்றை அடைவதற்கான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது.

பௌத்த நெறிமுறைகளைப் பின்பற்றி சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

நாட்டின் பொருளாதார சமூகக் கொள்கைகளில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் வளமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

ஆரம்ப நிலைக் கல்வி, இரண்டாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆகியவற்றில் இலங்கையில் பால்நிலை சமத்துவம் உச்சளவில் பேணப்பட்டு வருகிறது.

தொழிற் சந்தையில் போட்டி போடக்கூடிய வகையில் கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய சவால்களையே இலங்கை தற்போது எதிர்நோக்கி வருகிறது. அதே வேளை, சிசுக்கள் மற் றும் ஐந்து வயதுக்குக் குழந்தைகளின் இறப்பு வீதம் வெகுவாகக் குறைந்துள்ளது.

1990ஆம் ஆண்டில் ஆயிரம் குழந்தைகளுக்கு 32 ஆக காணப்பட்ட இறப்பு வீதம் 2009 ஆம் ஆண்டில் 11.3 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

தொற்றாத நோய்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்து இலங்கை கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

உதவி வழங்கும் நாடுகளினால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.

உதவி வழங்கும் நாடுகள் யதார்த்தமான முறையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான உதவிகளை வழங்க வேண்டும்.

உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பெரும் நெருக்கடி எதிர்நோக்கியன.

துரதிஸ்டவசமாக, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வெளிச் சக்திகளிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

நிலையான அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்ல வேண்டுமாயின் இடையூறில்லாத ஒத்துழைப்பு அவசியமானது.

புத்தாயிரமாண்டு இலக்குகளில் கணிசமானளவு இலக்குகளை இலங்கை எட்டியுள்ளது.

மூன்று தசாப்த கால யுத்தம் மற்றும் ஆழிப் பேரலை அனர்த்தம் போன்ற அழிவுகளைச் சந்தித்த போதிலும் இலங்கை அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய பயணத்தைக் கைவிடவில்லை.

புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளை கருத்திற்கொண்டே இலங்கையில் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸி)

## பொது அறிவித்தல்

வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
கிளிநொச்சி, முல்லைத்தீவு

மேற்படி சங்கத்தில் நிரந்தர பணியாளர்களாகப் பணி புரிந்தவர்களில் இதுவரை சங்கத்துடன் பணிக்கு இணைந்து கொள்ளாதோர் உடனடியாகத் தங்களின் தகவல்களை திருமுறுகண்டியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தகவல்களை உறுதிசெய்யாதோர் தாங்களாகவே பணிவிலகியவர்களாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

வடபிராந்தியபாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கம், திருமுறுகண்டி.

**திரு.அ.கேதீஸ்வரன்,**
**தலைவர்.**

## தேவாலயத்தில் திருட்டு

சண்டிலிப்பாய், செப். 24

இரவுநேரம் தேவாலயத்திற்குள் தந்திரமாக நுழைந்த திருடன் அங்குள்ள உண்டியல் பெட்டியில் இருந்த பணத்தைத் திருட எடுத்த முயற்சி பயனளிக்காததினால் அங்கு காவலுக்கு இருந்தவரின் கையடக்கத் தொலைபேசியை மட்டும் திருடிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் மானிப்பாய் அந்தோனியார் தேவாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இது பற்றிக் கூறப்படுவதாவது:

தேவாலயத்தில் இரவுநேரக் காவலாளியாகக் கடமையாற்றிவரும் ஒருவர் சம்பவதினம் தேவாலயத்திலுள்ள சகல கதவுகளையும் பூட்டிவிட்டு ஒரு கதவை மட்டும் சாத்திவிட்டு வெளியே சென்றுள்ளார். அங்கு ஏற்கனவே பதுங்கி இருந்த திரு டன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தோனியார் சுருவத்திற்குக் கீழேயிருந்த உண்டியல் பெட்டியின் பின் கதவை உடைக்க முயன்றுள்ளான். கதவு திறக்கப்படாததால் ஏமாற்றமடைந்த திருடன் காவலாளியின் கையடக்கத் தொலைபேசியை எடுத்துச் சென்றுள்ளான்.

(ஒ-115)

## தந்தையின் இமையை கடித்துக் குதறிய மகன்

தென்மராட்சி, செப். 24

ஓடிக்கொண்டிருந்த ஓட்டோவில் இருந்து குதிக்க முயன்றார் மகன். அவரைத் தடுத்த தந்தையின் கண் இமையைக் கடித்துக் குதறினார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சரசாலையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைபெற்ற மனநோய் சிகிச்சை கிளினிக்குக்கு தனது மகனை அழைத்துவந்த தந்தைக்கே இந்தக் கதி நேர்ந்தது.

சரசாலை தெற்கைச் சேர்ந்த 60 வயதுடைய தந்தை ஒருவருக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்த நபருக்கு கண் இமையில் ஆறு தையல் போடப்பட்டுள்ளது.

(ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




17.04.1994

✱எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் பெயரைப் பயன்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்தை அனுமதிப்பதில்லை என பிரேமதாசவின் குடும்ப உறுப்பினர்கள் முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவின் கொள்கைகளை மறந்ததினால் தான் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தெரிவிப்பு.

18.04.1994

✱ எல்லாளன் படை என்று தன்னைக் கூறிக்கொள்ளும் குழு வெடிகுண்டுத் தாக்குதலை தாங்களே நடத்துவதாகக் கூறுவதை இலங்கைப் பாதுகாப்புப் படைத்தரப்பு நம்பவில்லை என பி.பி.ஸி வானொலி விமர்சிப்பு.

✱ தாம் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கப்போவதில்லை எனவும், எதிர்க்கட்சிகளுடன் அணிசேரப் போவதில்லை எனவும், ஐ.தே.கட்சிக்காக பாடுபட்ட எனது கணவரின் கொள்கை மற்றும் லட்சியத்தின் அடிப்படையிலேயே அரசியலில் ஈடுபடப்போவதாக மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச தெரிவிப்பு.

19.04.1994

✱ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஏற்படக்கூடிய தோல்விகளைத் தவிர்ப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி அதன் மூலம் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என அரசின் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் சிலர் அரசுக்கு ஆலோசனை வழங்கி வருவதாகத் தெரிவிப்பு.

✱ எனது கருத்துக்கள் மதிக்கப்படும் வரை நான் அரசாங்கத்துக்கு ஆதரவாக உறுதியாகச் செயற்படுவேன் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

20.04.2010

✱நான் உங்களை வேதனைப்படுத்தியிருந்தால் அதற்காக வருந்துகின்றேன். அப்படிச் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கவில்லை என ஒரு வருடகால இடைவெளியின் பின் அமைச்சர் தொண்டமானைச் சந்தித்த ஜனாதிபதி விஜேதுங்க அவரிடம் தெரிவிப்பு.

✱அரச மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகளும் வெளிநாடு செல்வதற்கு ஜனாதிபதி விஜேதுங்க தடைவிதித்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு எல்லாளன் படையின் பெயரில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து அவதானமாக நடந்துகொள்ளுமாறு கொழும்பிலுள்ள ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளின் தூதுவர்கள் தத்தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

21.04.1994

✱கொழும்பில் தொடர்ந்து இடம்பெற்று வரும் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் மற்றும் கொலை அச்சுறுத்தல்கள் என்பவை காரணமாக இலங்கைக்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள விருந்த பல வெளிநாட்டவர்கள் தமது பயணத்தை ரத்துச் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக சங்கடத்துக்குள்ளாகியிருக்கும் இலங்கை அரசு,அது குறித்து மேற்கு நாடுகள் மற்றும் ஜப்பான், ஆஸ்திரேலிய நாடுகளின் தூதர்களை அழைத்துப் பேச்சு நடத்தி நிலைமையைச் சமாளிக்க முயல்வதாகத் தெரிவிப்பு.

22.04.1994

✱ சுதந்திரக்கட்சி சார்பாக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக சந்திரிக்காவை நியமிக்குமாறு அக்கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் பிரேரணையொன்று முன்வைக்கப்பட உள்ளதாகத் தெரிவிப்பு.

✱இனப்பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதே சுதந்திரக்கட்சியின் கொள்கை எனவும் ஆட்சியைக் கைப்பற்றினால் தமிழர்களுடன் சுதந்திரக்கட்சி பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

✱வடக்கு- கிழக்கு இணைப்புக்குழுவுக்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என நான் யோசனை கூறப் போவதில்லை என சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் மேல் மாகாண முதலமைச்சருமான சந்திரிகா தெரிவிப்பு.

23.04.1994

✱காமினி திஸநாயக்காவை எம்.பி ஆக்கி பின்னர் அமைச்சராக்கும் தமது யோசனையை எதிர்ப்போருக்கு பாடம் புகட்டுவதற்காக ஜனாதிபதி விஜேதுங்க நாடாளுமன்றத்தை கலைக்க முயலலாம் எனஅரசியல் விமர்சகர்கள் தெரிவிப்பு.

✱சுமார் 10 இற்கும் மேற்பட்ட நடமாடும் "ராடர்" நிலையங்கள் விடுதலைப் புலிகள் வசம் இருப்பதாக இலங்கை உளவுத்துறையை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிப்பதாகத் தெரிவிப்பு.

24.04.1994

✱வடக்கு- கிழக்குப் பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியாது; பேச்சுக்கள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்ன தெரிவிப்பு.

✱கிழக்கு மாகாணத்திலிருந்து இதுவரை சுமார் 12 ஆயிரம் துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டு வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

25.04.1994

✱முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாசவுக்கு ஐ.தே.கட்சியில் முக்கிய இடம் வழங்கி அமைச்சராக்க ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க திட்டமிட்டு வருவதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவிப்பு.

✱அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு ஐ.தே.க பொதுச் செயலாளர் சிறிசேன கூரேக்கு ஜனாதிபதி விஜேதுங்க பணிப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

26.04.1994

✱வன்னி மாவட்டத்தில் 'ஜெயமஹா' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றினை இலங்கைப் படையினர் நேற்று ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱மாகாண சபையின் அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் எஸ்.சர்வானந்தா குற்றச்சாட்டு.

27.04.1994

✱யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கையை அடுத்த மாதம் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி விஜேதுங்க அங்கீகாரம் அளித்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் அமைச்சரவை மாற்றத்தின் போது ஹேமா பிரேமதாச மற்றும் காமினி திஸநாயக்க ஆகியோருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாகத் தெரிவிப்பு.

28.04.1994

✱ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளருக்கு எதிராக மேல் மாகாண சபை முதலமைச்சர் சந்திரிகா போட்டியிட்டால் அவர் டி.பி.விஜேதுங்கவை விட 4 லட்சம் மேலதிக வாக்குகள் பெறுவார் எனஇலங்கை தேசிய உளவுப் பணியகத்தின் அறிக்கையில் தெரிவிப்பு.

✱இராணுவம் வெளியேறியதால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு இடைவெளியை நிரப்ப தேவையான பொலிஸாரை அனுப்பிவைக்கும்படி மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் தலைமைக்காரியாலயம் அரசிடம் கோரிக்கை விடுப்பு.

29.04.1994

✱ஆளும் ஐ.தே.கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் தீவிரம் அடைந்திருப்பதன் காரணமாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தமது சீன விஜயத்தை ரத்துச் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

30.04.1994

✱ விடுதலைப்புலிகளுடனான எந்தவொரு சமாதானப் பேச்சின் போதும் பிரபாகரன் நேரில் கலந்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னர் வடக்கு- கிழக்கில் அமைதியை உருவாக்க அரசாங்கம் விதித்திருக்கும் சகல நிபந்தனைகளையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

## 'அன்பே சிவம்' என உணர்தல் வேண்டும்

நம் உள்ளத்தில் சத்தியத்தோடு சுயநலமற்ற தொண்டும் ஒன்று சேருமானால் மனம் விரைவில் தூய்மை அடைந்து உயர்ந்த ஆன்மீக நிலையை அடைகிறது. எங்கும் பரவியுள்ள காற்றுத்தான் நுரையீரல்களுக்குள்ளும் இருக்கிறது. காற்றை, இது என்னுடைய காற்று என்று சொல்லிக்கொள்ள முடியுமா? அது போலவே எல்லா இடத்திலும் ஒரே இறைவன் தான் பரவி இருக்கிறார்.

நாம் ஆலயத்தில் அர்ச்சனை செய்து விபூதி,பிரசாதம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு வீடு செல்வது தான் ஆலய வழிபாடாக் கருதக் கூடாது. " எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க" என்று ஆலயக் கூட்டு வழிபாடுகளில் படிப்பது போல் "மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு" என நினைத்து நாம் அனைவரும் ஆலய, சமய, சமூகத் தொண்டுகளிலும் உள்ளன்போடு ஈடுபடவேண்டும். நாம் பொதுப்பணி, மற்றவர்களுக்குத் தொண்டு செய்யக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தித் திறம்படச் செயற்பட முன்வரவேண்டும். " அன்பே சிவம்" என்பதை நாம் மனதார நன்கு உணரவேண்டும். ஒருவன் அன்பை உணர்ந்துவிட்டால் எல்லாம் உணர்ந்தவனாகிறான். 'அ' என்பது தமிழுக்கே முதல் எழுத்து. 'ன்' என்பது வரிவடிவில் கடைசி எழுத்து. 'பு' என்பது நடு எழுத்தாகும். முன்னாகிப் பின்னாகி நடுவாகி எங்கும் பரந்துள்ளது. அன்பு என்னும் சொல் முந்திய முதல் நடு இறுதியுமானாய் என்பதை நினைவூட்டுகின்றது. இறைவன் அன்பு வடிவமானவன்.

அன்பு பெற்றெடுத்த குழந்தையே அருளாகும். தன்னைப்போல் மற்றவர்களையும் நினைக்கத் தூண்டுவது தான் உண்மையான அன்பாகும். ஆதலால் நாம் அனைவருடனும் அன்புடன் பழக முன்வர வேண்டும். உண்மையில் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்தால், நமது மனம் இரங்க வேண்டும். உங்களிடம் இருப்பதை அவர்களுடன் மனமுவந்து பகிர்ந்து கொள்ளவேண்டும். பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றால் பணத்தை மட்டும் அல்ல, நாம் பெற்ற கல்வி, நம்முடைய அனுபவங்கள், எமது உள்ளத்தால் உள்ளன்புடன் செய்யும் சகல தொண்டுகள், நற்பணிகள் என்பனவற்றை இயன்ற வரையில் நம் சக்திக்கேற்ப மற்றவர்களுக்குக் கொடுக்க முன்வரவேண்டும்.




இறைவன் படைத்த எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கண்டு ஆலய,சமய, சமூகப் பணியாற்ற அத்திவாரமானது அன்பே. இதனையே சுப்பிரமணிய பாரதியார்.

*அன்பென்று கொட்டு முரசே மக்கள்*
*அத்தனை பேரும் நிகராம்"*
என்றார் தமிழ்ப் பாட்டி ஔவையார்.
*" ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால்*
*நினைந்துகொள்"* என்றார் இன்றைய நமது கவிஞன்.
*" கருணை நிறைந்த உள்ளம்*
*கடவுள் வாழும் இல்லம்"* என்றான்.

நன்றி - ஞானச்சுடர்- ஆனி 2005

## சர்வதேசக் கண்பார்வை தினத்தையொட்டி மாணவரிடையே சுவரொட்டி ஓவியப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.24

மத்திய சுகாதார அமைச்சினால் ஒக்ரோபர் 14 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேசக் கண்பார்வை தினத்தை முன்னிட்டு " கண்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; குருட்டுத் தன்மையைத் தவிருங்கள்!" என்னும் தொனிப்பொருளில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டி ஓவியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் தங்களுடைய ஆக்கங்களைப் பாடசாலை அதிபரின் அத்தாட்சிப்படுத்தலுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் தரம் 1- 5 வரையான மாணவர்கள் முதலாவது பிரிவிலும், தரம் 6-9 வரையான மாணவர்கள் இரண்டாவது பிரிவிலும், தரம் 10-13 வரையான மாணவர்கள் மூன்றாவது பிரிவிலும் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ற-51)

## விவசாயிகள் சம்மேளனப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.24

வட்டு.தென்மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வட்டு. மூன்றாம் பனை ஐக்கிய நாணயச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வே.கணேசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கிராமசேவகர் திருமதி ச.குகநேசன் கலந்துகொள்வார். (ஒ-16)

## ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு, செப். 24

ஜேர்மனி டுசில்டோர்ப் மாநில நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு அண்மையில் டுசில்டோர்ப் நாடாளுமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உலகத் தமிழ் பண்பாட்டியக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் உலகத் தமிழ் பண்பாட்டியக்கக் கல்விப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் இ.பாலசுந்தரன், உலக தமிழ் பண்பாட்டியக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் துரை கணேசலிங்கம் ஆகியோரும் டுசில்டோர்ப் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சார்பில் பசுமைக்கட்சி மாநில உறுப்பினர் அரிவ் உனால், சமூக ஜனநாயக கட்சி மாநில உறுப்பினர் பேர்ன்கார்ட் குருன் பேர்க் சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த குபேர்ட் லொவிஸ் மற்றும் ஜெயரத்தினம் கனேசியஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் நிலைமைகள் பற்றியும் அவர்களுக்கான அரசியல் தீர்வு பற்றியும் விளக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை வழங்கவேண்டும் எனச் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த டுசில்டோர்வ் மாநில நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இலங்கையில் தமிழர் பிரச்சினை பற்றித் தாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் எனவும் அமைதியான வகையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை வழங்க வேண்டும் எனத் தாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

தமது தெற்காசிய விஜயத்தின்போது தாம் வன்னிக்குச் செல்ல உள்ளார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

## வல்லிபுரம் வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,செப்.24

வல்லிபுரக் கோயில் வீதியில் நேற்று முன்தினம் 12 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

வல்லிபுரக் கோயில் சைக்கிள் தரிப்பிடத்திற்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோலி உபய கதிர்காமம் பகுதியைச் சேர்ந்த இ.நாராயண சர்மா (வயது 37) என்பவர் காலிலும் தலையிலும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ-319-78)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவைத் தேடி அழும் பிள்ளைக்கு என்ன பதில் சொல்லித் தேற்றுவேன்?

உண்மைகள் மட்டுமல்ல, கண்ணீர் கூடக் கசப்புத்தான். உள்ளே உறைந்துபோய் வெளிப்படுத்த முடியாமல் கிடக்கும் உண்மைகள் கண்ணீராகவும் இறங்குவதுண்டு. உண்மையின் இன்னொரு அடையாளம் கண்ணீர். அதனால் தான் உண்மையைப்போலவே பல சமயங்களில் அதுவும் கசப்பானதாக இருக்கிறது. (நீலிக்கண்ணீர் கசப்பதில்லையே) கிளிநொச்சியில் பெருகிய கண்ணீர் வெள்ளம் அடுத்தநாள் கண்டாவளையிலும் ஊற்றெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. கரைச்சிப் பிரதேச செயலகத்தைப்போல கண்டாவளைப் பிரதேச செயலகம் வசதியான கட்டடங்களைக் கொண்டிருக்கவில்லை. ஒரு ஆரம்பப்பிரிவுப் பாடசாலையையே அது ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. திறந்த கட்டடம் ஒன்றில் தான் ஆணைக்குழுவின் அமர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கிளிநொச்சியிலிருந்து 8 கிலோ மீற்றர் தூரத்திலேயே கண்டாவளையும் இருந்ததால் ஆணைக்குழுவின் முதல் நாள் அமர்வுகளில் சமூகமளிக்கத் தவறிய பலர் இன்று ஆவணங்களும் கையுமாக காலைமுதலே வரத் தொடங்கியிருந்தார்கள். அத்தோடு கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களும் திசைக்கொன்றாய் புறப்பட்டு குழுமத் தொடங்கினார்கள். நேரம் செல்லச் செல்லப் பெருகத் தொடங்கிய மக்களைக் கண்டு ஆணைக்குழுவினர்



ஆனா என்ர பிள்ள மட்டும் எங்க இருக்கிறான் எண்டு தெரியாமக் கிடக்கு. கிளிநொச்சி முருகானந்தா மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானப்பிரிவில் (உயர்தரம்) என்ர இரண்டாவது மகன் நிஷாந்தன் படிச்சுக்கொண்டிருக்கேக்க சண்டைக்கு வரவேணுமெண்டு இயக்கம் பலாத்காரமாக பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். ரண்டுமூண்டு தரம் அப்பிடிக் கொண்டுபோன பிறகு தம்பி ஒளிச்சு ஓடி வந்தவன். ஆனாலும் அவங்கள் விடேல. வீட்டைச் சுற்றி வளைச்சு ஒரு நாள் கொண்டு போனவங்கள் தான். அதுக்குப்பிறகு என்ர பிள்ளைய என்ர

ஒன்றாகப் பயின்ற சக மாணவியை இந்த நிலையில் காண சகிக்க வில்லை. ஏற்கனவே அறிமுகம் இருந்தபடியால் ஒரு நண்பனிடம் தன்னுடைய ஆதங்கங்களை பகிரத் தொடங்கினார்.

''அவரும் (கிருஷ்ணர் அருணந்தா - வயது 37), நானும் 14 வருஷமா காதலித்தோம். ஆனா வீட்டுக்காரருக்கு விருப்பம் இல்ல. ஒரே எதிர்ப்பு. அவரால ஒண்டும் செய்யமுடியேல்ல. கடைசியா இயக்கத்துக்குப் போட்டார். எனக்காக இயக்கத்துக்கே போனவருக்காக நான் 14 வருஷம் காத்திருந்தன். அதுக்கிடையில கம்பஸும் கிடைச்சுட்டுது. நான் யாழ்ப்பாணம் போட்டன். கம்பஸில படிச்சுக் கொண்டிருக்கேக்க தான் நாங்கள் கலியாணம் செய்ய முடிஞ்சுது. ஆனாலும் கலியாணங்கட்டி கொஞ்சநாளுக்குள்ளேயே சண்டையும் தொடங்கிட்டுது. அதால படிப்பும் அரைவாசியோட நிண்டுட்டுது. இப்பதான் 'டெசிட்டெஷன்' குடுத்திருக்கிறன்.

இடம்பேந்து போகேக்க ஷெல் விழுந்து எங்கட அம்மாக்கு வலது கையில பெரிய காயம். கப்பல்ல

**ஓவண்யன் டிலீப்**

அவாவ கொழும்புக்கு கொண்டு போகேக்க அவாக்குத் துணையாக நானும் என்ர ஒரு வயசுப்பிள்ளையும் போயிற்றம். இவர் தனியத்தான் நிண்டவர். கப்பல்ல ஏறேக்க தான் அவற்ற முகத்தக் கடைசியாக் கண்டனான். சண்டைக் கடைசிக் கட்டத்தில அவர ஆமி வாகனத்தில ஏத்திக் கொண்டு போனத ஆக்கள் கண்டவ. அவையள் சொன்ன

## யார் துடைப்பார் இவர்களின் கண்ணீரை? ➡ 4

அசரவில்லை. அவர்கள் தான் புதியதொரு வழியை கிளிநொச்சியில் கண்டுபிடித்துவிட்டார்களே! அதே வழிமுறையே கண்டாவளையிலும் பிரயோகிக்கப்பட்டது. ஒரு சிலரின் வாக்க மூலங்களைத் தவிர ஏனையோர் காகிதங்களின் ஊடான மனுக்களைச் சமர்ப்பிக்கப் பணிக்கப்பட்டனர். கூடவே கடிதம் மூலமாக எழுதப்பட்ட மனுக்களில் உள்ள போதாமைகள் உடனுக்குடனேயே உறவுகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டு, ஆணைக்குழுவின் முகவரி பொறிக்கப்பட்ட துண்டுச்சீட்டு ஒன்று வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது.

நாலுபிள்ளைகளின் தாயாரான தேவரூபன் சுசிலாதேவி (வயது 43) கடிதத்தைக் கொடுத்துவிட்டு, தனக்கு வழங்கப்பட்ட துண்டுச்சீட்டையே வெகு நேரமாக உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கருகில் நாம் சென்று நீண்ட நேரமாக காத்திருந்த போது அதனை உணராத வாறு துண்டுச் சீட்டை வெறித்துப் பார்ப்பதிலேயே குறியாக இருந்தார். சில வேளைகளில் அந்தக் காகிதத் துண்டில் அவரது மகனின் முகம் நிழலாடியிருக்கக் கூடும். நாம் அவரது துயரை பகிர்ந்து கொள்ள முனைந்தபோது ஒருசில நிமிட மௌனத்துக்குப் பின்னரே தொண்டைக்குழியில் இருந்து சொற்கள் புறப்பட்டன. ''என்ர பிள்ளைக்கு - தேவரூபன் நிஷாந்தன் (வயது 21) - இந்தமாசம் 23ஆம் திகதி (நேற்று வியாழக்கிழமை) 'கீ பேர்த்டே' வருகுது. எவ்வளவு பெரிசா தன்ர கீ பேர்த்டேயைக் கொண்டாட வேணுமெண்டு அவன் கனவு கண்டிருப்பான். இப்ப பேர்த்டேயும் வரப்போகுது.

கண்ணில காட்டேல.

எல்லாரும் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தம். இருந்திட்டு எப்பவாவது மகன் எங்கேயாவது நிக்கிறான் எண்டு பாத்தவ வந்து சொல்லுவினம். அந்த இடத்துக்கு நாங்கள் ஓடிப்போன அவங்கள் இடத்த மாத்தியிருப்பாங்கள். கடைசியா எல்லா இடத்தையும் ஆமி பிடிச்சுக்கொண்டே வந்தது. முழு இடமும் பிடிபடப்போகுதெண்டு சனத்துக்கு வடிவாத் தெரிஞ்சிட்டுது. அந்த நேரத்திலதான் இயக்கம் ஒரு பெரிய சண்டைக்கு 'ரெடியாகுதெண்டு' சனம் கதைச்சுது. அதுதான் ஆனந்த புரத்துச் சண்டை. சனத்தின்ர திட்டுகள வாங்கிக் கொண்டு ஒருத்தரும் வாழேலாது. இயக்கத்தின்ர 'பிளான்' ஆமிக்கும் தெரிஞ்சு, அவங்கள் முன்னுக்குப்போன பெடியள 'பொக்ஸ்' அடிச்சு மடக்கிப் போட்டாங்கள். அதுக்குள்ள மாட்டுப்பட்ட பெடியளால சண்டை பிடிக்கேலாமப் போச்சு. அவ்வளவு பேரையும் ஆமி பிடிச்சுப் போட்டுதெண்டு அதுக்குள்ளால தப்பி வந்த ஒரு இயக்கப் பெடியன் சொன்னான். அவன் தம்பியோட நிண்டவன். தம்பியையும் (நிஷாந்தனையும்) ஆமி பிடிச்சதெண்டு அவன் சொன்னான். அதுக்குப் பிறகு நாங்களும் ஆமிக்கட்டுப்பாட்டுக்குள் வந்திட்டம். முகாமில இருக்கேக்க ஐ.சி.ஆர்.சி, தடுப்பு முகாம்கள், விசாரணைக்குழுக்கள், மனிதஉரிமை ஆணைக்குழு எண்டு எல்லா இடத்திலேயும் பதிஞ்சிட்டு மகன் வருவான் எண்டு ஒவ்வொரு நாளும் காத்திருந்தம். நாள் தான் போச்சுதே தவிர மகன் வரவேயில்லை. இப்ப பிறந்த நாளுக்குக் கூட அவன்ர படத்த மட்டும்தான் பாக்க வேண்டிக்கிடக்கு'' சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவரது விழி நீரால் கையில் இருந்த காகிதத் துண்டும் ஈரமாகிவிட்டது.

தன்னுடைய 14 வருடக் காதலால் கிடைத்த கணவனைக் காணாது இன்னமும் அங்கலாய்த்தபடியே இருக்கும் அருணந்தா [illegible] (வயது 34) கண்ணில் பட்டார். என்னோடு பல்கலைக்கழகத்தில்

குறிப்புகள வைச்சு சில முகாம்களுக்குப் போய்த் தேடினன். ஒருஇடமும் இல்லையெண்டு சொல்லிப் போட்டாங்கள். பெடியனும் இப்பதான் கதைக்கத்



பிறந்த நாளிலும் புகைப்படத்தில்தான் மகனின் முகத்தைக் காணும் தாய்.

தொடங்கியிருக்கிறான். அவன்ர கதையிலதான் இவற்ற கவலைய ஓரளவுக்காவது மறந்திருக்கிறன். ஆனாலும் சில வேளைகளில அவன் கேக்கிற கேள்விகள் வலியை இன்னும் கூட்டுது. அப்பா எங்க? எண்டு நெடுகலும் கேப்பான். அவர் காணாமல் போட்டார் எண்டோ, ஒரு இடத்திலேயும் இல்லையெண்டோ எப்பிடிச் சொல்ல முடியும். சொன்னாலும் அவனுக்கு விளங்கப்போறதில்லை. அதால அப்பா வெளிநாட்டுக்குப் போயிற்றார் என்று சொல்லி வைச்சிருக்கிறேன். இப்ப அவன் 'எங்கட அப்பா வெளிநாட்டால வரேக்க எனக்கு சொக்கா, விளையாட்டுச் சாமான் எல்லாம் வாங்கிக் கொண்டு வருவாரா?' எண்டு கேக்கிறான். நான் என்னத்தச் சொல்ல? அவன்ர அப்பாவ ஆராவது கண்டு பிடிச்சுத் தரமாட்டினமா? என்று கெஞ்சிறதத் தவிர - கோயில் கோயிலாக் - கும்பிடுறதத் தவிர வேற வழியில்லை'' தன் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது கண்களில் நீர் வரக்கூடாதென்று பெரும்பிரயத்தனப் பட்டாள். ஆனாலும் கண்ணீர் யார் பேச்சையும் கேட்காமல் ஒரு தறிகெட்ட விலங்குபோல அவள் விழிகளில் இருந்து அவளைமீறிக்கொண்டு பீறிடத் தொடங்கியது. அவளது கைக்குட்டை அந்தக் கண்ணீரைத் துடைக்க போதுமானதாக இல்லை. துடைக்கத் துடைக்க இன்னும் வேகத்தோடு விழிநீர் பெருகிக் கொண்டேயிருந்தது.

(கண்ணீர் ஓய்வதில்லை)



14 வருடக் காதல் வாழ்வு ஒரு நொடியில் கலைந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகளில் மீளக்குடியமர்ந்த வன்னி மக்கள் அசட்டை

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணியில் அதிக அக்கறை காட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்காளர் பதிவேட்டின் மீளாய்வுப் பணிகள் மக்கள் மத்தியில் உத்வேகம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்த மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பணிகள் இடம்பெற்று வருவதனாலும் அவர்களுக்கான நிவாரண உதவிகளுக்கான பல்வேறு பதிவுகள் தினமும் இடம்பெற்று வருவதாலும் பொதுமக்கள் வாக்காளர் பதிவேட்டின் மீளாய்வில் அதிக கவனம் செலுத்தவில்லை.

இந்த மீளாய்வுக்கான படிவங்களை ஒவ்வொரு குடும்பத் தலைவரும் பூரணப்படுத்தி தமது கிராம அலுவலரிடம் கையளிக்க வேண்டும். கிராம அலுவலர்கள் அவற்றைச் சேகரித்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

கடந்த 15 ஆம் திகதியில் இருந்து கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களிடம் இருந்து இப்படிவங்களைக் கையேற்கும் நடவடிக்கை ஒவ்வொரு நாளும் குறித்த கிராம அலுவலர் பிரிவுகளுக்கு என ஒதுக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாகக் குறித்த கிராம அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.இதனைத் தொடர்ந்து எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர்களிடம் இருந்து மீளாய்வுப் படிவங்கள் கையேற்கப்படவுள்ளன.

இம்முறை மீளாய்வுப் படிவங்களை சமர்ப்பிக்காதவர்களின் பெயர் விவரங்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படவுள்ளதால் பொதுமக்களும், கிராம அலுவலர்களும் இம்மீளாய்வு நடவடிக்கைகளில் உத்வேகத்துடன் செயற்படவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-405)

## வீடுகளைப் புனரமைக்க முதற்கட்ட நிதியுதவி

கண்டாவளை,செப்.24

கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்மடுநகர் கிராமசேவை அலுவலர் பிரிவில் கடந்தகால யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்காக 'யுஎன் கபிற்றற்' நிறுவனத்தால் முதற்கட்டமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு மேற்படி கிராம சேவை அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றது. (த-201-450)

## வணிக ஆசிரியருக்கான செயலமர்வு 28 ஆம் திகதி

கிளிநொச்சி,செப்.24

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களில் பொருளியல், வணிகக் கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களையும் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்புகளில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு தொடர்பான கடிதங்கள் உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார். (த-405)

## எள்ளுப்பிட்டியில் குடியேறிய மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு கோரிக்கை

மன்னார்,செப்.24

மாந்தை, எள்ளுப்பிட்டி பகுதியில் மீள்குடியேறிய மக்களுடன் கலந்துரையாடுவதற்காக தள்ளாடி இராணுவப் படைப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடல் எள்ளுப்பிட்டிக் கிராமத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தள்ளாடி இராணுவப் பிரிவின் உயரதிகாரிகள், மன்னார் ஆயர் அதி. வண இராயப்பு யோசப், வன்னி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டிமேல், மன்னார் குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி ஜின்டர் சோதை அடம்பன், மாந்தை கட்டளையிடும் இராணுவ அதிகாரி உட்பட மீள்குடியேற்றப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது மீள்குடியேறிய மக்களுக்கு நல்லாசிகளை வழங்கிய மன்னார் ஆயர் மக்களுக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை தங்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளையும் மக்கள் கலந்துரையாடலில் முன்வைத்தனர்.

திருக்கேதீஸ்வரத்தில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவிற்குள் உள்ள எள்ளுப்பிட்டிக் கிராம மக்கள் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விடுதலைப்புலிக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான யுத்தம் ஆரம்பமானதையடுத்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்தனர். (த-80)

## விசேட வைத்திய முகாம்

வ்ட்டக்கச்சி,செப்.24

கிளிநொச்சி முரசுமோட்டை மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் விசேட வைத்திய சேவை நடைபெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தருகின்ற விசேட மருத்துவக் குழுவினர் இந்த மருத்துவ சேவையில் இணைத்து வைத்திய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

இந்த வைத்திய சேவையின் போது சகல விதமான நோயாளர்களும் கலந்து கொண்டு வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9-450)

## நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பு நிலையம்

கிளிநொச்சி,செப்.24

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பொதுமக்களுடனான இணைப்பு நிலையம் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளரான பொன்.காந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி முதல் கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக இந்த இணைப்பு நிலையம் இயங்கத் தொடங்கியதாக அவர் கூறினார்.

தற்போது வெளிநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நாடு திரும்பியதும் இந்த இணைப்பு நிலையம் முழு அளவிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி செயலகமாகச் செயற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-301)

## பொதுச் சந்தை அமைக்கும் பணிகள் மந்தகதியில்

கண்டாவளை,செப்.24

கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை உப அலுவலக எல்லைக்குள் புதிதாகப் பொதுச்சந்தை அமைக்கும் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பருவ மழை ஆரம்பிக்கவுள்ளதால் இந்த இடங்களில் வியாபாரத்தை மேற்கொள்ள முடியாது போய்விடும் எனவும், இதனைப் பொறுப்பேற்றவர்கள் விரைவாக இந்த வேலைத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு அப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ற-440)

## கிராமிய வங்கிகளில் மீதிகளை உறுதிப்படுத்துக

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் நிதிக்கூற்றுக்களை 31.12.2009 இல் உள்ளவாறு தயாரிக்க வேண்டியுள்ளதால் அத்திகதிக்கு முன்னர் இந்த சமாசத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் ஏதாவது வருமதிகள், சென்மதிகள் இருப்பின் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மீதியை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொள்ளுமாறு கிளி, முல்லை மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் அறிவித்துள்ளார். (த-405)

## கிராம அலுவலர்களை சந்தித்தார் நீதிபதி

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எஸ்.சிவகுமார் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தற்காலப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்குமாறு நீதிபதி கிராம அலுவலர்களைக் கேட்டுக்கொண்டார். (த-405)

## கிளிநொச்சி மெய்வன்மைச் சங்கத்தின் மரதன் ஓட்டப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம்,செப்.24

கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தும் ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

போட்டிகள் இன்று காலை 6.30 மணிக்கு முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 17 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் முறிகண்டியில் ஆரம்பித்து கண்டி வீதி வழியாகப் பரந்தன் சந்தியை அடைந்து அங்கிருந்து முல்லைத்தீவு வீதி வழியாகக் கண்டாவளைப் பிரதேச செயலகம் திரும்பி அதே வழியால் கிளிநொச்சி செயலகத்துக்கு முன்னால் முடிவடையும்.

பெண்களுக்கான மரதன் ஓட்டம் முறிகண்டியில் ஆரம்பமாகிக் கண்டி வீதி வழியாகப் பரந்தன் சென்று கிளிநொச்சிச் செயலகத்துக்கு முன்னால் முடிவடையும்.

போட்டியில் பங்குபற்றுபவர்கள் பெற்றோரின் சம்மதக் கடிதத்துடன் வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் எனக் கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் சு.கனகராசா அறிவித்துள்ளார். (த-405)

## மன்னார் சமாதான விழா

மன்னார்,செப்.24

சமாதான தினவிழா மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

சமாதானத்திற்கும் , மீள் இயக்கத்துக்குமான நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மன்னார் மாவட்ட அரச அதிபர் நீக்கிலாஸ்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் இசை நிகழ்ச்சிகளும் "அடங்காப்பிடாரி" என்னும் நாடகமும் நடைபெற்றது. (த-9-80)




## கிளிநொச்சி நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல்

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள இ.போ.ச. டிப்போவுக்கு முன்புறமாகத் தனியார் சிற்றூர்திகள் தரித்து நிற்பதாலும், வாகனங்களில் அப்பகுதிக்கு வந்து விற்பனையில் ஈடுபடும் நடமாடும் வியாபாரிகளாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நடைபாதை வியாபாரத்தால் இப்பகுதியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளும் பெருமளவில் வீசப்படும் நிலையும் உருவாகியுள்ளது. கிளிநொச்சி நகரப் பகுதியில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு இத்தகைய கழிவுபொருள்கள் தடையாகவுள்ளதாகச் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து நெரிசல், கழிவுப் பொருள்களின் தேக்கம் என்பவற்றால் சீர்கெட்டுவரும் கிளிநொச்சி டிப்போப் பகுதியின் நிலையை உரிய அதிகாரிகள் கண்டும் காணாமல் இருக்காமல் தகுந்த நடவடிக்கை எடுத்து தமது அசௌகரியங்களைக் களையவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-440)

## கிளிநொச்சி, மன்னார் பகுதிகளிலும் விரைவில் இணக்க சபை நிறுவப்படும்

கிளிநொச்சி,செப்.24

கிளிநொச்சி, மன்னார் , வவுனியா மாவட்டங்களில் இணக்கசபைகளை நிறுவ நீதியமைச்சு தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே 14 இணக்க சபைகள் இயங்கி வருகின்றன. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இணக்க சபைகள் நிறுவப்படவிருப்பது இதுவே முதல் தடவையென நீதியமைச்சின் உயரதிகாரியொருவர் கொழும்பில் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகள் 287 இலும் நிறுவப்பட்டுள்ள இணக்க சபைகளில் 7 ஆயிரம் வரையான உறுப்பினர்கள் செயற்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## மன்னார் மடு வீதியில் அத்துமீறிய குடியேற்றம்

மன்னார்,செப்.24

மன்னார் மடுவீதியில் பெரும்பான்மையினரின் அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மடு வீதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு இடையில் இந்தக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாகவும் இதுவரை 30 இற்கும் மேற்பட்ட குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மடு வீதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்குள் இந்தக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாகவும், கம்புகள், தகரங்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடிசைகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேறியுள்ளதாகவும் இது தவிர மேலும் பல குடிசைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார்-மதவாச்சி வீதியில் இருந்து மடு ஆலயத்திற்குத் திரும்பும் வழியிலேயே இந்த அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னாரின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவது தொடர்பாக முன்னரும் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண்ணின் வயிற்றில் மாமிசக்கட்டி; இருமணிநேர சத்திரசிகிச்சை மூலம் அகற்றல்!

18 வயது யுவதியின் கர்ப்பப்பையில் உருவாகியிருந்த பத்துக் கிலோவுக்கும் மேற்பட்ட நிறைகொண்ட மாமிசக் கட்டி அல்பிட்டிய மருத்துவமனையில் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளதாக குறித்த மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட அந்த மாமிசக் கட்டி 45 செ.மீ. நீளத்தையும் 30 செ.மீ. அகலத்தையும் கொண்டிருந்தது. அல்பிட்டிய மருத்துவமனையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின்போது அகற்றப்பட்ட கட்டிகளில் இதுவே மிகப்பெரிய கட்டி என இச்சத்திர சிகிச்சையில் ஈடுபட்ட மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் மருத்துவ நிபுணரான கிஸான்டி டி சில்வா இது தொடர்பாக விளக்கமளிக்கையில்:

கர்ப்பப்பையினுள் இதுபோன்ற மாமிசக் கட்டிகள் உருவாவது மிகவும் அபூர்வமான விடயம். நோயாளியின் வயிற்றினுள் கனதியான சதைப் படலம் செறிந்து வளர்ந்திருந்தது.

இரு மணிநேர சத்திரசிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாக இப்படலம்- மாமிசக்கட்டி- அகற்றப்பட்டுள்ளது. இப்போது அந்தப் பெண் திருப்திகரமான உடல் நலத்துடன் இருக்கிறார்- என்றார்.

(எ-ற-22)


Internationally Recognized and Affordable

UK Qualification

edexcel BTEC

HND Civil Engineering

Higher National Diploma

Delivered locally......
Recognized globally......



புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

பொறியியலாளர் ஆக வேண்டும் என்ற உங்கள் கனவை நாம் நனவாக்கித் தருகின்றோம். ஆம் IIS CITY CAMPUS நிறுவனத்தின் குடிசார் பீடத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி கற்கை நெறிக்கு மூன்றாம் பிரிவுக்கான மாணவர்கள் உள்வாங்கப் படவுள்ளனர். Edexcel,UK நிறுவனத்தினால் வழங்கப்படும் HND தகைமைக்கான இச்சான்றிதழ் சர்வதேச ரீதியிலே மிகப்பிரபல்யமானதாகும். நீங்கள் பிரித்தானிய பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாகும் வாய்ப்பினை இன்றே பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



21.09.2010 அன்று
வறுத்தோலை, சுழிபுரம்
கிராமத்திற்கு மின்சாரம் வழங்கி
அதனைத் திறந்து வைத்த
அமைச்சர்

**டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது மனமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம். மேலும் எமது
கிராமத்தில் உள்ள சில
குறைகளைத் தீர்த்து
வைப்ப தாகவும்
உறுதி கூறியுள்ளார்.

வெற்றி சனசமூக நிலையமும்
மாதர் சங்கமும்.

வறுத்தோலை, சுழிபுரம்.
(103710)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**யோகலெட்சுமி சபாநாதன்**
(யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)
(ஆசிரியை - S.L.T.S. தரம் -I)

"எழுத்தறிவித்த இறைவி நீங்கள்
ஏட்டுக் கல்வி தந்த அன்னை நீங்கள்
ஆசிரிய சேவையில் 35 அகவையில் ஓய்வுபெற்று
அகவை அறுபது காணச் செல்லும் நீங்கள்"

நோயின்றிப் பல்லாண்டு வாழ்ந்து எல்லோரது
வாழ்விலும் வளம் சேர்க்க வேண்டுமென
பெருங்குளம் முத்துமாரி அம்பிகையின் அருள்
வேண்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்:
பேரமக்களும்,
பேரமகள் குடும்பத்தினரும்.

'திருத்தணி இல்லம்',
வேலணை வடக்கு,
வேலணை-05.

(103714)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்:
24.09.1951

மறைவு:
27.09.2007



அமரர்
## துரைரத்தினம் ஸ்ரீ கனகசபேசன்

(ஆசிரியர் B.A., Dip in, Education, HNDA.M.phil J.P. வளலாய், அச்சுவேலி.)

திதி: பிரதமை (24.09.2010)

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்கவில்லை- என் மனதில்
நிலையில்லா வாழ்வுதனை உணர்ந்தேன் உம்பிரிவினிலே
இமைப்பொழுது கூட மறவாது உம் நினைவு

ஒரு கூட்டுக்கிளிகளாய் சேர்ந்திருந்தோம்- அன்று
நீர் இல்லா வீடு வெறுமையாய் இருக்குதையா
கண்ணீரின் பாதையிலே கால்நடையாய் போகின்றேன்
தேம்பி அழும் என்னை தேற்ற வரமாட்டீரோ?

என் சுமைகள் நீர் சுமந்தீர் வலிகள் இன்றி வாழ்ந்திருந்தேன்
என் நெஞ்சம் இருக்கும்வரை உம் நினைவு துடிதுடிக்கும்
மூன்றாண்டுகள் என்ன முப்பது ஆண்டுகள் ஆனாலும்
மறக்குமா? என் நெஞ்சம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
அன்பு மனைவி-மல்லிகாதேவி.
வளலாய், அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம்,செப்.24

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியுடனான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்று தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் சிவசம்பு தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கான 6 பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை பி.ப. சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் உத்தமக்குமரன், ஆதித்தன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 36, 15 ஓட்டங்களையும், சிலோசன் 8 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரனான கஜேந்திரன், ஒரு ஓவர் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

73 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 52 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சிறிகுகன், சீராளன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 21, 26 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

21 ஓட்டங்களால் கொக்குவில் இந்து அணி சம்பியனாகியது.

(த-23)

## போட்டி அட்டவணை தயாரிப்பு இன்று

யாழ்ப்பாணம்,செப்.24

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் 15 வயதுப் பிரிவினருக்கான யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தட்டச் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.மத்திய கல்லூரி, பாஷையூர் சென்.அன்னரனீஸ் மைதானங்களில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்குகொள்ளவுள்ள பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு போட்டி இணைப்பாளர் பேட்டி பனிஸ்டர் அறிவித்துள்ளார்.

(த-23)



சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் சிவசம்பு தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனாகிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை முதலாவது படத்திலும் - இரண்டாவது இடத்தைப் பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை இரண்டாவது படத்திலும் - மூன்றாவது இடத்தைப்பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்:- தமிழினியன்)

# ஆரோக்கியராஜின் சாதனை பட்டியலில் இடம்பெறுகிறது

வலி.வடக்கு,செப்.24

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் ஈட்டி எறிதல் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஆரோக்கியராஜின் பெறுபேறு வடமாகாணத்தின் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாணத்தின் புதிய சாதனைப் பட்டியலைப் பதியும் செயற்பாடு வடமாகாண விளையாட்டுத் திணைக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பட்டியல் பதியப்படவுள்ளது.

2007ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பி.இராஜமனோகரன் 49:85 மீற்றர் தூரத்திற்கும் 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.வாகீசன் 47.51 மீற்றர் தூரத்திற்கும் 2010ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஆரோக்கியராஜ் 51:28 மீற்றர் தூரத்திற்கும் எறிந்த பெறுபேறுகள் பதியப்பட்டுள்ளன.

இதன் அடிப்பண்டயில் 2010 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஆரோக்கியராஜின் 51:28 மீற்றர் தூரச் சாதனையாக பதிவுசெய்யப்படவுள்ளது.

# சென்.ஜோன்ஸை 32 ஓட்டங்களால் வென்றது கொழும்பு என்.சி.சி. அணி

யாழ்ப்பாணம்,செப்.24

சென்.ஜோன்ஸ் கல்லூரியுடனான ஆட்டத்தில் கொழும்பு என்.சி.சி. அணி 32 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான 40 ஓவர்கள். கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து என்.சி.சி. அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய என்.சி.சி. விளையாட்டுக் கழக அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதனால் என்.சி.சி. அணி 32 ஓட்டங்களால் வென்றது. (த-23)

# அரியாலை ஐக்கிய வி.கவை வென்றது உரும்பிராய் மைக்கல்

யாழ்ப்பாணம்,செப்.24

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடனான ஆட்டத்தில் உரும்பிராய் சென்மைக்கல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (த-23)

**சுடச்சுட விளையாட்டு அரங்குகளில்**

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.24

பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# அரையிறுதி ஆட்டத்தில் 64 ஓட்டங்களால் ஜொலிஸ்ராரை வென்றது யாழ்.சென்ரல்

வலி.வடக்கு,செப்.24

வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்திய 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட்போட்டி அரையிறுதி ஆட்டத்தில் 64 ஓட்டங்களால் யாழ்.சென்ரல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் சென்ரல். விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண் டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரல் விளையாட்டுக்கழகம் 40.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெசிந்தன் 9 நான்குகள் ஓர் ஆறுடன் 84 ஓட்டங்களையும் சலிஸ்டன் 3 நான்கு 2 ஆறுகளுடன் 43 ஓட்டங்களையும் பாலேந்திரா 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நாதன் 9.4 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் வாமணன், ஆதவன், திலீபன் முறையே 24, 26, 27 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

204 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

வாமணன் 26 ஓட்டங்களையும் நவயுகன் 23 ஓட்டங்களையும் சிவராஜ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுதர்சன் 8.3 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜெசிந்தன் 8 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சுபதீஸ் 8 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிவசங்கர் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

# வடமாகாண பெண் அணிகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் முடிவுகளில் சில

வலி.வடக்கு,செப்.24

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான தகளப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:-

**நீளம் பாய்தல்**

எஸ்.தனுபா (மன்னார்), எஸ்.கலைவாணி (யாழ்ப்பாணம்), எஸ்.மரிஸ்ரெலா (மன்னார்).

**உயரம் பாய்தல்**

வி.கஜித்தா (யாழ்ப்பாணம்), எஸ்.கீர்த்திகா (யாழ்ப்பாணம்), பி.தவுசிகா (வ்வுனியா).

**தட்டெறிதல்**

ரி.அனுஷா (வ்வுனியா), எஸ்.கீர்த்திகா (யாழ்ப்பாணம்), எஸ்.ஜனுகா (மன்னார்).

**ஈட்டி எறிதல்**

எம்.வினோஜா (யாழ்ப்பாணம்), ரி. அனுஷா (வவுனியா), என்.சுபாசினி (மன்னார்).

**400 மீற்றர் தடைதாண்டல்**

கே.லக்சினி (வவுனியா), எஸ்.நிலாணி (வவுனியா), எஸ்.துஷிதா (யாழ்ப்பாணம்).

**[illegible]**

கே.கீர்த்திகா (யாழ்ப்பாணம்), எஸ்.கலைவாணி (வவுனியா), எஸ்.கீர்த்திகா (யாழ்ப்பாணம்).

**குண்டெறிதல்**

ரி.அனுஷா (வவுனியா), ஆர்.தரனிகா (வவுனியா), எம்.விஜோஜா (யாழ்ப்பாணம்).

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாம் இடம் (வவுனியா மாவட் டம்), இரண்டாம் இடம் (யாழ்ப்பாண மாவட்டம்), மூன்றாம் இடம் (மன்னார் மாவட்டம்).

**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்**

முதலாம் இடம் (வவுனியா மாவட்டம்), இரண்டாம் இடம் (யாழ்ப்பாணம் மாவட்டம்). (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25 ஆவது வருடம்

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வெள்ளிவிழாவை

முன்னிட்டு

# எழுத்தாக்கப் போட்டிகள்

உதயன் நாளிதழ் தனது 25 ஆண்டுகள் நிறைவுநாள் நிகழ்வைச் சிறப்புடன் கொண்டாடும் நோக்குடன் எழுத்தாக்க ஆர்வமுடைய உதயன் வாசகர்களிடையே பின்வரும் திறனறியும் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

1. சிறுகதை
2. புதுக் கவிதை
3. மரபுக் கவிதை
4. கட்டுரை

### பரிசுகள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவாகும் ஆக்கங்களுக்குப் பின்வரும் வகையில் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களுக்கும் முறையே:-

முதலாம் இடம் ரூபா 25.000/-
இரண்டாம் இடம் ரூபா 15.000/-
மூன்றாம் இடம் ரூபா 10.000/-

தெரிவு செய்யப்படும் மேலும் 08 ஆக்கங்களுக்குச் சான்றிதழ் வழங்குவதுடன் தெரிவாகும் அனைத்து ஆக்கங்களும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

### சிறுகதை ஆக்கம் - நிபந்தனைகள்

➢ சிறுகதை ஒவ்வொன்றும் சமகால சமூகப்பண்பியல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாய் மானிட மேன்மையை அவாவுவனவாய் அமைதல்வேண்டும்.
➢ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை சிறுகதைகளையும் எழுதலாம். சிறுகதை எழுதப் பட்ட தாளில் பெயர். முகவரி என்பவற்றை எழுதுவதைத் தவிர்க்கவும். தனியான தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதி இணைக்கவும்.

### கவிதை ஆக்கம் - நிபந்தனைகள்

➢ கவிதைகள் யாப்பமைதி பேணுபவையாகவோ. புதுக்கவிதையாகவோ அமையலாம்.
➢ மரபுக்கவிதை. புதுக்கவிதை இரண்டும் தனித்தனிப் பிரிவாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.
➢ கவிதைகள் சமூகப் பிரஞ்ஞை உடையனவாய் மானிடத்தின் மேன்மையை அவாவுவன வாய் அமையவேண்டும்.
➢ இலக்கண வழுக்கள் சொல் / எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.
➢ கவிதைகள் 40 அடி / 60 வரிகளுக்கு மேற்படாதவனவாய் அமையவேண்டும்.

### கட்டுரை ஆக்கம் - நிபந்தனைகள்

பின்வரும் விடயப் பரப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை ஆக்கப்படுதல் வேண்டும்.

1. மூன்றாம் உலகநாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்
2. புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகுமா?
3. எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்
4. ஈழத்தில் மெல்லத்தமிழ் இனி ..... !
5. தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா?

எழுதப்படும் கட்டுரைகள் A4 தாளில் அச்சிடப்பட்டதெனின் 06 பக்கங்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும். கையெழுத்தெனின் A4 தாளில் 06 பக்கங்களுக்குள் உள்ளடக் கத்தக்கவாறு அச்சிட்டுப்பெறும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.

### பொது நிபந்தனைகள்

- ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கம் ஒவ்வொன்றும் தனது சொந்த ஆக்கம் என்பதையும் முன்னர் எப்பொழுதும் வெளியிடப்படாததும், வேறெவரது ஆக்கமும் அல்ல என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்பிவைக்கும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சிறுகதை / புதுக்கவிதை / மரபுக்கவிதை / கட்டுரை என்பதைக் குறிப்பிடவும். (தேவையற்றதை நீக்கிவிடவும்)
- இத்துடன் இணைத்துள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பும் ஆக்கங்களே பரிசீல னைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆக்கங்கள் யாவும் 15.10.2010ந் திகதிக்கு முன்னர் உதயன் பணிமனைக்குக் கிடைக்கக் கூடியதாக அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உதயன் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாதவையும் குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ஆக்கங்கள் கையெழுத்தாகவோ அச்சிடப்பட்டனவாகவோ அமையலாம்.
- உதயன் நிறுவனத்தினர் மற்றும் சகோதர நிறுவனங்களில் பணிபுரிவோர் இப் போட்டிகளில் பங்கு கொள்ளமுடியாது.

**உதயன் வெள்ளிவிழா – 2010**

**எழுத்தாக்கப் போட்டிகள் விண்ணப்பப்படிவம**

**சிறுகதை/ புதுக்கவிதை/ மரபுக்கவிதை/ கட்டுரை**

**(தேவையற்றதை கீறிட்டு நீக்குக)**

1. எழுத்தாளர் பெயர் : ........................................
2. புனைபெயர் இருப்பின் : ........................................
3. முகவரி : ........................................
4. ஆக்கத்தின் தலைப்பு : ........................................

இது எனது சொந்த ஆக்கம் என்பதையும் இதற்கு முன்னர் எவ்வழியிலும் இது வெளியிடப்படவில்லை என்பதையும் இது வேறு எவரது ஆக்கமும் அல்ல என்பதையும் இதன்மூலம் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவர். ........................ கையொப்பம்

# வன்னியில் உயிர்நீத்த எம்மவருக்காக அனைத்து மக்களும் பிரார்த்திப்போம்

## நாளை முதல் 7ஆம் திகதிவரை மஹாளய சிராா்த்தம்

இந்துக்களால் ஆற்றப்படும் கிரியைகளில் சிரார்த்தக் கிரியைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இறந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிள்ளைகள் மற்றும் உறவினர்களால் ஆற்றப்படுகின்ற இச் சிரார்த்தக் கிரியைகளில் சிறப்புக்குரியதாக 'மஹாளயம்' கைக்கொள்ளப்படுகின்றது. மற்றைய சிரார்த்தக் கிரியைகள் யாவும் குறிப்பிட்ட ஒருவரை மட்டும் நினைத்து ஆற்றப்படுபனவாகும். ஆனால் மஹாளய சிரார்த்தமானது ஒருவரால் தனது தாய் அல்லது தந்தை அல்லது உறவினர் என்று மட்டுமல்லாது எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள், அனாதரவானவர்கள் என இறந்த தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அனைவரதும் ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆற்றப்படுவதே இதன் சிறப்பு அம்சமாகும். யுத்தத்தினால் மரணம் அடைந்த மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது இல்லங்களில் இம்முறை மஹாளய சிரார்த்தக் கிரியை செய்து காருண்ய பிண்டம் வைக்கும்போது யுத்தத்தினால் மரணம் அடைந்த மக்களை மனதில் இருத்தி ஒரு பிண்டத்தினை வைத்தும் அவர்களின் பெயரால் தர்ப்பணம் (எள்ளும் தண்ணீரும்) செய்தும் வழிபாடியற்றல் இந்து தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய மேலான கடமையாகும். அத்துடன் இந்த நாள்களில் ஆலயங்களிலும் விஷேட ஆத்ம சாந்தி வழிபாடுகளில் ஈடுபட்டு சிவகதிக்காக எமக்கு கிரியைகள் ஆற்ற எவரும் இல்லையே என ஏங்கும் இறந்த அம் மக்களுக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டு அவர்களின் ஆன்மாவை அமைதியுறச் செய்வோம்.

இந்த மஹாளய சிரார்த்தம் இன்று (24.09.2010) வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகி 07.10.2010 வியாழக்கிழமையன்று நிறைவடைகின்றது. இக்காலத்தில் தவறாது யுத்தத்தினால் மரணம் அடைந்த எம் மக்களின் மோட்சத்திற்காகவும் காலமான தங்களுடைய தாய், தந்தையர்களது மோட்சத்திற்காகவும் பிரார்த்தனை செய்யுமாறு சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் கேட்டுக் கொண்டுள்ளார். (த)


## மரண அறிவித்தல்

### தங்கராசா சத்தியகுமார்



யா/ஞானாசாரியார் கல்லூரி வீதி, துன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், தாமரைக்குளத்தடி, துன்னாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சத்தியகுமார் 22.09.2010 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா-பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மகனும் அருள்நிதியின் அன்புக் கணவரும் அகிலன், ஆதவன், அனுசன்,ஆத்மன், அரணீதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் ஜெயக்குமார் மற்றும் உதயகுமார் (ஜேர்மனி), அமரர் விஜயகுமார் மற்றும் ஜெயமலர் (கனடா), ஜெயவதனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமரைக்குளத்தடி,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(சி/570692)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னப்பொடியன் இரத்தினம்

**(உரிமையாளர்- S.R கட்டட ஒப்பந்த நிறுவனம்- கைதடி)**

கைதடி வடக்கைச் சேர்ந்த பிரபல கட்டட ஒப்பந்தகாரர் சின்னப்பொடியன் இரத்தினம் நேற்று (23.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன்- முதலியம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் பூரணத்தின் அன்புக் கணவரும் லனிதா, ஜெசிநாத் ஆகியோரின் அருமைத் தந்தையும் சி.மதியழகனின் (ஆசிரியர்- கைதடி குருசாமி வித்தியாசாலை) பாசமிகு மாமனும் கிருஷிகன், கேசிகன் ஆகியோரின் பிரியமிகு பேரனும் தங்கத்துரை (பிரான்ஸ்), கிருஷ்ணன், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் கனகா (பெல்ஜியம்), கந்தையா (உரிமையாளர்- லவன் ஸ்ரோர், நவபுரம்), இராசமணி, காலஞ்சென்ற செல்வவதி (கிளி) மற்றும் சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் இனிய சகோதரனும் நாகர்- சீதேவி தம்பதியரின் அருமை மருமகனும் செல்லப்பா (உரிமையாளர்- செல்லப்பா களஞ்சியம், கைதடி), காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), வாமதேவன் (பிரான்ஸ்), இரத்தினம் (சுவிஸ்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), க.நாகராசா, க.தங்கராசா, ச.தம்பிராசா (இல.மின்சார சபை), சிவலிங்கம் (உரிமையாளர்- லிங்கம் ஸ்ரோர், நவபுரம்), கனகமணி, மரியரத்தினம், சிவரஞ்சனாதேவி (அரியம்), பிரபா (சூட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.09.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 5 மணியளவில் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.
021 300 8736
021 300 8802

(1/570695)

தகவல்:
குடும்பத்தினர்.
ஜெசி- 0776905861.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

வடமராட்சி, செப்.24

வடமராட்சி, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு மாயவனின் அருள் பெற்றுச் சென்றனர்.

நேற்றுப் பிற்பகல் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பிற்பகல் 3.15 மணியளவில் சுவாமி கற்கோவளத்தில் உள்ள வங்காளவிரிகுடா சமுத்திரத்திற்கு எழுந்தருளினார்.

அங்குள்ள சிற்றாலயத்தில் நடைபெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து சங்கு சக்கரம் கொண்ட மூர்த்தி, பிள்ளையார் , மகாலட்சுமி அமர்ந்திருக்க அனுமான், சக்கரத்துடன் கடலுக்குச் சென்று புனித நீராடி கரையேறினார்.

இந்தப் புனித நீராட்டத்தின் போது நூற்றுக்கணக்கான படகுகள் மூலம் கடல் ஓட்டிகள் சாகசங்கள் புரிந்தனர். புனித நீராட்டம் நிறைவுற்று மாலை 6 மணிக்கு சுவாமி ஆலயம் திரும்பினார்.

இதேவேளை, புனித நீராட்டத்தின் போது கடற்கரையில் ஒரு பெண்மணியின் தாலிக்கொடி அறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ - 236)

# விலைப்பட்டியல் வைக்காத வர்த்தகர்களுக்கு ரூ 7,500 தண்டம்

யாழ்ப்பாணம், செப். 24

வர்த்தக நிலையத்தில் பொருள்களின் விலைப்பட்டியலைக் காட்சிக்கு வைக்காத வர்த்தகர் ஒருவருக்கும் குளிர்பானங்களை அதிகூடிய விற்பனை விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்கள் இருவருக்கும் யாழ். நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையினர் கடந்த வாரம் திடீர்ச் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது கே.கே.எஸ் வீதியில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்தில் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படாதிருந்தமை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இரு கடைகளில் குளிர்பானங்கள் அதிகூடிய விலையில் விற்பனை செய்யப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்று வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவும் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாதவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தார். குளிர்பானத்தை அதிகூடிய விலையில் விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் மற்றுமொரு வர்த்தகருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தார். (9)


## பகுதிநேர ஆசிரியர்கள் தேவை

பரதநாட்டியம், சங்கீதம், மிருதங்கம், வயலின், கிற்றார் போன்றவை கற்பிக்க பகுதி நேர ஆசிரியர்கள் தேவை.

தொடர்பு: 0776646357

நேரம் - காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 75% Real Offer இல் மேலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Real Offer 75% for All

நேரடிக் கட்டணக்கழிவு

DIPLOMA IN PC APPLICATION
DIPLOMA IN MICROSOFT OFFICE
ADV. DIP. IN HARDWARE & NETWORKING
DIPLOMA IN PRE-PRESS DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN WEB PAGE DESIGNING AND DEVELOPMENT
TALLY FINANCIAL ACCOUNTING TRAINING
DIP. IN VIDEO PRODUCTION AND MULTIMEDIA
MASTERS DIPLOMA IN DIGITAL ANIMATION

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English பயிற்சிமையம்

veta® Experts in English Training
An ISO 9001:2000 Company

veta புதிய பிரிவுகள் ஆரம்பம்.
25/9/2010 8.30 a.m. & 10.00 a.m.
27/9/2010 7.30 a.m. & 10.30 a.m.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
25/9/2010 9.00 a.m.& 11.00 a.m.
27/9/2010 9.00 a.m. & 3.00 p.m.

முழுமையானதும் தரமானதுமான கணனிக்கல்வி.

IAB

அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்பாணம். Tel.: 021-222 4403 | M. M. V. வீதி, நெல்லியடி. Tel. : 021-320 7700


## அனுதாப அஞ்சலி



கைதடி கயற்றசிட்டி அருள்மிகு
கந்தசுவாமி தேவஸ்தான பரிபாலன
சபையின் முன்னாள் உபதலைவர்
சின்னப்பொடி இரத்தினம் அவர்கள்
எமது ஆலய வளர்ச்சிக்காக
அரும்பெரும் தொண்டு ஆற்றிய
பெரியார்களில் ஒருவராவார் .
'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'
என்னும் வள்ளுவப் பெருந்தகையின்
குறளுக்கு அமைய தன் செயலை
நெறிப்படுத்திய உத்தமரின் பிரிவால்
துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு கந்தவேல்
பெருமானின் தொண்டு பெரிதென நினைந்து
தன்னாலான பணிகளைச் செய்த

### அமரர் சின்னப்பொடி இரத்தினம்

அவர்களின் ஆன்மா சாந்திபெற்று மேல்நிலையில் வாழவேண்டுமென நினைந்து கந்தவேல் பெருமானின் பாதத்தை வருடி பிரார்த்தனை செய்வோமாக.

கைதடி வடக்கு,
கைதடி. (சி/570698) பரிபாலனசபை.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி கிட்ணலிங்கம்



முல்லையடி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிட்ணலிங்கம் 20.09.2010 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும் லீலாவதியின் அன்புக் கணவரும் கிருஸ்ணியின் அன்புத் தந்தையும் கனகலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2010) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முல்லையடி,
பண்டத்தரிப்பு. (சி/570698) தகவல்: சகோதரர்கள்.


## பொருளியல்

Personal and Group Classes
T.P. :- 0777965673 A.ATHAN

## தேவை

டுபாயில் இயங்கிக்கொண்டிருக்கும் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றுக்கு முதலீடு செய்யக்கூடிய பங்காளி (Partner) ஒருவர் தேவை.
Family Visa ஒழுங்குகள் செய்துதரப்படும்.
தொடர்பு : 0729992984


## தவறிவிட்டது

வாதரவத்தை புத்தூர் என்னும் முகவரியுடைய திருச்சிற்றம்பலம் கேசவரூபன் என்பவரது. தே.அ.அ (753660780 V) சாரதி அனுமதிப் பத்திரம், தொழில் அ.அ., மோட்டார் சைக்கிள்வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன மணி பேர்ஸுடன் கிளிநொச்சி மக்கள் வங்கிக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும் அல்லது 0779179430, 0774336958 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.


## துரித கதியில் லீசிங்

*புதிய அல்லது பழைய முச்சக்கர வண்டி கொள்வனவு செய்ய பணம் தேவையா? வாகனத்தின் புத்தகத்தை மட்டும் கொண்டு வரவும். ஒரு மணித்தியாலத்தில் உங்கள் கையில் பணம்.*

கலுதொட்ட - கிருஷாந்தன்,
பினான்ஸ், 0777696991
யாழ்ப்பாணம். 0770638705

## கிறீன் காட் வீசா

அமெரிக்கா கிறீன் காட் லொத்தர் வீசா விண்ணப்பப்படிவங்களை இலவசமாக பெற்றுகொள்ள Rs. 15/= முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதிய கடித உறையை அனுப்ப வேண்டிய முகவரி

" INTERNET" Bristol
Cyber Cafe No.8/3/4, Bristol Street,
Colombo- 01
Tel : 2393919 , 0774276579

பதிவு இல : 44843


## தவறிவிட்டது

அம்பன், குடத்தனையைச் சேர்ந்த விவேகானந்தன் விமல் என்பவரது தே.அ.அட்டை (832603830 V) யாழ். நகருக்கும் பருத்தித்துறை நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியிலோ அல்லது கஜானன் பன்முகசேவை, மீசாலை என்னும் முகவரியிலோ ஒப்படைக்கவும். அல்லது 0773593124 எனும் இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## துரியகதியில் லீசிங்

இலங்கையிலேயே மிகக்குறைந்த வட்டியை வழங்கும். கலுதொட்ட பினான்ஸ் உங்கள் அருகில் நீங்கள் கொள்வனவு செய்ய விரும்பும் வாகனத்திற்கு ஒரு மணித்தியாலத்துக்குள் உங்கள் கையில் பணம், வாகன தரநிர்ணயம் தேவையில்லை. பிணையாளி தேவையில்லை. தேவையாயின் வீட்டுக்கு வந்து சேவையை வழங்குவோம். எமது சேவையை நீங்கள் விரும்பினால். மகிழ்ச்சியுடன் வர வேற்கின்றோம்.

88, ஆஸ்பத்தரி வீதி,
மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

0770638705,
0777696991.

(103724)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவரும் சங்கானை தொழிற்சங்க கிளையின்
தலைவருமாகிய பொ. நாதா அவர்களின் அன்பு மனைவி

### திருமதி நாதா திலகவதி

(நிற்சாமம், சங்கானை)

அவர்கள் 22.09.2010 அன்று மரணமடைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்

சங்கானை ப.நோ. கூ. சங்க பணியாளர்,
சிக்கன சேமிப்பு கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்(வது)

(சி/570699)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் தந்தது 17 - 05 - 1989



விண் பறித்தது 24 - 09 - 2008

### அமரர் தவராசா ரகுவரன்

*இருண்டு வாழ்வை கழித்து*
*இரண்டு வருடமானதடா*
*முரண்டு பிடித்த உன் வாழ்நினைவுகள்*
*திரண்டு எம்மைத் தாக்குதடா*
*வெடித்துவிட்ட நிலை கண்டிருந்தால்*
*இருந்திருப்பாய் எம்முடன்*
*மண்ணுக்கு நீ பாரமென்றால்*
*கண்ணுக்குள் பார்த்திருப்போமடா*
*ஏனடா ரகு*
*உன் விடயத்தில்*
*தோற்றுக் கொண்டே இருக்கிறோம்.*

*பாடசாலை வீதி,*
*இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி* குடும்பத்தினர்.

(103713)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா நவரட்ணம்



*(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி)*

கந்தரோடை, தம்மளையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாக வும் கொண்ட செல்லையா நவரட்ணம் அவர்கள் நேற்றுமுன்தினம் (22.09.2010) புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன் னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கரம்பொனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் சிவகாந்தன், அஜந்தா, ஜெயந்தி, காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் சுகந்தி, விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இராஜதுரை, இராஜரட்ணம், மார்க்கண்டு மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.09.2010 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகம் - மங்கையர்க்கரசி (பபேதி)
தம்மளை, கந்தரோடை,
தொ.பே.: 0212240971

தொ.பே.:
001905950873 (கனடா),
(103711)

### குலசேகரம் பாலேந்திரம்



*(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோத்தர்)*

தாமரைக் குளத்தடி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் புற்றளை, புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் பாலேந்திரம் நேற்று (23.09.2010) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குலசேகரம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அகலிகா, அகலீதரன், அகிலன், ஆரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேஸ்குமாரின் அன்பு மாமனும் சஞ்ஜேனின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.
(0779867794)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

## பதவி வெற்றிடம்

### கிராமிய வங்கி முகாமையாளர் 205 / 11

சம்பள அளவுத்திட்டம் (கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 205/11 ஆவது சம்பளக் குறியீடு) 10450 - 12550 / 110x10 - 110x10

1. வயது :- 18-45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
2. பிணை : - தெரிவு செய்யப்படும் இடத்து சங்கத்தினால் கோரப் படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றினை செலுத் தத் தயாராக இருத்தல் வேண்டும்.
3. கணனி அறிவு முக்கியமானதாகக் கொள்ளப்படும்.

**தகைமைகள் :**

அ: கூட்டுறவுப்பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கித் துறையில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13 ஆவது சம்பளத் திட்டத்தில் அதே துறையில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

ஆ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தரச் சான்றிதழுடன் கிராமியவங்கி எழுதுநர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறை :**

இப்பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிராமிய வங்கி முகாமையாளர்" பதவிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம் எனும் முகவரியிட்டு 2010.10.07 ஆம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் ஆயின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

2010.09.24 பொதுமுகாமையாளர்.



தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

## பதவி வெற்றிடம்

### பதவி :- கணக்காளர் 104/08

சம்பள அளவுத்திட்டம் (கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 104/08 ஆவது சம்பளக் குறியீடு) 11200 - 14100 / 140x10 - 150x10

* வயது :18-45 வரை (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
* பிணை : தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப் படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற் றைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
* கணனி அறிவு முக்கியமானதாகக் கருதப்படும்.

**தகைமைகள் :**

அ. கூட்டுறவுப்பணியாளருக்கான 9 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/உள்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளருக்கான 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/ உள்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. பட்டயக்கணக்கறிஞர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Licentiate Examination) அல்லது கிரய முகாமைத்துவக் கணக்கறிஞர் நிறுவனத்தின் Professional Part - I, பரீட்சையில் சித்தி அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமை அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றிவ் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறை :**

இப்பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்திச் சான்றிதழ்களின் பிரதி களுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு பொதுமுகாமையா ளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச்சங்கம், பருத்தித் துறை வீதி, கொடிகாமம் எனும் முகவரியிட்டு 07.10.2010 ஆம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் சங்கத்தினூடாகவே விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்.

2010.09.24 பொதுமுகாமையாளர்.

(சி/571301)


## சி.டி.எம்.ஏ. பரிவர்த்தனை கோபுரம் வல்வெட்டியில்

யாழ்ப்பாணம், செப். 24

வல்வெட்டியில் ஸ்ரீலங்கா ரெலிக் கொம்மின் சி.டி.எம்.ஏ. பரிவர்த்தனை கோபு ரம் கடந்தவாரம் முதல் தொழிற்படத் தொடங்கியிருப்பதாக ரெலிக்கொம் முகா மையாளர் எஸ்.சிவானந்தன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் வல்வெட்டித் துறையை அண்டிய பிரதேசங்களில் தொலைத்தொடர்பு சமிஞ்ஞைகள் இல் லாத காரணத்தினால் மக்கள் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதைத் தொடர்ந்தே இந்த தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டுள் ளது. இதன் மூலம் தற்போது இப்பிரதேசத் தில் சமிஞ்ஞைகள் தெளிவாக இருப்பதாக வும் அவர் மேலும் தெரிவித்தார். (த-15)

## சனி, ஞாயிறு தினங்களில் சில இடங்களில் மின்தடை

யாழ்ப்பாணம், செப். 24

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிர தான வீதி அகலமாக்கும் பணிக்காக நாளை சனிக்கிழமையும் நாளை மறு தினமும் சில இடங்களில் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின் தடை அமுலில் இருக்குமென யாழ். பிர தேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் நாளை சனிக்கிழமை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத் தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக் காடு, வடமராட்சி பிரதேசங்களிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை குருநகர், நாவாந்துறை, கொட்டடி, யாழ்ப் பாணப் பட்டணப்பகுதி ஆகிய இடங்களி லும் மின்தடை அமுலில் இருக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கணனிப்பயிற்சிக்கு விண்ணப்பிக்காதோருக்கு

யாழ்ப்பாணம், செப். 24

ஐ.சி.டி.எல். கணனிப்பயிற்சியை இது வரை பெறாத யாழ்.கல்விவலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் தமது பதிவுகளை வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப்பிரிவில், தகவல் தொழில் நுட்ப இணைப்பாளரிடம் பதிவு செய்யும் படி வலயக் கல்விப் பணியாளர் கேட்டு ள்ளார். (ஐ-10)

## சமூக விஞ்ஞானத்துறை தெரிவுப்பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், செப். 24

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தின் சமூக கற்கைகள் துறையினரால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறி, கலைமாணி ஆகிய கற்கை நெறிகளுக் கான அனுமதித் தெரிவுப்பரீட்சை நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறும்.

இக்கற்கை நெறி களுக்கு விண்ணப் பித்த அனைத்து மாணவர்களையும் பரீட்சையில் கலந்து கொள் ளுமாறு யாழ். பிராந் திய நிலைய இணைப்பாளர் கேட் டுள்ளார். (ஐ)


ஆங்கிலம்- அடிப்படை இலக்கணம் முதல் உயர்மட்டம் வரைகற்றுத்தேளிவுபேற

## யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

**GCE A/L -** பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு- பரீட்சைப் பெறுபேறுகள் கிடைப்பதற்கிடையிலான ஆங்கில பாடநெறியும் பயிற்சி நெறியும்.

**GCE O/L -** பரீட்சையில்- ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி (அல்லது- சமஅறிவு) உள்ள எவருக்கும் அனுமதி உண்டு.

**English -** Communication- Grammar- Vocabulary- Text Creation- Lingual Training என யாவும் அடங்கிய பாடநெறிகள்.

**JELA -** 100 மணிநேர அதி அற்புத பாடநெறி - சொல்லாக்கம், சொற்றொடர்கள், வசனவாக்கம், உச்சரிப்பு நுணுக்கம், உரையாடல் நுணுக்கம் - யாவும் அடங்கியது.

**PEARL 40 -** 40 மணிநேர வாய்மொழிமூல பயிற்சி நெறியும், நடைமுறைப் பயிற்சியும் GCE A/L பரீட்சையில் ஆங்கிலப்பாடத்தில் 'C' சித்தி(அல்லதுசமஅறிவு) OR JELA பாடநெறியில் 50% ற்கு குறையாத பங்குபற்றல் உள்ள- எந்த மாணவர்க்கும் பொருத்தமானது.

**Spoken English -** விரிவுரையாளர் அன்ரன் ஆனந்தனின் நேரடிவழிநடத்தலின் கீழ்- அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களால் 40 மணிநேர பயிற்சி.

★ **பயிற்றுநர்-** அன்ரன் ஆனந்தன்- கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, குருநாகல் பிரபல விரிவுரையாளரும் முற்றும் புதுமையான தன் போதனா கலையால் உயர்கல்வித்துறையினர் மற்றும் புத்திஜீவிகள் யாவரதும் உன்னத பாராட்டைப் பெற்றவரும் 39 வருட துறைசார் அனுபவம் பெற்றவரும்.

★ **மண்டபம்-** யாழ். போதனா வைத்தியசாலை அருகாமை

★ **இலவசம்-** பாடநெறி அறிமுக விளக்கம் October 3ஆம் அல்லது 4ஆம் திகதிகளில் காலை 9மணி-12மணிவரை அதன்பின் விரும்புவோர் மட்டும் பகுதிக்கட்டணத்தைச் செலுத்தி மாணவ அனுமதியைப் பெறலாம்.

**தொடர்பு: பதிவாளர்- சுரேஷ்- 0774593043, 0716109729**

முதல்பிரிவு இறுதித்திகதி : 30.09.2010

அக்டோபர் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி பெறுவோருக்கு 25% கட்டணக்கழிவு.



Council of Non Governmental Organizations
Jaffna District

## VACANCY

To carry out the task of Data Base, the Council invites application from suitable persons.

**Post Title :-** Data Base Officer

**Educational Qualifications**

G.C.E.(A/L) with Diploma certificate in I.T or equivalent in I.T.

**Desired Experience**

Data collection, Data entry and analysis preferably in humanitarian field. Ability to input data in English and Tamil.

**Expected Skills**

Good knowledge of English. High level Computer Literacy and speed with accuracy in data input. Ability to work independently with minimum supervision. Ability to travel and work long hours if necessary. Basic knowledge in hardware and computer maintenance with networking internet and E-mail is an advantage.

Possession of motor bicycle with valid licence to ride,

**Salary :** Negotiable

**How to Apply**

To apply please send your CV by post to the following address or hand it over at the office on or before 30.09.2010.

Applicants should be under 40 years of age.

**President,**
**Council of Non governmental Organizations, Jaffna District**
**No 40, Temple Road, Jaffna.**

(c/571303)







# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
17.11.1941

உதிர்வு:
05.10.2009

திதி: பிரதமை 24.09.2010

## அமரர் மருதப்பு கனகரத்தினம்

அப்பா
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இன்று வருவீர்கள் நாளை வருவீர்கள்
என்று நினைத்தே
ஓராண்டு கழிந்ததுவே அப்பா
உங்கள் உருவம்தான் மறைந்தது
உங்கள் அழகான புன்சிரிப்பு முகம் மறையவில்லை
உங்களை இழந்த துயரில் கதறுகின்றோம்
ஏன் அப்பா எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்வோம்

மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளை.

நவாலி வடக்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி வல்லிபுர ஆழ்வாருக்கு நேற்று சமுத்திர தீர்த்தத் திருவிழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. தீர்தமாடுவதற்காக சங்கு சங்கரம் கொண்ட மூர்த்தி பிள்ளையார் மஹாலட்சுமி ஆகியோர் தீர்தமாடுவதற்காக எழுந்தருளுவதை முதலாவது படத்திலும், அனுமான் சங்கரத்துடன் புனித நீராட கடலுக்குச் செல்வதை இரண்டாவது படத்திலும், தீர்த்தத்திருவிழாவில் கலந்துகொண்ட அடியவர்கள் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

## செல்போனில் பாடல் கேட்ட அண்ணன், தங்கை ரயிலுக்குப் பலி

### ஹுனுப்பிட்டியவில் சம்பவம்

கொழும்பு, செப். 24

கையடக்கத் தொலைபேசிகளின் மூலம் பாடல் இணைப்புக் கருவிகளை காதில் பொருத்தியவாறு ரயில் பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்த அண்ணனும், தங்கையும் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு வந்த ரயிலில் மோதுண்டு பலியாகினர்.

இந்த துயரச் சம்பவம் நேற்று அதிகாலை கொழும்புக்கு அருகில் ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்றது.

தமிழர்களான இவர்கள் இருவரும் மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போது இருவரின் சடலங்களும் ராகம வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## எரிக்சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல்ஸ்டன்பெர்க்கை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய மிகவும் அவசியமானது என்றும், இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் நோர்வே ஆர்வமாக உள்ளது என்றும் நோர்வேப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு அரசியல் தலைவர்களால் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## விசாலமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை மீளக் கட்டியெழுப்பும் திராணியற்றவர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் இந்த அரசு தமிழ் மக்களுக்கு உதவ முன்வந்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. அதேசமயம் அமைக்கப்படும் வீடுகள் எமது மக்களின் கலாசார சூழலுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். அவை சகல வசதிகளுடன் கூடியவைகளாகவும் விசாலமானவைகளாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு அரச அதிபர் இந்தியக் குழுவினரிடம் மேலும் வலியுறுத்தினார். (ஐ 9)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாளிகள் சிலரையும் இந்தியக் குழுவினர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். அத்துடன் சுவிஸ் நாட்டின் நிதி உதவியுடன் மறவன்புலோவில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அடுத்து வரும் மூன்று மாதங்களில் வீடமைப்புத் திட்டம் தொடர்பான களநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஜனவரி மாதமளவில் பணிகள் ஆரம்பிக்கப்படும் என இந்தியக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## உடுவில் மகளிர் கல்லூரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அளவில் இவ்விரு பாடசாலைகளும் முன்னணியில் திகழ்கின்றன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் நேற்றுப் பிற்பகலில்இணையத் தளத்தில் வெளியிடப்பட்டன.

உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தாரணி பாலேந்திரா 187 புள்ளிகளைப்பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை**

118 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இப்பெறுபேறு பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 47 சதவீதமாகும். ஏனைய மாணவர்களும் 71 புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சான்றிதழ் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

வி.அபிநயன் 183 புள்ளி களைப் பொறு மாவட்டத்தில் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

**சென்.ஜோன்ஸ் பொஸ்கோ**

தோற்றிய 185 மாணவர்களில் 110 பேர் சித்தியடைந்துள்ளனர். இது 59.5 சதவீதமாகும். 100 புள்ளிகளுக்கு மேல் 171 பேரும் 70 புள்ளிகளுக்கு மேல் 181 பேரும் பெற்று சான்றிதழ் பெறுகின்றனர். ஜெகதீபிகா ஜெகதீஸ்வரன் 180 புள்ளிகளுடன் மாவட்டத்தில் 9 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் சென்.திரேஸா பெண்கள் பாடசாலை மாணவனான நிசாந் ஹம்சிகன் 175 புள்ளிகளைப் பெற்று முதல் நிலை மாணவனாகத் தெரிவாகியுள்ளார்.

திருவையாறு ம.வி. மாணவி நகுலகுமார் அபிராமி 173 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் நிலைக்கு வந்துள்ளார்.

கிளிநொச்சி ம.வி மாணவியான செபஸ்ரியான் தேனுஜா 172 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஐ)

## வெளியார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் உரையின் முக்கிய சாராம்சம் வருமாறு:-

நிலையான அமைதியைக் கட்டி எழுப்புவதிலும் காயங்களை ஆற்றுவதிலும் பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதிலும் ஒற்றுமையுடன் வாழும் வகையில் முழு நாட்டினது உரிமைகளையும் பாதுகாப்பதிலுமே எமது நாட்டின் ஒட்டுமொத்தக் கவனமும் குவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பித்தலுக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றை நாடு முழுவதும் முழு வீச்சில் செயற்படுத்தி வருகின்றோம். உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களில் 90 சதவீதமானவர்களை அவர்களது சொந்த இடங்களில் எமது அரசு ஏற்கனவே மீளக்குடியமர்த்தி உள்ளது. அந்தப் பிரதேசங்கள் முன்னர் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பூமியாக இருந்தன.

எமது தமிழ்ச் சமூகம் தொடர்பாக எமது நாட்டு எல்லைகளுக்கு வெளியே இருந்து பெருமளவு கரிசனை காட்டப்படுகிறது. இலங்கையில் வாழும் தமிழ்ச் சமூகம் தொடர்பில் சிறிலங்காவைவிட அதிகளவில் இந்தப் புவியில் உள்ள வேறு எந்தவொரு நாடும் கரிசனை செலுத்த முடியாது என்பதை நான் இங்கு தெளிவுபடுத்துகின்றேன்.

தவறாக வழிநடத்தப்பட்டுள்ள சிலருக்கு இங்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பிரிவினை, வெறுப்பு, வன்முறைக்கான ஆயுதமாக நீங்கள் உருவாவதற்கு இடமளியாதீர்கள். அது வெறுப்புணர்வு வேறொரு வடிவத்தில் பிறப்பெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிவிடும். பதிலாக, புதிய எல்லைகளைத் தொடுவதற்கு எமக்கிடையிலான நம்பிக்கையீனங்களைக் களைந்து எமது கரங்களைக் ஒன்றுடன் ஒன்று கோர்த்துக் கொள்வோம்.

**அரசின் பொறுப்புணர்வு வெளிப்பாடு**

கடந்த காலங்களில் ஏற்பட்டவை உள்ளிட்ட காயங்களை ஆற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்களை சிறிலங்கா ஏற்றுக்கொள்கிறது. அதனை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், இந்த ஆண்டு ஆரம்பத்தில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் மூலம் அரசின் பொறுப்புணர்வு முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மீள்கட்டுமானம் மற்றும் சமாதானத்திற்கான பணிகள் யாவும் வெற்றி பெற வேண்டும் எனில் அதற்கான நடவடிக்கைகள் உள்ளிருந்தே உருவாக வேண்டும்.

வரலாறு எமக்கு ஒன்றைக் கற்பித்திருக்கிறது என்றால் அது, வெளியே இருந்து திணிக்கப்படும் எந்தவொரு தீர்வும் மனக்கசப்பை ஏற்படுத்துவதுடன் முற்று முழுதாகத் தோல்வியைக் காணும் என்பதேயாகும்.

எமது பொருளாதாரம் சரியான தடத்தில் செல்வதே அமைதியின் பிரதிபலனைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குப் போதுமானது. நிலையான, நீடித்திருக்கக்கூடிய வளர்ச்சியை நாம் அனுபவித்து வருகின்றோம்.

எமது மண்ணையும் பொருளாதாரத்தையும் நாம் மீளக்கட்டி எழுப்பிவரும் இந்த நேரத்தில் அனைத்துலக சமூகத்தின் ஆதரவைப் பெரிதும் வரவேற்கின்றோம். அனைத்துலக வர்த்தகம், முதலீடுகள், ஆற்றல் மேம்பாடு என்பவற்றின் ஊடாக சிறிலங்காவுடனான உறவுகளை வளர்த்தெடுப்பதில் நடைமுறை யதார்த்தம் சார்ந்த அணுகுமுறைக்கு சர்வதேச சமூகம் தயாராகும் என நாம் உண்மையிலேயே எதிர்பார்க்கிறோம். (அ-உ)

## நல்லிணக்க ஆணைக்குழு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தை நீடிக்கவேண்டியதன் அவசியம் என்ன?

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதன் மூலம் இராணுவத்தினருக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கி, ஜனநாயகத்தை ஒடுக்கி, சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதே அரசின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

ஜனாதிபதிக்கு கூடுதலான அதிகாரமும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலமும் இருப்பதால் ஜனாதிபதி எதிர்க்கட்சியினரை துச்சமாக கருதுகின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகள் அதிகரித்துள்ளன. அரச அதிகாரிகளுக்கு இராணுவம் கட்டளையிடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. ஜனநாயகம், சிவில் நிர்வாகம் ஒழிக்கப்பட்டு சர்வாதிகார ஆட்சி நிலவுகின்றது. இதற்கு துணை போவதற்காகவே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் காலம் காலமாக வாழ்ந்த எம்மக்களின் வீடுகள் அழித்து ஒழிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீடுகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. எமது காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

எமது மக்கள் இருக்க இடமின்றி மரங்களின் கீழும், ஓட்டுக் குடிசைகளிலும் வாழ்கின்றனர். இப்பொழுது பருவ மழை ஆரம்பமாகி உள்ளது. மக்கள் போக்கிடம் இன்றி துன்பப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுகின்றோம் என்று போக்குக் காட்டுகின்றனர். ஆனால், விமோசனம் ஏதும் கிடைக்கவில்லை.

கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை என்ற அரச தரப்பில் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. அங்கு நேரடியாகப் போய் பார்ப்பதற்கு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்தபோதும் சில காரணங்களுக்காக செல்ல முடியாமல் போய்விட்டது.

எனவே, இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் எம்மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இராணுவத்தினால் லொறிகளில் ஏற்றிச்செல்லப்பட்ட தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் பல பெற்றோர் உள்ளனர்.

இராணுவ முகாம் ஒன்றில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 850 பிள்ளைகளைப் பொறுப்பேற்க பெற்றோர்களிடம் கையெழுத்து வாங்கப்பட்டது. ஆனால், இப்பிள்ளைகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இவர்கள் எங்கே இருக்கின்றனர். உயிருடன் இருக்கின்றனரா என்றும் தெரியவில்லை.

மாறாக இராணுவ முகாம்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆயிரம் ஆயிரமாக இராணுவத்தினர் குவிக்கப்படுகின்றனர். இதன் மூலம் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் எமது உடைமைகளையும், எம்மையும் அழித்தவர்கள் இப்போது எமது வளங்களையும் சூறையாட ஆரம்பித்துவிட்டனர்.

காங்கேசன்துறையில் இருந்து பல கோடி ரூபா பெறுமதிமிக்க சுண்ணக்கற்கள் லொறி லொறியாக கடத்தப்படுகின்றன. இதனை செய்வது யார்?

இவ்வாறு கடத்தப்படுவது அரச அதிகாரிகளுக்கும் தெரியாதாம். கடத்துவது யார் என்பது அமைச்சர்களுக்கும் தெரியாது. இப்படி எமது வளங்கள் சூறையாடப்படுவதை உடனடியாக தடுக்கவேண்டும்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களுக்கும் பாதுகாப்பளிக்கும் அவசரகாலச் சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கின்றது.

- இப்படி மாவை சேனாதிராஜா கூறினார்.

## எழிலனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் படையினரிடம் சரணடைந்தனர்.

இவர்களை இராணுவத்தினர் மறைமுகமான இடத்தில் தடுத்து வைத்துள்ளனர் என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக செயற்பட்ட எழிலனின் மனைவி ஆனந்தி சஷிகரன் அண்மையில் சாட்சியமளித்தார்.

இவரின் இக்கருத்து உண்மையா? என்றும் இவர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்றும் இராணுவப் பேச்சாளர் உபய மெதவலவிடம் 'உதயன்' வினவியது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். கொடூர தீவிரவாதத்தை இல்லாதொழித்த இராணுவத்தினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கிலேயே இக்கருத்து அமைந் துள்ளது.

சரணடைந்தவர்களை அரசு நன்றாகக் கவனிக்கின்றது. அண்மையில் இப்படியானவர்களில் 500 பேருக்கு அரசு திருமணம் செய்து வைத்தது." இப்படி இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (சி)


## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி இராசலிங்கம் சிவமணிதேவி

கடந்த 08.09.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (24.09.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

681, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் நில அபகரிப்புத் தொடர்ந்தால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம்

## செல்வம் எம்.பி. அரசுக்கு எச்சரிக்கை



கொழும்பு,செப்.24

வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டால் அந்தத் தமிழ் மக்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் என்று கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மழை காலம் தொடங்குகிறது. அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் இருக்கும் எமது மக்கள் மீண்டும் அகதிகளாகும் நிலைதான் ஏற்படும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அவர்கள் ஒதுங்குவதற்கு பாடசாலைகளோ கோவில்களோ இல்லை. அவை அழிந்துவிட்டன.

இந்த அவசரகாலச்சட்டத்தால் எமது விவசாயிகள் பெரும் துன்பத்தை எதிர்நோக்குகின்றனர். தமது உற்பத்திகளை நல்ல நிலையில் விற்கமுடியாத நிலையில் உள்ளனர். தாலிக்கொடி, ஆடு, மாடு போன்றவற்றை அடகுவைத்து விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் நெல்லின் விலை குறைந்துள்ளதால் அந்தப் பொருள்களை மீட்க முடியாமல் உள்ளனர். நெல்லை வீட்டுக்குள் வைத்துக்கொண்டு விலை ஏறும் வரை காத்திருக்கின்றனர்.

பாஸ் நடைமுறையினால் எமது மீனவர்கள் இன்னும் துன்பத்தை எதிர்நோக்குகின்றனர். பயங்கரவாதம் முடிந்துவிட்டது என்று சொல்கிறீர்கள். அப்படி என்றால் ஏன் இந்த பாஸ் முறையை நடைமுறையில் வைத்துள்ளீர்?

அகதி முகாம்களில் நடமாடும் சுகாதார சேவை இல்லை. மழை காலத்தில் அகதி முகாம்களில் பாம்புகள் வருகின்றன என்று அகதிகள் கூறுகின்றனர். இரவு நேரங்களில் பாம்பு கடித்தால் சிகிச்சைக்கு எங்கும் செல்லமுடியாது.

தொழில் வழங்கலில் எமது பகுதி மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. விகிதாசாரப்படி தொழில் வழங்கப்பட வேண்டும். தகுதியற்றவர்களுக்கு தொழில் வழங்கினால் எமது பிரதேசம் பின்தங்கும். இந்த நிலை தொடர்ந்தால் நாம் கடுமையாக எதிர்ப்போம். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நாம் தயங்க மாட்டோம்.

எமது பகுதிகளில் எமது மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் இதை எதிர்த்து நாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம். - என்றார். (சி)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குகளில் தளர்வுகள் ஏற்படுத்தப்படும் என்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சே சிறந்த வழி என்றும் அவர் தனது பேச்சில் தெரிவித்தார்.

தமது இரண்டாவது பதவிக்காலத்தின் பின்னர் சமாதானத்தை ஏற்படுத்தப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும். மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காத விதத்தில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் அமைப்பு உலக அமைதிக்காக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன் முயற்சிகளை குறைத்து மதிப்பிட முடியாது.

கடந்த ஐந்து வருடங்களுக்குள் நாட்டின் தலா வருமானம் இரண்டு மடங்காகியுள்ளது. இதனை 2016 ஆம் ஆண்டுக்குள் மேலும் இரண்டு மடங்காக்குவதே எமது நோக்கம்.

2014 ஆம் ஆண்டுக்குள் உலகின் பிரபல வியாபார நாடுகள் வரிசையில் இலங்கையை முதல் முப்பது இடங்களுக்குள் கொண்டு வருவேன்.

ஐ.நா. அமைதிப்படைக்கு உதவுவதற்கு இலங்கை இராணுவத்தினர், பொலிஸார் என்நேரமும் தயாராகவே உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட நூற்றாண்டு அபிவிருத்தி இலக்குகளில் பலவற்றை இலங்கை எட்டியுள்ளது. இந்தநிலையில் 66 ஆவது ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தில் பலஸ்தீனமும் பங்குபற்றக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (உ)

## நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகத்துக்கு சீல்

கொழும்பு,செப்.24

யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளிவந்திருந்த நமது ஈழநாடு பத்திரிகையை அச்சிட்ட அலுவலகமான சுரபி அலுவலகம் கடந்த செவ்வாயன்று பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது என்றும், அதன் உரிமையாளரான 62 வயதான சின்னத்துரை குருதேவ் என்பவர் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று கொழும்பிலிருந்து சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குருதேவைக் கைதுசெய்துள்ளனர். அத்துடன் அவரது அச்சகத்திற்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது. (சி)


A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பிரிவு - 4

**Advanced Diploma in Architecture CAD**

(3D Building Drawing Technology)

நீங்களும் நாளை உலகின் Architecture 3D Developer ஆகலாம். A/L பெறுபேறுகளுக்கு முன்பே இணைந்து பயன் பெறலாம். ஆர்வமுள்ள எவரும் கற்க முடியும்.

பதிவுகளை :- 26/09/2010 முன்னர் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS

No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

SCC

பயிற்சி நெறிகள் ஆரம்பம் 25, 27.09.2010

பிரிவு II

விசேட கணனிப் பயிற்சி நெறிகள்

- Dip. In MS Office
- Dip. In Desktop Publishing
- Dip. In Computer Programming
- Dip. In Eng. Drawing & Auto CAD
- Dip. In Computerized Accounting
- Dip. In Data Base Management System
- Dip. In Audio & Video Editing
- Dip. In Visual Basic
- Dip. In Web Designing

Free
- Dip. In Hardware Engineering
- Dip. In Internet e-mail

4000/=

மேலதிக விபரங்களுக்கு

Softview Computer College

43, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170

நாளை ஆரம்பம்

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

பொருளியல்

திரு.N.B.கஜீதரன்

A/L 2011 பிரிவு II இற்கானது

தேர்ச்சி - 03

Model Paper Class (11-12 a.m)

புதிய பாடத்திட்டத்திற்கானது

A/L 2012 தேர்ச்சி - 02

கேள்வி நிரம்பல் கோட்பாடு (12-1 p.m)

(புதிய பாடத்திட்டத்திற்கானது)

ஆரம்பம்: 25.09.2010 சனி



வல்லை மண்ணில் இலவச மருத்துவ முகாம்

வழங்கப்படவுள்ள சேவைகள்

(1) இலவச மருத்துவ ஆலோசனை
(2) இலவச மருந்து விநியோகம்
(3) இலவச இரத்த, சல பரிசோதனைகள்
(4) இலவச ECG சலரோக நோயாளிகளுக்கான இரத்த பரிசோதனை

பிரதம விருந்தினர்

Dr.S.சுதோகுமார் (MBBS)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அழைப்பு:- Dr.B. ஹரிகரன் (MBBS)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

SPH

இடம்:- ஷாம் தனியார் மருத்துவமனை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (கப்பர்மலை சந்திக்கு அருகில்)

காலம்:- நாளை (25.09.2010)

நேரம்:- பி.ப. 3.00 மணி

போட்டிப் பரீட்சை கருத்தரங்கு

அழகியல் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்தல் — சனி, ஞாயிறு, புதன் 2- 5 வரை

S.L.A.S மட்டுப்படுத்தப்பட்டது — ஒவ்வொரு ஞாயிறும் 9.30-2.00 வரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

யாழ். போதனா வைத்தியசாலை எதிரே

25ஆம் திகதி ஆரம்பம்

SPOKEN ENGLISH & BASIC ENGLISH

- A/L - முடித்த மாணவர்களுக்கான விசேட வகுப்பு
- அடிப்படை ஆங்கில அறிவு தேவைப்படுவோருக்கு விசேட வகுப்பு
- Listening, Speaking இற்கு அதிக பயிற்சி

By - R. Guna

DMI Jaffna

IIS

கணனிக்கற்கை நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 24.09.2010 |
| பிரிவு 02 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டணச் சலுகை வழங்கப்படுகின்றது

மேலதிக விபரங்களுக்கு:

இயக்குனர்

IIS , #100, மணிக்கூட்டு வீதி

யாழ்ப்பாணம்

Raveens English Medium Classes Karaveddy

மேற்படி நிறுவனத்திற்குரிய Grade-11 மாணவர்கள் பங்குபெறும்

IMPROMPTU ORATORY (ENGLISH)

முன் ஆயத்தமில்லாப் பேச்சு (ஆங்கிலம்)

குறிப்பு:- சபையோர் வழங்கும் விடயத்தலைப்புகளுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.

இடம்:

யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் - கரவெட்டி

காலம்:

26.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

தலைவர்:

இ.இராகவன் (அதிபர்)

யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் - கரவெட்டி

CHIEF GUEST

Dr.K.SIVARAMAN

MBBS (SL), MD (SL), MRCP (UK)

Consultant Physician

Base Hospital - Point Pedro

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ப.ஈஸ்வரநாதன் (நிர்வாகி).

விழாவை சிறக்க வாழ்த்துவோர்:

MR.CONCRETE

FOR ALL YOUR CONCRETE NEEDS

- CONCRETE BLOCKS
- HOLLOW BLOCKS
- FENCE POSTS
- PAVING STONES

Tel: 021 7222333 www.MR.CONCRETE.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org